ஜநவிநோதிநி.

இல. 7.]　　ஜூலைமீ 1879.　　[புஸ்த. X.

கல்கத்தா நகரம்.

பிரிடிஷ் இந்தியாவின் பிரதானபட்டணமான கல்கத்தாநகரம் சமுத்திரத்திற்கு ஏறக்குறைய நூறுமைல் தூரத்தில் ஹூக்கிலி நதியின் கீழண்டைக்கரையிலிருக்கின்றது. 1698-ஆண்டில் அங்கிலேய வர்த்தகர்கள் முதல்முதல் அந்த நதியண்டையில் மூன்றுகிராமம் விலைக்குவாங்கினார்கள். அவற்றுள் ஒன்றில் சிறந்த காளிகோயில் ஒன்று இருந்ததுபற்றி அது காளிகட்டம் என்று பெயர்பெற்றிருந்தது. அதுகாரணமாகவே அவ்விடத்திற்கட்டிய இந்தப் புதியபட்டணத்திற்கும் காளிகட்டம் அல்லது கல்கத்தா என்று பெயரிடப்பட்டது. முதலில் வர்த்தகச்சரக்குகள் வைப்பதற்குவேண்டிய கிடங்குகள் கட்டப்பட்டன; கோட்டையும் இலேசாய்க் கட்டப்பட்டது. பின்பு 1756-ஆண்டில் வங்காளத்து நபாபு கல்கத்தாவைப் பிடித்துக்கொண்டு இருட்டறை என்று சொல்லப்பட்ட ஒரு கடுஞ்சிறையில் அநேகம் அங்கிலேயர்களைப் பிடித்தடைத்துப் பெருங்கொடுமைசெய்தான். ஆயினும் மகா சூரனான கிளைவ் என்னும் போர்வீரன் அதை உடனே திரும்பிப் பிடித்துக்கொண்டு, அவ்விடத்து வில்லியம் என்னும் கோட்டையை மிகவும் உறுதியாகவும் பெரிதாகவும் கட்டுவித்தான்.

கல்கத்தாவுக்குச் சுற்றிலுமுள்ளவிடங்களெல்லாம் மிக்க வளப்பமுள்ள சதுப்புநிலங்கள். அவற்றின் பெருமைக்காகவே அவ்விடம் சிறந்ததென்று தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த நதி அவ்விடத்தில் அரைமைல் அகலமும், பெரிய கப்பல்கள் ஓடுவதற்குப் போதுமான ஆழமுமுள்ளது. வங்காளநாட்டுப் பலவிதமான விளைவுகளும் அங்கங்கிருந்து கங்காநதியின் வழியாகவே படகு

களிலே கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. கல்கத்தாவுக்குச் சமீபத்தில் ஆற்றிலே நிறுத்தப்பட்ட கப்பல்களின் பாய்மரங்களைப் பார்த்தால் ஒரு பெருங்காடுபோலத்தோன்றும்; கப்பல்களும் படகுகளும் ஓயாமல் நாலாமூலையிலும் ஓடிக்கொண்டேயிருக்கின்றன.

கல்கத்தாநகரம் இரண்டுமைல் அகலமுள்ளதாய் ஹூக்கிலி நதியின் கரையோரமாயே ஏழுமைல்தூரம் நீண்டு, வடபாதியும் தென்பாதியுமாய் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வடபாகமெல்லாம் சுதேசிகள் குடியிருக்குமிடம். அவ்விடத்துத் தெருக்களெல்லாம் வெகு நெருக்கமாய்க் குடிகளடர்ந்து மிகவும் அற்பமான வீடுகளுள்ளவைகளாயிருக்கின்றன. தென்பாதியில் ஐரோப்பியர் வசிக்கிறார்கள். அங்கே தெருக்களெல்லாம் அதிக விசாலமாயும் பெருத்த வீடுகளுள்ளவைகளாயுமிருக்கின்றன. அதன்மேலண்டையில் முன் சிறிய உபநகரம்போலிருந்த இடமெல்லாம் இப்போது குறுக்கும் நெடுக்கும் கோணலும் நெருக்கமுமாய்ப் பல தெருக்களும், தட்டோடு வீடுகளும் கூரைக்குடிசையான கடைத்தெருக்களும் இடையிடையே பாபுக்களென்னப்பட்ட அத்தேசத்துக் கனவான்களுடைய வீடுகளுமாகப் பெரிய பட்டணமாயிருக்கின்றன. ஆற்றோரத்தில் கோட்டைக்கும் பட்டணத்திற்கும் நடுவே வெகு விசாலமான மைதானமொன்று உண்டு. அந்த வெளியின் வடபுறத்தில் கவர்னர்ஜனராலுடைய மாளிகையும், நகரசபாமண்டபமும், இன்னுஞ் சில நேர்த்தியான விடுதிகளும் இருக்கின்றன. அவ்விடத்திலிருந்து பார்த்தால், ருஷியாதேசத்துப் பீடர்ஸ்பர்க் என்னும் பட்டணத்து ஓர் பாகம்போலிருக்கிறதென்று ஐரோப்பியர் வர்ணிக்கிறார்கள். நகரசபாமண்டபம் மிகப் பெரிதென்பதொன்றேயொழிய மற்றப்படி அதிசயமானதன்று. அரண்மனையோ மூன்றடுக்குமெத்தையும் மத்தியில் ஒரு சிறந்த விசாலமான கூடமுமாக வெகு அழகாயிருக்கின்றது. ஆயினும் அடுக்குகள் மிகவும் எடுப்பாயிராமல் தாழ்வாய்ப் பலகணிவாயில்கள் நிறைந்திருக்கின்றன. அந்த நகரத்தைச்சுற்றி விசாலமான பேட்டைகளும் தோட்டங்களும் அநேகமிருக்கின்றன. அங்கேதான் தனிகர்களான பல பிரபுக்கள் வசிக்கிறார்கள். முப்பத்தைந்து வருஷத்துக்குமுன் இருந்த இப்பட்டணத்துக் காட்சியும் அக்காலத்து நடையுடைபாவனைகளும் அநேகர்களுக்குத் தெரிந்திராவாதலால் அவை ஒருவாறு விளங்கும்பொருட்டு அவற்றின் காட்சிப்படத்தை இச் சஞ்சிகையுடன் சேர்த்தனுப்பியிருக்கிறோம்.

ஜான் ஹவர்டு என்னும் பரோபகாரி.

நீடூழிகாலம் நிலைநிற்கத்தக்க பெரும்புகழ்பெற்ற பரோபகாரிகளுள் ஜான் ஹவர்டு என்பவரும் ஒருவர். அவருடைய புகழ் பரந்தோங்கியது அவர் பிறந்தவிடத்திலேமாத்திரமன்று; இப்பூமண்டலம் முழுதிலுமேதான். அவர்க்குக் குழந்தைப்பருவத்திலேயே தாய் இறந்துபோனாள். பின்பு நன்னடக்கையும் ஈசுவரபக்தியுமுடையவரான அவருடைய தந்தை, நற்குண நற்செய்கையுள்ள ஒருத்தியை அவர்க்குத் தாதியாய் ஏற்படுத்தி, அவளைக்கொண்டு அந்தப் பிள்ளையைச் செம்மையாய் வளர்க்கச்செய்தார். அந்தப் பெண் ஹவர்டினிடத்தில் விசேஷமாய் அன்புபாராட்டிப் பலவகையிலும் ஆதரவாய் அவனை எடுத்து வளர்த்திருக்கவேண்டும். ஆனதுபற்றியே ஹவர்டு தான் பெரியமனிதனானபிறகு, அவளுக்கு ஒரு குறையும் உண்டாகவொட்டாமல் நாள்தோறும் தானே நேராய் அவள் வீட்டுக்குப்போய் யோகக்ஷேமங்களை விசாரணை செய்துவந்ததுமல்லாமல், அவள் இறந்துபோனபோது தன் சொந்தச் செலவினாலேயே விசேஷ வைபவமாய் அவளுக்கு அபரக்கிரியை முதலானவைகளை நடத்தினார். அவர் பிராணிகளிடத்தில் ஈவு இரக்கமுள்ளவர் என்பது அவர் இளமையில் தன் வேலைக்காரர்களை நடத்தின நடக்கையினாலேயே தெளிவாய்த் தெரியவந்தது. தந்தைகாலத்திற்குப்பிறகு அவருடைய ஆஸ்திக்கெல்லாம் தானே யஜமானனாய் ஹவர்டு விசேஷ தனவானான பிறகு, அநேகவருஷகாலமாய்த் தன் தாய்தந்தையர்களுக்குத் தோட்டக்காரனாகிப் பணிவிடைசெய்துவந்த ஒரு கிழவனை மிகவும் பிரீதியாய்க் காப்பாற்றினார். அந்தத் தோட்டம் ஒரு பாதையோரத்தில் சுற்றி மதிலெடுக்கப்பட்டிருந்தது. ரொட்டிவண்டி அவ்வழியாய்ப் போகிறகாலங்களில் ஹவர்டு அந்தப் பாதையில் விநோதமாய் உலாத்திக்கொண்டிருப்பார். ரொட்டிவண்டி அங்கே வந்ததும் சில ரொட்டிகள் வாங்கி அவற்றைத் தோட்டத்திற்குள் எறிந்துவிட்டு, உடனே தானும் அத்தோட்டத்துள் சென்று தோட்டக்காரனைப்பார்த்து, அப்பா! அந்த மூலையில் லைப்பாத்தியிலே பார்; உன் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டம் அகப்படும் என்று நயமாய்ச் சொல்லுவார்.

அவர்க்கு வாய்த்த மனையாட்டியும் அவரைப்போலவே பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணங்களும் ஈசுவரபக்தியும் உடையவளாயிருந்தாள். அவள் வீண்பெருமை ஆடம்பரம் முதலியவற்றில் சிறிதும் விருப்பமற்றவளாய், எளியஜனங்களுடைய குடிசைகளுக்குப் போய்த் தன்னால் கூடியவளவு அவர்களுக்குத் துணை

செய்வதிலேயே நோக்கமுடையவளாய் இருந்தாள். அவர்கள் விசேஷ தனிகர்களாயிருந்ததனால், தம்மைச் சுற்றியிருந்த எளிய பிள்ளைகளுக்குப் படிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்துவது முத லாய்ப் பலவித நன்மையும் செய்யத் திறமையுடையவர்களா யிருந்தார்கள். ஜான் ஹவர்டினுடைய வாழ்நாளில் அவர்க்கு மிகவும் சவுக்கியமானகாலம் இதுதான். அப்படியிருக்கத் திடீரென்று அவருடைய இல்லாள் இறந்துபோகும்படிக் கடவுள் கிருபை பண்ணினர். அந்தநிமிஷத்திலேயே அவர்க்கு இல்வாழ்க்கை யிலுண்டான சுகங்கள் யாவும் ஒழிந்துபோயின.

இப்படி அந்தப் புண்ணியபுருஷருக்குப் பத்தினிவியோகம் நேரிடும்படிக் கடவுள் கட்டளையிட்டதை அநியாயமென்று நாம் நினைக்கலாமோ? கடவுளுடைய கட்டளை எப்படிப்பட்டதானலும் அது உலகத்திற்கெல்லாம் உபகாரமாயிருக்குமெயொழிய மற்றப் படி இராது. ஹவர்டுக்குப் பெண்சாதியைமட்டும் கடவுள் உயி ரோடு வைத்திருப்பாரானல், அவர் தன் வீட்டிலேயே மனையா ளோடுகூடச் சுகமே அமைதியாய்க் காலங்கழித்திருப்பார். அவர்க் கிருந்த ஜீவகாருணியமெல்லாம் உலகத்திற்கு உபயோகப்படாமலே ஒழிந்துபோயிருக்கும்; அவர் தேசாதேசங்களுக்கும் போய் அங்கங் கிருந்த குடிகளுக்கெல்லாம் செய்துவந்த பலவித நன்மைகளும் செ ய்யப்படாமலேயிருக்கும். மனையாட்டி இறந்துபோன துக்கத்தால் அவர்க்குச் சரீரம் மிகவும் அசவுக்கியப்பட்டுப்போனதனல் அது அனுகூலமாகும்பொருட்டு அவர் தேசயாத்திரை செய்யவேண்டுமெ ன்று புறப்பட்டார். திரும்பி இங்கிலாந்துக்குவருகையில், குற்றஞ் செய்தும் கடன்பட்டும் சிறையில் அகப்பட்டுக்கொண்டு பரிதவிப்ப வர்களைப்பார்த்து, சிறையதிகாரிகள் அநியாயமாய்க் கொடுமைசெய் து அவர்களை மிகவும் துன்பப்படுத்துகிறார்களென்று கண்டு, அப்ப டிப்பட்டவர்களை எப்படியாவது விடுவிக்கவேண்டுமென்று ஊக் கங்கொண்டார். அதுமுதல் தன் வாழ்நாள்முழுதும் நல்வழியிலே யே கழிக்கும்படியான சிறந்த ஏற்பாடு ஒன்று அப்பொழுதுதான் அவருடைய மனதில் உதித்தது. அவசியமாய்த் தோன்றி ஏதா வது ஒருகாரியத்தை அவர் செய்யவேண்டுமென்று தீர்மானங் கொள்வாரானல், பின்பு எப்படிப்பட்ட இடையூறு உண்டானலும் அந்த எண்ணம் மாற்றப்படுவதில்லை.

எவ்விதத்திலாயினும் எளியஜனங்களுடைய வருத்தங்களைத் தீர்க்கவேண்டுமென்று சங்கற்பஞ்செய்துகொண்டு ஹவர்டு ஐரோப் பாவிலுள்ள நாநாதேசங்களுக்கும் யாத்திரைசெய்யப் புறப்பட் டார். அந்தக் கோரிக்கையே கடவுளுடைய திருவுள்ளத்திற்கும் உவப்பாயிருந்தது. லோகோபகாரமான அந்தச் சங்கற்பத்தை நிறைவேற்றும்பொருட்டு அவர் சுற்றின நாடுகளுக்குக் கணக்

கில்லே. ஏறக்குறைய ஆறுயிரம்காதவழி சுற்றிவந்தார். அக்காலத்தில் அவர் உழைத்த உழைப்பையும், அவர்க்கு நேர்ந்த அபாயம் நஷ்டம் முதலியவைகளேயும் இவ்வுலகில் எக்காலத்திலும் எவரும் அனுபவித்திருக்கமாட்டார்கள். அப்போது அவர் செய்துவந்த நன்மைகளேயெல்லாம் விரித்துரைக்கப்புகின் வெகுதூரம் வளருமாதலின், அவற்றை எழுத இங்கு இடமேது? ஆயினும் சிறியசெய்தியொன்று சொல்லுகிறேம்: அதனுல் அவர் மிக்கசாந்தமும் பொறுமையும் உடையவரென்றும், எப்படிப்பட்டகாலத்திலும் எள்ளளவும் உண்மையை ஒளிக்கத் துணிவதில்லேயென்றும் தெளிவாய் விளங்கும்.

அவர் ஆஸ்திரியாதேசத்துக்குப் போயிருந்தபோது, அவ்விடத்து அரசன் அவரை மிகவும் கவுரவமாய் வரவழைத்து, அங்கங்கே சிறைச்சாலேகளுடைய செய்தி எப்படியிருக்கிறதென்று கேட்டான். அதுகண்டு அவ்விடத்துப் பெரிய அதிகாரிகள் பலரும் அவரிடத்தில் பெருமைபாராட்டி அவரைக் காணவேண்டுமென்று வந்தார்கள். அப்படி வந்தவர்களோடு ஒரு மாகாணத்துத் தலேவனும் தன் பெண்சாதியுடன் வந்துசேர்ந்தான். அவள் மிகக் கர்வங்கொண்டவள். அவர்கள் ஹவர்டைக் கண்டு, தங்கள் மாகாணத்துச் சிறைகள் எவ்விதமாயிருக்கின்றனவென்று கேட்க, அவர், அவைகளேப்போலக் கேடுகெட்ட சிறை இந்நாட்டிலேயே இல்லே. பெண்பிள்ளேகளுடைய சிறைச்சாலேயின் கேட்டை இப்படிப்பட்டதென்று நான் சொல்லத்துணியேன். இந்தச் சீமாட்டியே நேராய் அச்சிறைக்குப்போய்ப் பார்ப்பதே அவை செம்மைப்படுவதற்குத் தகுந்த வழியென்று என் புத்திக்குத் தோன்றுகின்றது என்ருர். அதைக்கேட்டு அந்தச் சீமாட்டி மிகக்கோபங்கொண்டு, நானு! நானு சிறைக்குப் போகிறதென்றுசொல்லி வெகுவேகமாய்ச் சரேலென்று அவ்விடத்தைவிட்டிறங்கிக் கீழேபோய்விட்டாள். அதுகண்டு ஹவர்டு, இதென்னகோபம்! கீழேவிழுந்து மண்டை உடையப்போகிறதேயென்று திகிற்பட்டாரென்ருலும், அவளேக் கூவி, அம்மா! ஒரு விண்ணப்பம்செய்கிறேன்; மற்றவர்களேப் போல நீரும் ஒரு பெண்பிள்ளேதானே. உன் சிறையில் அகப்பட்டுத் தவிக்கிற பேதைப்பெண்களேப்போலவே நீரும் இப்பூமியில் ஒரு நாலடிக்குழியில் படுக்கப்போகிறவரோ வேருேவென்று கேட்டார்.

இப்படியே ஐரோப்பாகண்டம் முழுமையுமுள்ள சிறைச்சாலேகளேயும் வைத்தியசாலேகளேயும் சுற்றிப் பார்த்துக்கொண்டு பதினேழுவருஷகாலம் யாத்திரைசெய்தார். மேலும் அங்கங்கே தான் கண்ட அதிசயங்களே அப்பப்போதே புத்தகமாக எழுதிப் பிரசித்தஞ்செய்து, அதுவரையில் அந்தச் சங்கதிதெரியாத பல கனவான்களுக்குத் தெரியப்படுத்தினுர். அவர் கண்டபோது அவ்

வவ்விடத்துச் சிறைச்சாலைகளில் ஜனங்கள் அனுபவித்துக்கொண்டிருந்த துன்பங்களை இப்படிப்பட்டதென்று எடுத்துச்சொல்வது கூடாது.

நெடுநாளாய்க் குற்றவாளிகளாகப் பிடிக்கப்பட்டவர்களும் பாபச்செயல் செய்தவர்களாகப் பிடிக்கப்பட்டவர்களுமாகப் பல பேர்களைப் பகற்பொழுதெல்லாம் மிகவும் ஒடுக்கமான ஒரு சிற்றறையில் அடைத்துவைத்து, இரவில் மிகவும் குளிர்ச்சியான ஓரிடத்தில் மேலே எவ்விதமான மறைவுமில்லாமல் கீழே பரப்பிக்கொள்ள வைக்கோலுமில்லாமல் கிடக்கச்செய்வார்கள். சிறையான பெண்களை நடத்துவதும் இவ்விதமே. இரவில் படுக்குமிடங்களில் இரண்டு மூன்று அங்குலம் தண்ணீர்கூடத் தேங்கினாலும் தேங்கும். அவர்களுக்கு அளிக்கின்ற சோறோ வாயில்வைக்க வழங்காததாய், அதுவே கால்வயிற்றிற்குக்கூடப் போதும்போதாததாயிருக்கும். அவ்விடங்களுக்கு விளக்கேற்றுவது கிடைக்கவே கிடையாது. பூமிக்குள் பத்து பதினைந்து அடிகளுக்குக்கீழ் வெட்டப்படுகிற இருட்டறைகளென்னும் சிற்றறைகளுக்கும் அந்தச் சிறைச்சாலைகளுக்கும் சிறிதும் வேற்றுமைகிடையாது. அந்தச் சிறைகளில் அடைபட்டவர்கள் அநேகமாய் நோயாளிகளாகித் தீராவருத்தமுற்றவர்களேயொழியப் பின்பு சுகப்பட்டவரில்லை.

ஹவர்டினுடைய உதாரகுணத்தால் பலவிடங்களிலும் பலவிதமான க்ஷேமங்கள் உண்டாயின. சிறையில் அடைபட்டுத் தவிப்பவர்களுடைய உயிர்கள் அநேகமாய்க் காப்பாற்றப்பட்டன; வருத்தங்களெல்லாம் தீர்க்கப்பட்டன. நோயில் அடிபட்டுத் தவிப்பவர்களுடைய வியாதிகளெல்லாம் வெகுவாய் விலக்கப்பட்டன. இப்படி உலகத்திற்குப் பலவிதமான நன்மைகளை விளைவிப்பதற்காகவே ஹவர்டு தனக்கு இல்வாழ்க்கையில் கிடைக்கத்தக்க இன்பங்கள் யாவற்றிலும் வெறுப்புற்றுச் சீமைசுற்றுவதில் விருப்பங் கொண்டார்.

இவ்விதமாய் ஹவர்டு உலகத்துக்கு நன்மைவி[illegible] காலையில் அந்தப் பரோபகாரிக்கும் பல வருத்தங்கள் நேரிட[illegible] ஒரு கால் வெனிஸ்நகரத்தில் சில நோயாளிகளுக்கு வைத்தியஞ்செய்துகொண்டிருக்கிறகாலத்திலே அவருடைய மகன் பிரஞ்ஞைதப்பிச் சாகக்கிடக்கிறானென்றதாய்க் கடிதமொன்று வந்தது. அவருடைய சிறந்த கோரிக்கைகளுக்கெல்லாம் பெருந்தடையாய் அவருடைய மனப்போக்கை மாற்றுகின்ற துக்கச்செய்தி அதைவிட வேறென்ன? ஆயினும் அதைக்கேட்டு மனஞ்சலியாமல் ஹவர்டு, நாம் கடவுளிடத்தினின்றும் நன்மைகளைமட்டும் எதிர்பார்க்கலாம்; தீமைகள் வந்தால்மட்டும் மனமழிகிறதா என்றுசொல்லித் தைரியமாயே சுதேசத்திற்குப்போனார். அங்கேபோய்ப் பார்த்தபோது

அவர் கடிதத்திற் கண்டசெய்தி உண்மையாகவே இருந்தது. சீக்கிரமே அம்மகன் இறந்துபோனான். அந்தப் புத்திரசோகத்தாலும் அவர் மனஞ்சலியாமல் திடசித்தமாயே மறுபடியும் சீமை சுற்றப்புறப்பட்டார். இதுதான் கடைசியாத்திரை. பின்பு அவர் சுதேசத்திற்குத் திரும்பவேயில்லை.

அந்தத்தடவை 1790-ஆண்டிலே குளிரும் காற்றும் மிகவும் அதிகமாயிருந்த பனிநாளிலே ருஷியாதேசத்துத் தென்முனையிலே ஒரு ஊரில் சில பிணியாளிகளுக்குப் பிணிதீர்த்துக்கொண்டிருந்தகாலத்திலே, அருகாமையில் யாரோ ஒரு சீமாட்டி நோயினால் மிகவும் தொந்தரைப்படுகிறாளென்று வெகு துரிதமாய் வரும்படி அநேகர் வந்து அவரை வேண்டியழைத்தார்கள். அதற்கு அவர், நான் வேறெவ்விதத்திலும் உதவி கிடைக்காத எளியவர்களுக்கு மட்டும் வைத்தியனேயொழிய இப்படிப்பட்ட சீமான்களுக்கல்ல என்றுசொல்லி முதலில் சிறிதும் உடன்படேனென்றார். ஆயினும், அவசியம் தயைசெய்து பார்க்கவேண்டுமென்று அநேகர் வந்து பலவிதமாய்வேண்டி நிர்ப்பந்தஞ்செய்ததனால் அதற்குச் சம்மதித்தார். அவளைப் போய்ப்பார்த்ததும் அவளுடைய நோய்க்கேற்ற சிறந்தஔஷதம் ஒன்றைக் கொடுத்து, இதனால் இந்த நோய் கொஞ்சம் குணப்படுமானால் எனக்கு உடனே செய்திசொல்லியனுப்புங்கள்; குணப்படாமற்போனால் இந்தநோய் அசாத்தியமே என்று சொல்லிவிட்டுப்போயினார். அவர் சொல்லிப்போனபடியே அந்த வியாதி கொஞ்சம் குணப்படவே அவர்கள் உடனே வந்து பார்க்கும்படி ஹவர்டுக்குக் கடிதமெழுதினார்கள். அவளுடைய துர்ப்பாக்கியத்தால் வழியில் ஏதோ பிசகுநேர்ந்து அந்தக் கடிதம் உடனே அவரிடம்சேராமல் எட்டுநாள் தாமதப்பட்டது. எட்டு நாள் கழித்துக் கடிதம் கைக்குவந்தது கண்டு, நாளாய்விட்டதே; இனி நாம் போயும் பயனில்லையே என்றுசொல்லி ஹவர்டு மிகவும் விசனமடைந்தார். போக வண்டியும் அகப்படவில்லை. அப்படியிருந்தும் ஒரு கிழக்குதிரைமேல் ஏறிக்கொண்டு சரமாரியாய்ப் பொழிகிற மழையிலே வெகுவேகமாய் இரண்டாக்காததூரம் சென்றார். ஐயோ! அவ்வளவு வருத்தப்பட்டு அவர் போய்ப் பார்த்தபோது அவளுக்கு உயிர்போகிற தருணமாயிருந்தது; மறுநாள் இறந்துபோனாள். அந்தப் பெருமழையில் அப்படி நனைந்துகொண்டுபோனதும், தான் அவ்வளவு வருத்தப்பட்டும் அவளைப் பிழைப்பிக்கக்கூடாமற்போயிற்றே என்கிற விசனமும், முன் இருந்த புத்திரசோகம் முதலியவைகளும் ஒன்றாய்க்கூடவே நாளடைவில் அவர்க்கு மிகவும் கிலேசமுண்டாகித் தேகசவுக்கியமும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைவுபட ஆரம்பித்தது.

அதற்குப்பிறகு ஹவர்டு நெடுநாள் ஜீவித்திருக்கவில்லை. தான் பிறந்தவிடத்துக்கு எவ்வளவோ காததூரம் அப்பால் உற்றார் உற

வினர் ஒருவரும் அண்டையில் இல்லாதவிடத்திலே பரதேசியாய் இறந்துபோனர். ஆயின் அவர் அவ்விடத்தில் சகாயமில்லாமல் வருந்தினதுண்டோ? அவருடைய நற்குணத்தால் அத்தேசத்தார் அனைவரும் அவர்க்கு நண்பராயிருந்தார்கள். பந்துக்களைவிட மித்திரர்களே மேலானவர்களாதலால், அப்படி உலகத்திற்கெல்லாம் பேருதவிசெய்துவந்த புண்ணியபுருஷன் இறந்துபோகவே அவர்களெல்லாம் கண்ணுங்கண்ணீருமாய் அவர் தனக்கு இஷ்டமாய்த் தேடிவைத்த இடத்திலேயே வெகு வைபவமாய் அவரை அடக்கஞ்செய்தார்கள்.

"ருஷியா தார்த்தாரிதேசத்தில் செர்சன் நகரத்திலே தனக்கு 64-வது வயதான 1790-ஆ ஜனவரி௴ 21உ ஜான் ஹவர்டு பரலோகஞ்சென்றார்"

என்னும் கருத்துள்ள வரிகள் அவரை அடக்கஞ்செய்தவிடத்தில் எழுதப்பட்டன. அது ஹவர்டு தாமே எழுதிவைத்த வாக்கியமேயொழிய வேறன்று.

அந்தப் பரோபகாரியைப்போலவே நாமும் நம்மனதில் பூததயை பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்களைப் பயிர்செய்து, அவைகளைக்கொண்டு நம்மால்கூடியவரையில் உலகத்துக்கு நன்மைவிளைத்து, கடவுளுடைய கருணைகடாக்ஷத்திற்குப் பாத்திரமாகக் கடவோம்.

ஜந்துக்களை நடத்தும்வகை.

இப்பூமண்டலத்தில் கடவுளால் படைக்கப்பட்ட கோடாகோடி பிராணிகளுள் சில நமக்கு இன்றியமையாதவைகளாயிருக்கின்றன. அவையில்லாவிட்டால் நாம் ஜீவிப்பதுகூட வருத்தமே. நமக்கு உண்டியும் உடையும் அளிப்பவை அவைகளே. ஆடுமாடுகள் அப்படிப்பட்டவைகளல்லவா?

வேறுசில பிராணிகளுண்டு. அவை நாம் உயிர்வாழ்க்கைக்காகச் செய்யவேண்டிய பல வியாபாரங்களுக்கும் துணையாய், நாள்தோறும் நமக்காகத் தாமும் உழைத்து நமக்குப் பேருதவி செய்வதுமல்லாமல், வெகுவாய் மனக்களிப்பும் சந்தோஷமும் உண்டாக்குகின்றன. குதிரை கழுதை முதலியவைகளெல்லாம் அப்படிப்பட்டவைகளல்லவா?

இன்னும் சில பிராணிகளுண்டு. அவை எப்போதும் நம்மைவிட்டுப் பிரியாமல் நம்மிடத்தில் மிக்க நன்றியும் நேசமும் பாராட்டிக்கொண்டிருக்கின்றன. நாம் தரித்திரரானாலும் தனிக

ராலும், நோயாளியானும் சரீரசவுக்கியமுடையவரானும், அழகுள்ளவரானும் குரூபியானும், எப்படியிருந்தாலும் அவற்றிற்கு நம்மிடத்தில் நேசம் மாறுவதில்லை. மனிதர்கள் நம்மைத் துறந்தாலும் அவை நம்மைத் துறப்பதில்லை. நாம் இருக்குமிடம் ஒரு கூரைக்குடிசையானும், ஒரு சிறந்த ராஜமாளிகையாயிருந்தால் எப்படியோ, அவ்வளவு ஆவலாய் அவை நம்முடனே அவ்விடத்திற்கு ஓடிவருகின்றன. நாய்முதலியவை அப்படிப் பட்டவையாம்.

நமது வீட்டில் நம்மோடுகூடவே குடியிருந்து எப்போதும் நமக்குச் சவுக்கியமும் சந்தோஷமுமுண்டாக்கிக்கொண்டு சில பிராணிகள் இருக்கின்றன. பூனை முதலியவை அப்படிப்பட்டவைகளல்லவா?

இப்படி இன்னும் அநேகமாயிரம் பிராணிகள் இப்பூமண்டலத்திலிருக்கின்றன. சில மிகவும் அழகான பசும்புற்றரைகளில் கூட்டங்கூட்டமாய் மேய்ந்து விநோதமாய் விளையாடி யாவர்க்கும் மனவெழுச்சியுண்டாக்குகின்றன. சில காடுகளிலும் தோப்புகளிலும் கேட்போர் மனமுருகும்படி மதுரமாய்ப் பாடித் தம் அழகிய மேனிகளால் அவ்விடமெங்கும் அலங்கரிக்கின்றன. சில ஆற்றங்கரைகளிலும் காட்டோரங்களிலும் புதர்களிலும் வேலிகளிலும் நின்று கண்கள் பளபளவென்று மின்ன எட்டி எட்டிப் பார்க்கின்றன. சில தளிர்களிலும் மலர்களிலும் ஆகாயத்திலும் அடிக்கடி நின்று பற்பலநிறமுள்ள தம் சிறகுகளால் அவற்றிற்கு அழகு செய்கின்றன. இன்னும் பலவகைப் பிராணிகள் சமுத்திரம் நதி தடாகம் முதலான பலவிடங்களிலும் இருந்து மிகக் களிப்பு உண்டாக்கிக்கொண்டிருக்கின்றன. இப்படிப் பலவகையிலும் நமக்கு நன்மைவிளைவிக்கின்ற பிராணிகளுக்குப் பிரதிஉபகாரம் நாம் என்னசெய்யமாட்டுவோம்?

நமது வாழ்நாளை நாம் சுலபமாயும் சவுக்கியமாயும் சந்தோஷமாயும் கழிக்கும்படி இந்த ஜந்துக்களெல்லாம் நமக்குப் பலவிதமான நன்மைகளும் விளைவிக்கின்றனவாதலால், அதற்குப்பதிலாக நாமும் நம்மால் இயன்றமட்டும் அவை சுலபமாயும் சுகமாயும் சந்தோஷமாயும் வாழும்படியான வழிகளைத் தேடக்கடவோம்.

இந்த ஜந்துக்களெல்லாம் நம்முடைய உபயோகத்திற்காகவே இருக்கின்றனவென்று அநேகர் எண்ணுகிறார்கள். பலவிதமான பசு பக்ஷி மிருகாதிகளும் இயற்கையாய்த் தமக்குத்தாமே சுகமாய் ஜீவித்திருக்கும்படியாகப் படைக்கப்பட்டிருக்கின்றனவென்றால், அவையெல்லாம் நம் உபயோகத்திற்காகவே உண்டாயிருக்கின்றனவென்று நாம் எப்படி எண்ணக்கூடும்? தங்கள் வரலாற்றை நமக்குச் சொல்லும்படியான திறமை அவற்றிற்கு இருக்குமானால், மன்னுயிர்களுக்கு உண்டி உடை முதலிய பற்பல சவுக்கியங்களைத் தருவதற்கா

கவே அவை படைக்கப்பட்டிருக்கின்றனவென்று நினைப்பது மிகவும் பிசகென்று நமக்குத் தெளிவாய்த் தோன்றும்.

ஆடு மாடு பன்றி இவைகளைக் கேட்போமானால், இப்பூமியில் மனிதரென்று ஒரு ஜாதி உண்டாவதற்கு வெகுகாலம் முன்னமே தாங்கள் இவ்விடத்துக்கு வந்துசேர்ந்து, தங்களுக்கு எக்காலத்திலும் ஒரு குறையுமில்லாமல் சுகமாய் வாழ்வதற்கேற்ற வண்ணமாய் இப்பூமிமுழுதும் அமைக்கப்பட்டிருக்கக்கண்டதாக அவை நமக்குச் சொல்லுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருபோதும் மனிதர் கால்படாத காடுமேடுகளே அவைகட்கு இருப்பிடம். அவற்றிற்குவேண்டிய விதம்விதமான உணவுகளும் அவ்விடங்களிலேயே படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பிடித்துவருத்த மனிதர் ஒருவரும் இல்லாதவிடங்களிலே அவை, தாமும் நன்றாய் வளர்ந்து தம் குட்டிகளையும் அருமையாய்க் காப்பாற்றி, தம்மினங்களோடு கூட்டமாய்க் கூடிக்களித்துத் தம் இஷ்டப்படியே யதேச்சையாகத் திரிந்துகொண்டிருக்கின்றன.

முசல் எலி இவைகளைக் கேட்டால், ஒருபோதும் மன்னுயிர்கள் தங்களைக் காணக்கூடாதவிடங்களிலேயே தங்கள் இனத்தைச் சேர்ந்த கோடாகோடி ஜந்துக்களும் மிகச் சந்தோஷமாய்க் குடிகொண்டிருக்கின்றனவென்று தங்கள் கதையை நன்றாய்ச் சொல்லமாட்டும். அப்படியே கோழி, வாத்து, பலவிதப் பறவைகள் இவைகளெல்லாம், காடு செடி ஏரி குளம்முதலான மனிதர்கள் சேராதவிடங்களிலேயே தங்களுக்கு வேண்டிய பலவிதமான உணவுகளும் சித்தமாய்ச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகளே தாங்கள் வசிப்பதற்கு மிகவும் ஏற்றவிடங்களென்றும் நன்றாய்ச் சொல்லமாட்டும்.

அமெரிக்காதேசத்துக்கு யாத்திரைபோயிருந்த ஒருவன் அங்கே புறாக்கள் குடிகொண்டிருக்கும் ஓரிடத்திற்கு ஒருநாள் சென்றான். அப்போது அங்கே மேகமண்டலம்போல ஆகாயம் முழுதும் மறைத்துக்கொண்டு பெரிய புறாக்கூட்டமொன்று பறந்துபோயிற்று. அந்தக் கூட்டத்தின்முடிவு காணப்படவேயில்லை. அதைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டு இந்தக் கூட்டம் எவ்வளவுநேரம் போய்க்கொண்டிருக்கிறதோ பார்க்கவேண்டுமென்று கடியாரத்தைக் கையில் எடுத்துவைத்துக்கொண்டான். அந்தக் கூட்டம் முதல் முதல் கண்ணுக்குத் தென்பட்டபோது ஒன்றரைமணி; அது முதல் ஒருமணிநேரம் அங்கேயே உட்கார்ந்திருந்து பார்த்தான். அப்போதும் அது அப்படியே போய்க்கொண்டிருந்தது. நான்குமணி அடிக்கிறசமயத்தில் அவற்றின் வேகமும் அதிகரித்துக் கூட்டமும் அதிகமாயிற்று. ஆறடித்தபின்புகூட அந்தக் கூட்டம் ஓயவில்லை. பின்பு அம்மனிதன் அதைக் கணக்கிட்டுப்பார்த்து, அந்தப் புறாக்

கூட்டத்தின் நீளம் 240 மைல் இருக்கவேண்டுமென்றும், அந்தக் கூட்டத்திலிருந்த புறுக்களின் தொகை, 223,02,72,000க்குக் குறைந்திருக்கமாட்டாதென்றும் கண்டறிந்தான்.

மானிடர்களெல்லாம் இப்பூமியைவிட்டு ஓடிப்போவார்களானல், அப்போது பசு பக்ஷி மிருகம் முதலிய பிராணிகளெல்லாம் மிகவும் விசாலமான இப்பூமண்டலத்தில் அந்தப் புறுக்கூட்டம் போலவே விசேஷமாய் விருத்தியடையுமென்பதற்குச் சந்தேகமில்லை. இப்போது அநேகமாய் மனிதர்களால் பழக்கப்பட்ட மிருகங்களும் நாளளவிலே தம்மியற்கைப்படி கொடிய மிருகங்களாகிவிடும். இப்படி அந்தப் பிராணிகளுக்கெல்லாம் நம்முடைய ஆதரணை விசேஷமாய் வேண்டுவதில்லையென்றாலும், நாம்மாத்திரம் அவற்றையே முக்கியமாய்த் துணையாகக்கொண்டுதான் இப் பூமியில் வந்து பிறந்திருக்கிறோம். அவைகள் இவ்விடத்தை விட்டுப் போய்விடுமானல் நாமெல்லாம் நல்ல உணவுகளும் உடைகளுமில்லாமல் பலவிதத்திலும் ஒத்தாசைசெய்ய வலதுகையற்றவர்களுமாகிவிடுவோம்.

பூமியில் மனிதர்கள் எங்கெங்கே வாசமாயிருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு வேண்டிய சில மிருகங்கள்தவிர மற்றெதையும் அவர்கள் இருக்கவொட்டுகிறதில்லை. நமக்குத் தேவையில்லாத புலி காடி கோனாய் முதலியவைகளெல்லாம் அநேகமாய்த் தேசத்தைவிட்டுத் துரத்தப்பட்டும் கொல்லப்பட்டும்போயின. நமக்கு வேண்டாமற்போனால் ஆடுமாடுகளைக்கூட நாம் இப்படித் தான் அடித்துத் துரத்திவிட்டிருப்போம்; இப்போது செய்துவருவதுபோல அவற்றிற்கு மேய்ச்சல்தரைகள் ஏற்படுத்தி அவற்றை அன்புடன் ஆதரிப்போமா? ஆதலால் நாம் அந்த ஜந்துக்களை வைத்து ஆதரிப்பதெல்லாம் நம்முடைய சவுக்கியத்திற்காகவேயொழிய அவற்றினிடத்தில் தயவினாலன்று.

இப்படி நமக்கு உபகாரமாகப் படைக்கப்பட்ட ஜந்துக்களிடத்தில் நம்முள் அநேகர் மிகவும் கொடுமையாக நடக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பசு, கன்று, நாய், பூனை இவைகளையெல்லாம் போதுமான உணவுகொடாமல் மிகவும் பட்டினியாய்க் கிடக்கச்செய்து, ஆடுமாடுகளை வெயிலிலும் மழையிலும் அல்லாடவிட்டு, ஒருபோதும் அவைகளுக்குத் தகுந்த இருப்பிடம் ஏற்படுத்தாமல் இரவெல்லாம் குளிர்ச்சியான பனிக்காற்றிலே அடிபட்டுக்கொண்டிருக்கச் செய்கிறார்கள். எருது மாடுகளையோ, சிறிதுநேரங்கூட இளைப்பாறவிடாமல், அவற்றின்மேல் அதிக சுமையேற்றி, அவையெல்லாம் கட்டைமரங்களென்றும் உணர்ச்சியற்றவை என்றும் நினைத்தவர்போல, அவைகளை அடித்து, உதைத்து, வாலை முறுக்கி, மிகவும் துன்பப்படுத்துகிறார்கள்.

அவற்றின் வாலின்கீழ் தீயைக்கூடப் பற்றவிடுகிறார்கள். மிகவும் பேதையான கோழிக்குஞ்சுகளை இரண்டுகாலையும் சேர்த்துக்கட்டி அதை ஒரு தடியிலே கோத்து வெகுநேரம் தலைகீழாகத் தொங்கவிட்டுவைக்கிறார்கள். இவையெல்லாம் மிகக்கொடிய பாவச்செயல்களாம். இப்படிச் செய்கிறவர்களைக் கடவுள் தண்டிப்பார். அவர்களை இவ்விதமாக வருத்தினால் அவர்கள் பொறுத்து வாயை மூடிக்கொண்டிருப்பார்களா? ஆடுமாடுகளையாகட்டும் மற்றெந்த ஜந்துக்களையாகட்டும் நம்மிடத்தில் வைத்துக்கொள்வோமானால், அவைகளுக்குப் போதுமான இரைபோட்டுப் பலவிதமாயும் அவற்றை நன்றாய்ப்போஷிப்பது நமது கடமை. சிறிதும் இரக்கமில்லாமல் வீணாய் அவற்றை அடிப்பதும், அவைகள் செய்யமாட்டாத வேலைகளைச் செய்விப்பதும் கூடாது. இப்படி நம்மை ஒருவர் வருத்தினால் நமக்கு எப்படியிருக்குமென்று நம்மனதை நாமே தொட்டுப்பார்த்துக்கொள்ளவேண்டும்.

பிச்சைக்காரச்சிறுவன் ஒருவன், ஒருநாள் வீட்டுவாசற்படியண்டை உட்கார்ந்து, யாரோ கொடுத்துப்போன அடையைத் தின்றுகொண்டிருந்தான். அப்போது அவனுக்குச் சமீபத்தில் நாய் ஒன்று, மிகவும் பசியால் வருந்தி இளைத்துச் சோர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. ‘வாய்க்கொழுப்பு சீலையில் வழிந்ததாம்’ என்கிறபடி அந்தச் சிறுவன் சும்மாஇராமல், அந்த நாயைப்பார்த்து, ‘ஜூ! ஜூ’ என்று கூவினான். அவன் பிரீதியாய் அழைப்பதைக் கேட்டு நாய் வாலைக்குழைத்துக்கொண்டு எழுந்து, அவன் தின்பதைப்பார்த்து அவனண்டை வந்தது. நாய் கிட்டவந்ததும் அந்தப் பையல் ஒரு துண்டு அடையை எடுத்துக்காட்ட, அதை வாங்கிக்கொள்ள நாய் தலையை நீட்டினவுடனே, அவன் கையை மடக்கிக்கொண்டு அதன் மூக்குமேல் உரப்பாய் ஒரு குத்து குத்தினான். அந்தக் குத்து பொருக்கமாட்டாமல் நாய் குரைத்துக்கொண்டு ஓட, அவன் தான்செய்த செய்கைக்காகச் சந்தோஷமாய்ச் சிரித்துக்கொண்டு நின்றான்.

அப்பொழுது அந்தத் தெருவின் எதிர்ப்புறத்தில் அழகிய ஒரு தடியுங் கையுமாகத் தற்செயலாய்ப் போய்க்கொண்டிருந்த ஒரு தனிகன், இந்தச் சிறுவன் செய்த கொடுஞ்செயலைக்கண்டு, தன் உடைப்பையிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு அவனுக்குக் காட்டித் தன்னண்டை வரும்படி அழைத்தான். அந்தப் பையல் கிட்டவந்ததும் அந்தக் கனவான், “உனக்கு இது வேண்டுமா” என்று கேட்க, சிறுவன், ஐயா! தங்கள் சித்தம் என் பாக்கியம் என்று முகமலர்ந்துசொன்னான். அந்த ரூபாயை வாங்கிக்கொள்ள அவன் கையைநீட்டினவுடனே, அந்தப் பெரியமனிதன் தன் பிரம்பை எடுத்து அவன் விரல் கணுக்களில் ஓங்கி ஓர் அடி அடித்தான். அந்த அடி பொறுக்க

மாட்டாமல் சிறுவன் அழுதுகொண்டு கண்ணுங்கண்ணீருமாய்க் கையைத் தேய்த்துக்கொண்டு, நீ ஏன் என்னை அடித்தாய்? நான் உனக்கு ஒன்றும் தீங்குசெய்யவில்லையே; ரூபாயும் நான் உன்னைக் கேட்கவில்லையே என்றுசொல்ல, அவன், நல்லது, நீயேன் இப்போது அந்தப் பேதைநாயை அடித்தாய்? அது உனக்கு ஒருதீங்கும் செய்யவில்லை; உன்னை அடையும் கேட்கவில்லையே? நீ அதற்குச் செய்ததுபோலவே நான் உனக்குச் செய்தேன்; இது உனக்கு எப்படியிருக்கிறது? அதற்கும் இப்படியிருந்திருக்குமல்லவா? இனிமேல் எளியஜந்துக்களிடத்தில் அன்பாய் நடக்க வேண்டுமென்பதை மறவாதே என்றுசொன்னான்.

சுதேசசரித்திரவிலாசம்.

நூர்ஜிஹான் என்னும் பெண்ணரசி கதை (தொடர்ச்சி).

அந்தப் பெண்மணி ஷியர்ஆப்கன் என்னும் ஒரு கனவானுக்கு இல்லாளாக ஏற்படுத்தப்பட்டாளென்று சென்றசஞ்சிகையில் சொன்னோமே. பிற்காலத்தில் ஜிஹாங்கீர் என்னும் சக்கரவர்த்தியாகப்போகிற ஸெலிம் என்னும் இளவரசன் அப்பெண்ணரசியினிடத்தில் நெடுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அவளை ஷியர் ஆப்கனுக்குக் கொடுக்கும்படி நிச்சயமான செய்திகேட்டவுடனே அவ்விளவரசன் தன் தகப்பனான அக்பர்சக்கரவர்த்தியண்டை போய்த் தம்பெரியதனத்தியக்ஷனுடைய மகளைத் தனக்கு விவாகஞ் செய்விக்கவேண்டுமென்று வேண்டினான்.

அதைக்கேட்டு அக்பர்சக்கரவர்த்தி, நமக்குச் சமானமான நிலையிலுள்ள ராஜகுமாரத்திகளைக் கலியாணஞ்செய்துகொள்ளாது, ஈனமான நம் வேலைக்காரன் மகளையா நாம் மணம்புரிகிறதென்று சொல்லி, அவன் அப்படி இழிவான எண்ணங்கொண்டதற்காக அவனை மிகவும் இகழ்ந்து, அப்படிப்பட்ட காரியம் ஒருபோதும் கூடாதென்றான். சீக்கிரத்திலேயே ஷியர்ஆப்கனுக்கும் அந்தப் பெண்மணிக்கும் கலியாணம் நடந்தேறிற்று. முன்னமே மனம் புண்பட்டிருந்த இளவரசனுக்கு இச்செய்தியையும் கேட்கவே எரிகிற உடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினதுபோலாயிற்று.

அதுமுதல் இளவரசன் ஷியர்ஆப்கனிடத்தில் விரோதம் மேன்மேலும் அதிகரித்தவனாய்த் தந்திரமாயே அவனைக் கொல்ல வேண்டிய வழிகளைத் தேட ஆரம்பித்தான். ஆயினும் அந்தச் சூதுகளொன்றும் சக்கரவர்த்தி சமுகத்துக்குச் சிறிதும் தெரிய

வொட்டாமல் மறைவடமாயே செய்துவந்தான். அவ்விடத்துப் பற்பல அதிகாரிகளுக்கும் துர்ப்போதனைசெய்து அவர்களுக்கெல்லாம் அந்தத் தனுதிபதியினிடத்தில் மிகப் பொறாமை உண்டாகச் செய்தான். ஒருவனுக்கு நன்மைவிளைவிப்பதல்லவோ வருத்தம்; தீமைவிளைவிப்பது எளிதுதானே. சாதாரணமாயே கொஞ்சம் செழித்திருப்பவனைக் கண்டால் பொறாமைப்படுவது உலகவியற்கை. பிறர்க்கு ஒன்றுமாகாது; தாமே மேலதிகாரங்களைப் பெறவேண்டுமென்று பொறாமையும் பேராசையுமே அதிகமாகக் கொண்டிருக்கும் ராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு அதிகாரியினிடத்தில் பகை உண்டாக்குவதென்றால், அதைவிடச் சுலபமானகாரியம் வேறென்ன? ஸெலிம் என்னும் இளவரசன் எளிதிலேயே அனைவர்க்கும் ஷியர்ஆப்கனிடத்தில் பெரும் பகையை உண்டுபண்ணி அவனுக்குக் கெடுதிசெய்யத் தொடங்கினான். அச்செய்திதெரிந்தவுடனே இனி நாம் இங்கிருப்பது தகுதியல்லவென்று ஷியர்ஆப்கன் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியமாயே ஆக்ராவைவிட்டு வங்காளம்போய்ச்சேர்ந்து, அங்கே கவர்னருடைய தயவினால் பரத்வான் அல்லது பாதவனமென்னும் ஒரு பெரிய மாகாணத்துக்குக் கொஞ்சகாலம் அதிகாரியாயிருந்தான்.

அக்பர்சக்கரவர்த்தி இறக்குமளவும் அவனுக்கு யாதொரு தீங்குமுண்டாகவில்லை; அதுவரையில் அங்கேயே வசித்துக்கொண்டிருந்தான். அக்பர் இறந்துபோய் ஸெலிம் தானே சக்கரவர்த்தியானபோது, அத்தனைகாலமாய் அவன் மனதிற்குள்ளேயே அடங்கிப் புகைந்துகொண்டிருந்த ஆசையாகிய தீ நன்றாய் மேலோங்கிப் பற்றியெரிய ஆரம்பித்தது. பின்பு தன்னைக் கேட்பார் ஒருவருமில்லாமற்போகவே, தன் கோரிக்கையை நிறைவே[illegible] தான் தருணமென்று ஸெலிம், நல்லதனத்திலாகிற [illegible] தினுலுமாகாதென்று எண்ணி, ஷியர்ஆப்கனோடு கூட[illegible] டத்தொடங்கினான். ஷியர்ஆப்கன் அவ்வரசன் கருத்தை நன்[illegible] உணர்ந்தவனுதலால், நாம் நம்மனையாட்டியை விட்டுப்பிரிந்தால் அந்தக்ஷணமே நமது பெருமை அழிந்துபோகுமென்று கண்டு சிறிதுகாலம் அவ்வரசனுடைய கேள்விகள் ஒன்றுக்கும் இடங்கொடாமலிருந்தான். ஷியர்ஆப்கனைப்போலத் தேகவலிமையும் தைரியமுமுடைய புருஷன் வேறொருவருமில்லை. ஒப்புயர்வில்லாத நற்குணநற்செய்கைகள் அவனிடத்தில் குடிகொண்டிருந்தன. அவனுடைய புகழோ நாடெங்கும் பரந்தது. இப்படி அவன் பலவித உயர்ந்தகுணங்கள் உடையவனுயிருந்ததுபற்றி யாவரும் அவனிடத்தில் பயபக்தியும் மரியாதையுமாக நடந்துவந்தார்கள். எப்படிப்பட்ட அபாயமானுலும் அதைக்கண்டு அவன் சிறிதும் மனஞ்சலிப்பதில்லை. அவனுடைய பெருமையைப் பாக்களாகக்கூட இசைத்து அநேகர் பாடிக்கொண்டிருந்தார்கள். எவ்வித

மான துணையுமில்லாமல் தனியே ஒரு சிங்கத்தைக் கொன்றவனெ ன்ருல் அவன் தேகவலிமையை என்னென்று புகழலாம்! அது காரணமாகவே சிங்கத்தைக் கொன்றவனெனப் பொருள்படும் ஷியர்ஆப்கனென்னும் சிறப்புப்பெயர் அவனுக்கு உண்டாயிற்று. அஸ்தாஜில்லோ என்பது அவனுடைய இயற்கைப்பெயர். அப் படிப்பட்ட மகாபுருஷன் தனக்குக் கணவனுக வா... தானென்று அந்தப் பெண்மணியும் மட்டுமிதமில்லாத பெருமை... ண்டிருந் தாள். சக்கரவர்த்தி செய்துவந்த சூதுகளும் அவளுக்கு... தெரியாம லிருக்கவில்லை; ராஜா தன்னைப் பகைப்பதெல்லாம் முக்கியமாய் அவளுக்காகவே என்பது ஷியர்ஆப்கனுக்கும் தெரியும். அவள் அந்தக் கணவனுடைய கருத்துக்கிசைந்து சக்கரவர்த்தியின் சூது களுக்குச் சிறிதும் இடங்கொடாமலிருந்தாள். ஷியர்ஆப்கனும் அரசனிடம் சென்ருல் வீண்வருத்தமுண்டாகுமென்று அவ்விடத் துக்குப் போகாமலே வங்காளத்திலிருந்தான்.

ஜிஹாங்கீர் பட்டம்பெற்ற சிலநாளைக்கெல்லாம் ராஜதானிக்கு வரவேண்டுமென்று வேண்டி பலதடவை கடிதங்கள்வரவே அவன், தன் தைரிய சவுரிய பராக்கிரமங்களே தனக்குத் துணைசெய்யு மென்று நம்பி, தன் மனையாட்டியைமட்டும் அரசன் கண்ணெதிரே கொண்டுநிறுத்துவது தகுதியல்லவென்று அவளை அந்தப் பாதவன த்திலேயே விட்டுவிட்டு, தான்மட்டும் ராஜதானிக்குச் சென்ருன். அவன் வந்தவுடனே அரசனும் அவனுக்குத் தன்னிடத்தில் யா தொரு சந்தேகமுமுண்டாகாதபடி அவனுக்கு உயிர்த்தோழனுக நடித்துவந்தான்.

அவ்... அந்தச் சக்கரவர்த்தி தந்திரமாய் அவனைக் ...செய்த முயற்சிகளுக்கு அளவில்லை. ஜிஹாங்கீரு ...ாடுவதில் விருப்பமதிகமாயிருந்ததனுல், அதற்காக ...க்கப்பட்டது. அந்த ராஜாங்கத்திலுள்ள போர்வீ ...லாம் அரசனெதிரே தங்கள் தங்கள் பராக்கிரமங்களைக் காட்ட இதுதான் தருணமென்று ஆவல்கொண்டோடிவந்தார்கள்; யானை குதிரைகளும் நூற்றுக்கணக்காய்ப் புறப்பட்டன; போர் வீரர்களெல்லாம் அநேகமாய் யானைகளின்மேலேயே ஏறிப்போ னுர்கள்; ஈட்டியுங்கையுமாய் நடந்துவந்த காலாள்களுக்குக் கணக்கில்லை; வெகு அழகாய்ச் சித்திரவேலைசெய்த வெள்ளிப் படம்போர்த்த பட்டத்துயானையில் நவரத்தினங்களிழைத்த அற் புதமான அம்பாரியில் அரசனும் ஏறிச்சென்ருன். இப்படிப் போ ர்க்குப் பெருஞ்சேனை சாய்வதுபோல் அவர்கள் லாகோர்பட்டணத் தைவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டது பிரளயகாலத்தில் கடல் புரண்டுவருவதுபோலிருந்ததேயொழிய வேறில்லை.

ஷியர்ஆப்கனும் முன் தான் ஒரு பெருஞ்சிங்கத்தைக் கொன்ற கத்தியொன்றைமாத்திரம் கையிலேந்தி ஒரு போர்க்குதிரைமேல்

ஏறிப்போனான். ஆதிதொடங்கியே அப்போர்வீரர்களுக்கெல்லாம் அவன்மேல் விர்த்தியாகிக்கொண்டிருந்த பொறாமை நன்றாய்த் தலைக்கேறும்படியாக ஜிஹாங்கீர் ஷியர்ஆப்கனை மேன்மேலும் கவுரவப்படுத்துவதுபோலவே நடத்திக்கொண்டுபோனான். ஷியர்ஆப்கனும், முன் சக்கரவர்த்தி தன்னிடத்தில் காட்டிய கொடுமைகளெ[illegible]ாம் மறவாமலிருந்தாலும், இனி தனக்கு யாதொரு தீங்கும்[illegible] துணியானென்று பூரணமாய் நம்பியே அவனைப் பின்தொ[illegible]துபோனான்.

கடைசியாய் அந்தச் சேனை புலியும் சிங்கமும் அடர்ந்த ஒரு பெருங்காட்டில் போய்ச்சேர்ந்தது. உடனே பல வீரர்கள் ஒரு புலியை வளைத்துக்கொண்டார்கள். அந்தப் புலி ஒருவர்க்கும் பிடிபடாத பெருவலியுடையதென்று கண்டு ஜிஹாங்கீர், தான் அத்தனைகாலமாய் எதிர்பார்த்திருந்த காலம் நெருங்கிவிட்டதென்று மிகச் சந்தோஷமடைந்து, இங்கே இந்தக் கொடிய மிருகத்தை எதிர்க்கத் துணிவுடையவனெவனென்றான். அனைவரும் ஒன்றும் தோன்றாமல் மவுனமாய் நின்றார்கள்.

ஒருவரும் வாயைத் திறவாமலிருப்பதுகண்டு ஜிஹாங்கீர் சிறிது முகம்சுளித்துப்பார்த்தான். ஷியர்ஆப்கன், அந்த வீரச்செயல் தானே செய்யும்படி நேருமென்று எதிர்பார்த்திருந்தான். அப்படியிருக்க அவனுக்கு மிக்க மானபங்கமாகும்படி மூன்றுவீரர்கள் முன்வந்துநின்று, அந்தப் புலியை எதிர்க்கத் தங்களுக்கு அனுமதிகொடுக்கவேண்டுமென்றார்கள். அப்போது ஜிஹாங்கீர் மிகச் சுறுசுறுப்பும் உற்சாகமுமுண்டாகு[illegible] ஷியர்ஆப்கனை முகமலர்ந்து விழித்துப்பார்த்தான். அ[illegible]லியைக் கொல்வது தனக்கு ஒரு விளையாட்டேயொழி[illegible] சொல்ல அவனும் ஆவலாயிருந்தான். ஆயினும் [illegible] கள் முன்னிட்டுவந்து விண்ணப்பஞ்செய்துகொண்[illegible] களைத் தடுத்துரைக்கக் கூடவில்லை.

அம்மூன்று வீரர்களும் யானையைவிட்டிறங்கிக் கத்தி கேடயம் குத்துவாள் முதலிய ஆயுதங்கள் அணிந்து புலியை எதிர்க்கச் சித்தமாய் வந்துநின்றார்கள். ஷியர்ஆப்கன், இவர்கள் தனக்குப் போட்டியாய் வந்தார்களென்றும், திறமையில்லாமையால் வாயைத்திறவாமல் நின்றானென்று தன் புகழ் அழிந்துபோகுமென்றும் கண்டு, சரேலென்று சக்கரவர்த்தியின் எதிரேபோய் நின்று, ஒருவிதமான ஆயுதமுமில்லாத ஒரு அற்பஜந்துவைப் பல ஆயுதங்களோடு எதிர்ப்பது ஆண்மைத்தனமுமன்று, நீதியுமன்று. இது சூரர்கள்செய்கின்ற செய்கையா? சமபலமாய் எதிர்ப்பதே ஆண்மைத்தனம். கைகால் முதலிய உறுப்புகள் நமக்குமுண்டு மிருகங்களுக்குமுண்டு. அவைகளுக்கு விசேஷமாய்த் தேகவலிமையளிக்கப்பட்டிருப்பதற்குப்பதிலாக நமக்கு யுக்தாயுக்தங்களைப்

பகுத்தறியுந் திறமை அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் சக்கரவர்த்தியின் வீரர்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டுத் தமக்குக் கடவுள்கொடுத்த கருவிகளைமாத்திரமே கொண்டு புலியை எதிர்க்கட்டும்; அதற்கு அவர்கள் பின்னிட்டால், இதோ நான் போகக் காத்திருக்கிறேனென்றான்.

ஜிஹாங்கீர் புன்னகையுடன் முகமலர்ந்து அவனை விழித்துப் பார்க்க, அதுதான் அரசற்கு அநுமதமென்று அனைவரும் அறிந்துகொண்டார்கள். அம்மூன்று வீரர்களும் அவ்விதமாக மனப்பூர்வமாய் உயிரை இழக்கத் துணியாமல் அப்படியே நின்றுவிட்டார்கள். உடனே மகா சூரனான ஷியர்ஆப்கன், அரசன் முதலிய பலரும் மலர்ந்தகண் மூடாமலே பிரமித்துப் பார்த்துக்கொண்டிருக்க, கையிலிருந்த ஆயுதங்களையெல்லாம் கீழே போட்டுவிட்டு அந்தக் கொடும்புலியை எதிர்த்துப்போகச் சித்தனானான். அந்தப் புலியை ஈட்டியுங்கையுமாய் வளைத்துநின்ற வீரர்களெல்லாம் அவனுக்கு வழிவிட்டார்கள். அந்தப் பெரும்புலி ஒரு மாத்தடியிலே படுத்து அவர்களைப்பார்த்துப் பயங்கரமாய் உறுமிக்கொண்டிருந்தது. ஷியர்ஆப்கன் அதைக்கண்டு சிறிதும் அஞ்சாமலே எதிர்த்துச்சென்று படுத்திருந்த புலியண்டையிற்போய் அதின் விலாப்புறத்தில் ஓங்கி ஓர் உதை உதைத்தான்? அனைவரும் அவனுக்கு மாணகாலம் சமீபித்ததென்று மனம் பதைக்கப்பதைக்கப் பார்த்திருந்தார்கள். அரசனும் தான் அத்தனைகாலமாய் எதிர்பார்த்திருந்த காரியம் கைகூடிற்றென்று களிப்புற்றிருந்தான்.

தன்னை ஒரு அற்பமனிதன் வந்து உதைக்கவே புலி கண்களில் நெருப்புப்பொறிபறக்க மிகக்கோபங்கொண்டு பயங்கரமாய் அவனை விழித்துப்பார்த்துக் கொஞ்சம் பின்னடைந்தது. மறுபடியும் அவன் அதை எதிர்த்துச்செல்ல, திடீரென்று அது அவன் மேல் பாய்ந்தது. அதுகண்டு அண்டையிலிருந்த வீரர்களெல்லாம் தங்கள் ஈட்டிகளால் அதைத் தகைந்தார்கள். ஷியர்ஆப்கனும் சிறிதுதூரம் ஒதுங்கி ஓர் மாத்தடியிலே நின்று, அதுவே தன்னை எதிர்த்துவரட்டுமென்றிருந்தான். உடனே மிகப் பயங்கரமாய் ஒரு கர்ச்சனைசெய்து வெகு வேகமாகப் புலி அவன்மேல் பாய்ந்தது. அது தன் அருகேவந்ததும் ஷியர்ஆப்கன் அதன் கையில் அகப்படாமல் ஒருபுறமாய் ஒதுங்கி அதன் வாலைப்பிடித்துக்கொண்டு சாசரவென்று பலதாம் இழுத்துச் சுற்றி அதன் தலை தானே அண்டையிலிருந்த மாத்தில் வெகு வேகமாய் அறைந்துகொள்ளும்படிச் செய்தான். அவ்வறைப்பட்ட அதிர்ச்சியால் புலி இரண்டொரு நிமிஷம் ஒன்றுந்தோன்றாமல் பிரமைபிடித்துநின்றது. அதுகண்டு ஷியர்ஆப்கன் அதைப் பலதாம் உதைத்து அதற்குக் கோபமூட்டி, மறுபடியும் அது எதிர்க்கப்போகிற தருணம்பார்த்துத் திரும்பவும் முன்போலவே அதன் வாலைப்பிடித்

துச் சுற்றினான். முன்னிலும் கொடுமையாய் அதற்கு இந்தத் தடவை அறைபட்டதென்றாலும், அவ்வளவு மயக்கமுண்டாக வில்லை. இச்செய்கையினால் ரோஷமதிகரித்துப் புலி அவன் மேல் ஒரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து அவன் தொடையைக் கவ்விக் கொண்டது. அவன் காலுடை தளர்த்தியாயிராவிட்டால் அது கவ்வினகவ்வலில் அவன் காலே முறிந்துபோயிருக்கும். உ
அவன் அதன் மூக்கை அழுத்திப்பிடிக்க, அது
விட்டு அவன் பிடியினின்றும் திமிறிக்கொ
அவன்மேல் பாய்ந்து மார்பைக்கிழித்தது.
சோர்ந்து கீழேவிழ்ந்தானென்றாலும் கோபமதி
எழுந்து அனைவரும் இதென்னவென்று அதிசயி
பெரும்புலியின் வாயைப்பிடித்துக் கிழித்துவி
த்து வந்தனம்செய்தான். புலி செத்துக் கீ
பெல்லாம் ரத்தம் தாரைதாரையாய்ப்
அந்த ரணக்களத்தைவிட்டு ஒருபுறமாய்ச்

அந்தச் செய்கையைக்கண்டு சக்கர
அடைந்தான். பின்பு ஷியர்ஆப்கனை
டுக்குக் கொண்டுபோனார்கள். சிலநாள்
மாட்டானென்றே தோன்றியிருந்தது.
ஆறிச் சீக்கிரமே அவன் பிழைத்தெழுந்தா
வடுமட்டும் அவன் சாகுமளவும் மறைய
பராக்கிரமசாலியென்று அவனிடத்தில் அ
லும், இன்னும் அவனைக் கொல்வதற்கு
தைமட்டும் அரசன் ஒழிக்கவில்லை. அந்த
லும் தனித்துப்போகிறதேயொழியக் கூட
கொண்டுபோவதில்லை; தன் பிராணனைப்
தந்திரம் நடந்துவருகிறதென்பது அவனுக்கு
தான் ஒருவர்க்கும் கெடுதி நினைத்ததில்லை
கொல்லக் கருதுபவனும் உலகில் ஒருவனில்லையெ
நம்பியிருந்தான். எப்போதாவது அவன் ராஜசபைக்குப்போனால் அங்கே அவனுக்கு நடக்கிறமரியாதை மற்றெவனுக்கும் நடப்பதில் லை. அரசன் அவ்வளவு தந்திரமாய்த் தன் கள்ளக்கருத்தை மறை த்துவந்தான். அரசனுடைய சூது, அவனோடு கூடவேசேர்ந்து ஷியர்ஆப்கனிடத்தில் மிகப் பொறாமைகொண்டு, அவனைக் கொல் லக் காத்திருக்கும் சிலர்க்குமாத்திரந் தெரியுமேயொழிய மற்றெ வர்க்குந் தெரியாது.

ஷியர்ஆப்கனைத் தெருவிலே போம்போது பிடித்து அவன்மேல் யானையை ஒட்டிக் கொன்றுவிடும்படி ஒரு யானைக்காரனுக்கு ரகசிய மாய்க் கட்டளையிடப்பட்டிருந்தது. அப்படியே அந்த யானைக்கா ரன் எப்பொழுது தருணம் அகப்படுமோவென்று காத்துக்கொண்

டிருந்தான். அந்த வீரன் இந்தக் காலத்தில் வெளிப்படுகிறதென்கிற நியமமில்லை. ஆதலால் அவனைக் கண்டுபிடிப்பது மிகக்கடினமாயிருந்தது. அப்படியிருக்க ஒருநாள் ஷியர்ஆப்கன் தடாகத்துக்குப்போய் ஒரு சந்துவழியாய் வரும்போது எதிரே ஒரு யானை வருவதைக்கண்டு ஓரமாய் ஒதுங்கி அதற்கு வழிவிடும்படித் தன் பல்லக்குக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். அப்படியே அவர்கள் ஓரமாய் ஒதுங்கிநிற்க, யானை சமீபத்தில் வந்துவிட்டது. பின்பு யானை பல்லக்கை மிதித்துக்கொண்டு போகவேண்டுமேயொழிய வேறுவழியில்லை. அது கண்டு ஷியர்ஆப்கன் யானையை நிறுத்தும்படி யானைக்காரனுக்குப் பலதரம் கட்டளையிட, அவன் அதைக் கேட்கவேயில்லை. பல்லக்கைப் பின்னேகொண்டுபோகும்படிப் பல்லக்குக்காரர்களுக்குக் கட்டளையிட, அது அசாத்தியமென்றெண்ணி அவர்களும் பல்லக்கைக் கீழேபோட்டுவிட்டு ஓடிப்போனார்கள். இனி ஒருக்ஷணம் தாமதித்தாலும் உயிர்போய்விடுமென்று கண்டு ஷியர்ஆப்கன் தன் கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு பல்லக்கினின்றும் கீழேகுதித்து, தன் தலைக்குமேல் மலைபோல்வந்துநின்ற பெரிய யானையைக்கண்டு சிறிதும் அஞ்சாமல் மரம்போல அதன் துதிக்கையை வேரோடுவெட்டிக் கீழேதள்ளினான். அது கண்டு அந்த யானை கீழேவிழ்வதற்குமுன்னமே யானைக்காரன் அதினின்றும் குதித்தோடு மனட்யினான். யானையும் உடனே வீழ்ந்து இற

அரசனும் தான் அத்த

கைகூடிற்றென்று களிட நற்குணத்தின் பெருமையை நாம் என்னே

தன்னை ஒரு அற்ட யானைக்காரனையும் அவன் அந்தக்ஷணமே

ளில் நெருப்புப்பொறிய க்குக் கெடுதிசெய்தவனுக்கு நாமும் கெடுதி

அவனை விழித்துப்பார்கொரு சிறுமையேயொழியப் பெருமையன்

யும் அவன் J, தை அவன் மதியீனத்தாற்செய்த செய்கையென்று

மேல் பாய்ந்தது. ஏபப்பட்டு அவனை ஒன்றும் வருத்தாமலே

லாம் தங்கள் ஈட்டிகள

சிறிதுதூரம் ஊமேலிருந்து இவையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஜிஹாங்கிர் அவனுடைய வீரச்செயலைக்கண்டு மிகவும் அதிசயித்தானென்றாலும், தன் உபாயமெல்லாம் இப்படி வீண்போகிறதேயென்று மிகவும் மனமழிந்தான். ஷியர்ஆப்கன் ராஜசபைக்குப்போய் நடந்தவரலாற்றைச் சொன்னபோது, ஜிஹாங்கீர் அவனுடைய பராக்கிரமத்தைக் கண்டு தான் மிக்க மகிழ்ச்சிகொண்டவன்போல் நடித்து, அவனுக்குத் தன்னிடத்தில் யாதொரு சந்தேகமும் உண்டாகாமலிருக்கும்படிச் செய்துகொண்டான்.

(இன்னும் வரும்.)

ஒளியின் அதிசயங்கள்.

கோடைகாலங்களில் நிர்மலமான ஆகாயத்தில் சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கையில், மரங்களின் அரிநிழலிலே சூரியகிரணங்கள் தரையில் குண்டுகுண்டாய்த் தோன்றக் கண்டிருப்பீர்களல்லவா? அப்படி அவை குண்டு குண்டாகத் தோன்றுவது அற்புதமல்லவா? இலைகளின் மத்தியிலும் ஒன்றுக்கொன்று குறுக்கும் நெடுக்கும் கோணலாய் வளர்ந்திருக்கும் கிளைகளின் மத்தியிலுமிருக்கிற ரந்திரங்கள் ஒருபோதும் வட்டமாயிராவாகையால், அவற்றின் வழியாய்வருகிற கிரணங்கள் மட்டும் வட்டமாய் எப்படித் தரையில் அமையமாட்டும்?

மிகவும் உரப்பான ஒரு கடிதத்துண்டிலே, ஒன்று சதுரமும், ஒன்று முக்கோணமும், ஒன்று எட்டுக்கோணமும், இப்படி இன்னும் பல கோணங்கள் உடையதுமாய்ப் பலவித சிறு சிறு ரந்திரங்கள்செய்து அந்தத் துண்டை வெயிலிலே பிடிப்போமானால், அதின் வழியாய் விழுகிற சூரியகிரணங்கள் அதன் கீழ்க் கொஞ்சம் தூரத்தில் பிடித்த மற்றொரு கடிதத்தில் வட்டமாகவே தோன்றும். இப்படியே நமது வீட்டுக் கூரைகளிலுள்ள ரந்திரங்களின் வழியாய்ச் சூரியனொளி வட்டம்வட்டமாய் வீட்டுத் தரையிலே தோன்ற அநேகர் பார்த்திருக்கலாம். சூரியன் சரியாய் உச்சத்திலிருந்தால் நல்ல வட்டமாகத் தோன்றும்; ஒருபுறமாய்ச் சாய்ந்திருந்தால் கொஞ்சம் நீண்ட வட்டமாகத்தோன்றும். வீட்டுக் கூரையிலுள்ள ரந்திரங்களெல்லாம் வட்டமாகவேயிருக்கின்றனவா? அது ஏனோ அப்படித் தெரிகின்றது; அது ஒரு அதிசயமாவென்கிறீர்களோ? அப்படிச்சொல்வது நியாயமா? அதற்கும் ஒரு காரணமிருக்கவேண்டுமல்லவா?

அந்தக் கடிதத்துண்டை வீட்டுக்குள் கொண்டுவந்து அதின் துவாரங்களின்வழியாய் விளக்கொளி பிராசிக்கச்செய்து பார்ப்போம். அந்த விளக்கொளியின் புள்ளி இப்போது எந்த வடிவமாயிருக்கும்? அவ்வொளி பதியுமிடம் அந்தக் கடிதத்துண்டுக்கு

அதிக சமீபத்திலிருந்தாலல்லது அது வட்டமாயுந்தோன்ருது, சதுரமாயுந்தோன்ருது, முக்கோணமாயுந்தோன்ருது, மற்றெந்தவடிவமாயுந்தோன்ருது, பின்னென்னவெனில், அவ்விளக்கொளி எந்தவடிவமாயிருக்கிறதோ அதே வடிவமாய்த் தெரியும்; ஆனல் தலைகீழாகத் தெரியும். அரைக்கால் அங்குலம் அகலத்திற்கு அதிகப்படாத சிறுரந்திரமுள்ள கடிதத்துண்டை விளக்கினின்றும் நாலைந்து அங்குல தூரத்தில் பிடித்து, அங்கிருந்து நாலைந்து அங்குல தூரத்தில் ஏதாவது ஒரு உருவத்தைப் பிடித்தால் அதில் அவ்விளக்கின் வடிவம் நன்ருய்த்தெரியும். அதிக தூரத்தில் பிடித்தால் தெளிவாய்த் தெரியாது.

இதைக்கொண்டே அரிநிழல், கூரைச்சந்து முதலானவிடங்களில் நிழல் வட்டமாய்த் தெரிவதற்குக் காரணமின்னதென்று கண்டுகொள்ளலாம். அவைகளில் ஒவ்வொன்றும் சூரியனுடைய பிரதிமையாதலால், அவை அப்படித் தோன்றுகின்றன. சூரியன் வட்டமாயிராமல் வேறுவிதமாயிருந்தால், அவையும் அப்படியே தோன்றும். அவை அப்படி வட்டமாய்த் தோன்ருத காலமும் சிலவுண்டு. கிரகணகாலங்களில், சூரியனுக்கும் நமக்கும் இடையே சந்திரன்வந்து, சூரியனுடைய பளபளப்பான மேனியில் ஒரு பாகம் உடைந்துபோனதுபோல அதை மறைத்துச் சூரியனை மொக்கையாக நமக்குக் காட்டுகின்றது. அதனல் அப்போது சூரியனுடைய நிழலொளிகளும் மொக்கையாகவே தெரியும்.

அப்படியாயின், சந்திரன் ஒருவிதமாயிராமல் நாள்தோறும் வெவ்வேறுவடிவமாகத் தோன்றுவதனல், மேற்சொன்ன கூரைச்சந்து முதலானவிடங்களில் தோன்றுகிற சந்திரனெளி ஒருநாள் வட்டமாகவும், ஒருநாள் அரைவட்டமாகவும் இப்படிப் பலவிதமாய்த் தோன்றுமாவென்கிறீர்களோ? அன்றன்றைக்குச் சந்திரன் வடிவம் எப்படியிருக்கிறதோ அப்படித்தான் தோன்றும். ஆனல் சந்திரனுடைய நிலவு, நிழலொளி தெளிவாய்த்தெரியும்படி, அவ்வளவு பிரகாசமாயில்லையாதலால் அதை நன்ருய்க் கண்டுபிடிப்பது கடினம். ஆயினும் ஆகாயம் அழுக்கற்றிருக்கிற இரவுகளில் சந்திரன் ஏறக்குறைய பூரணமாய்ப் பிரகாசிக்கும்போது பார்த்தால் ஒருவாறு தெரியும். பூமத்தியத்திற்குச் சமீபமானவிடங்களில் சந்திரன் இன்னும் பிரகாசமாயிருக்குமாதலால், அவ்விடங்களிலே போய்ப்பார்த்தால் இது இன்னும் தெளிவாய்த்தெரியும். வடதேசங்களில் சந்திரன் ஒளி மிகவும் இருண்டிருக்கின்றதனல் அத்தேசத்தவர் பிரத்தியக்ஷமாய்க் கண்டறியக்கூடாமல், சிறிய ரந்திரங்களின் வழியாய்வருகிற சந்திரனெளி எந்த வடிவமாயிருக்குமோவென்று சந்தேகித்துக்கொண்டிருக்கிருர்கள்.

மிகப்பிரகாசமான உருவங்கள் ஒரு சிறுதுவாரத்தின் வழியாய்த் தம்பிரதிமையை ஏன் இப்படித் தோற்றுவிக்கின்றனவென்கிறீர்களோ? அந்தக் கடிதத்துண்டை முன்போலவே விளக்கின்

முன் மறுபடியும் பிடித்துப்பார்ப்போம். அந்த சுவாலையின் ஒவ்வொரு உறுப்பும் தன் கிரணங்களைக் கூடுமானவரையில் எல்லாப்பக்கங்களிலும் பரவச்செய்கின்றது. எப்படியெனில், சுவாலையின் நுனி தன் கிரணங்களைக் கீழும் மேலும் பக்கங்களிலும் வியாபிக்கச்செய்கின்றது. அவற்றுள் அநேகம் அந்தக் கடிதத்தினால் தடுக்கப்பட்டுப்போக, கீழ்முகமாய்ப்போகிற கிரணங்களுள் இரண்டொன்றுமாத்திரம் அதன் ரந்திரத்தின்வழியாய்ப் புகுந்து, அதற்குப் பின்புறத்திலுள்ள உருவத்தில் அந்த ரந்திரத்திற்குக் கொஞ்சம் தாழ்வாக விளக்கொளியின் நுனிபோல் அமைகின்றது. இவ்விதமாக அதன் அடிப்புறமும் நாலாமூலையும் தன் கிரணங்களைப் பரப்புகின்றதனால், அதனுடைய மேலே போகின்ற கிரணங்கள் இரண்டொன்று அதன்வழியாய்ச் செல்லமாட்டும். அவை அந்த ரந்திரத்திற்கு மேலாக அதன் அடிபோல் அமைகின்றன. அதனால் அந்த உருவத்தில் விளக்கின்சாயை தலைகீழாக நமக்குத்தெரிகின்றது.

இந்த அற்புதத்தை இன்னும் தெளிவாய்க்கூட மற்றோரிடத்தில் நாம் காணலாம். கதவில் சிறிய துவாரமுடையதான ஒரு இருட்டறையிலேபோய் உட்காருவோம். அந்தத் துவாரம் ஒரு அங்குலத்துக்கு அதிக அகலமுள்ளதாயிருக்கக்கூடாது. அங்கே பார்த்தால் அந்த ரந்திரத்தின் வழியாய் வெளிப்புறத்திலுள்ள காட்சிகளெல்லாம் எதிர்ச்சுவரில் நமக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் எல்லாம் தலைகீழாகவே தோன்றும். மரங்களெல்லாம் தலைகீழாயிருக்கும்; மனிதர்கள் தலைகீழாக நடந்துபோவார்கள்; வீடுகள் தலைகீழாய்த் தோன்றும், ஆகாயத்தில் எறியப்படுகிற பந்துகள் பூமிக்குவந்து திரும்பியும் உயரப்போகக் காண்போம். இவையெல்லாம் ஆச்சரியங்களல்லவா? வேண்டுமானால் ஆகாயம் தெளிவாயிருக்கிறகாலத்தில் இதை யாவரும் பரீக்ஷித்து அறிந்துகொள்ளலாம்.

சிறுவர்க்கான கதை.

ஆறு வல்லவர்கள்.

முற்காலத்திலே பல தந்திரங்களும் தெரிந்தமனிதன் ஒருவனிருந்தான். அவன் மகாசூரன்; நெடுநாள் பட்டாள உத்தியோகஸ்தனாயிருந்தவன். யுத்தங்களெல்லாம் ஒய்ந்துபோகவே அவனை அந்த உத்தியோகத்தினின்றும் நீக்கிவிட்டார்கள். அதனால் அவன் மனவெறுப்பும் கோபமும் அடைந்து, எனக்குத் தகுந்த துணையிருந்தால் நான் மூவுலகமும் வென்றுபோடுவேனென்று சொல்லி ஒரு பெருங்காட்டுக்குப்போனான். அங்கே ஒருவன் புல் பிடுங்குவதுபோலப் பெரிய ஆறுவிருக்ஷங்களை வேரோடு பெயர்க்கக்கண்டு, நீ எனக்கு வேலைக்காரனாய் என்னுடன் வருவாயா என்றுகேட்

டான். அதற்கு அவன், இதோ இந்த விறகை வீட்டிலே போட்டுவிட்டு வருகிறேனென்றுசொல்லி, ஐந்துமரங்களை மற்றொரு மரத்தால் சேர்த்துக்கட்டித் தோளிலே தூக்கிக்கொண்டுபோய் வீட்டிலே போட்டுவிட்டு அவனண்டைவந்து அப்படியே போகலாமென்றான். அங்கிருந்து அவ்விருவரும் சிறிதுதூரம் போகையில், வழியே ஒரு வேடன் ஒற்றைமுழங்காலால் உட்காந்து துப்பாக்கியைக் கையிலெடுத்து ஏதோ ஒன்றைக் குறிபார்த்து அடிக்கச் சித்தமாயிருந்தான். அதுகண்டு அந்த யஜமானன் இப்போது நீ எதைக் குறிபார்த்திருக்கிறாயென்று கேட்க, அவன் இங்கிருந்து இரண்டுமைல் தூரத்தில் ஒரு பெரிய ஆலமரத்திலிருக்கிற பக்ஷியின் இடதுகண்ணைக் குறிபார்த்திருக்கிறேனென்றான். அது கேட்டு யஜமானன், அப்படியா! ஆனால் நீயும் எங்களோடு வா; நாம் மூவரும் சேர்ந்தால் உலகத்தை எளிதிலே வெல்லலாம் என்று சொன்னான்.

அப்படியே அம்மூவரும் புறப்பட்டுப்போகையில், அங்கே ஓரிடத்தில் ஏழு காற்றுயந்திரங்கள் வெகு வேகமாய்ச் சுற்றிக்கொண்டிருந்தன. அப்பொழுது அவ்விடத்தில் காற்றேயில்லை; ஒரு துரும்புகூட அசையவில்லை. அதுகண்டு அவர்கள், இதென்ன! சிறிதும் காற்றில்லாத இவ்விடத்தில் இந்த யந்திரம் எப்படிச் சுற்றுகிறதென்று அதிசயப்பட்டுக்கொண்டே அப்புறம்போனார்கள். இரண்டுமைல் தூரம்போகையில் அங்கே ஒருவன் ஒரு மரத்தின் மேல் உட்காந்து ஒரு மூக்கை அமுக்கிக்கொண்டு மற்றொன்றால் ஊதிக்கொண்டிருந்தான். அவனைக்கண்டு அந்த வீரன், நண்பனே! நீ இங்கென்னவேலை செய்கிறாயென்று கேட்க, அவன், இது உனக்குத் தெரியவில்லையா? இங்கிருந்து இரண்டுமைல் தூரத்துக்கப்பால் ஏழு யந்திரங்கள் இருக்கின்றன; அவை சுழல்வதற்காகவே நான் இப்படி ஊதுகிறேனென்றான்.

ஓ! உன்செய்கை வெகு விசித்திரமாயிருக்கிறது! நாம் நால்வரும் ஒன்றுகூடினால் நொடிப்பொழுதில் உலகத்தையெல்லாம் வெல்லலாம் என்றுசொல்லி அவனையும் அழைத்துக்கொண்டுபோனான். அதற்கப்பால் சிறிதுதூரத்தில் வேறொருவன் ஒரேகாலால் நின்று மற்றொன்றை மடக்கிக்கொண்டிருந்தான். அவ்வழியாய்ப் போனவர்களுடைய தலைவன் அவனைப்பார்த்து, நீ ஏன் இப்படி நிற்கிறாயென்று கேட்க, அவன் நான் பந்தயம் ஓடுகிறவன்; அதிக வேகமாய் ஓடக்கூடாதென்பதற்காக ஒருகாலை இப்படி மடக்கிக்கொண்டிருக்கிறேன். நான் இரண்டு காலாலும் ஓடவேணுனால் எனக்குப் பறவைகளும் ஈடல்லவென்றான். நாம் ஐவரும் கூடினால் எதைத்தான் ஜயிக்கக்கூடாது; நீயும் எங்களோடு வாவென்று அவ்வீரன் அவனையும் அழைத்துக்கொண்டுபோனான்.

அங்கிருந்துபோகையில் மார்க்கத்தில் மற்றொருவன் தலைப்பா

கையைக் காதின்மேல் நிறுத்திவைத்திருக்கக்கண்டு அவர்களுடைய தலைவன், ஓகோ! இதென்னமரியாதை! இதென்னமரியாதை! உன்னைப்பார்த்தால் முழுமூடனாய்த் தோன்றுகிறதே! பாகையைக் காதின்மேலேதான் வைத்துக்கொள்வார்களோ என, அவன் அப்படியில்லை; நான் பாகையை நேராய்த் தரித்துக்கொள்வேனானால், குளிர்ச்சி மிகவும் அதிகரித்து உலகமெல்லாம் உறைந்துபோம்; ஆகாயத்திலுள்ள பறவைகளெல்லாம் உறைந்து இறந்து கீழே விழும்; அதற்காகவே இப்படி வைத்திருக்கிறேனென, ஆனால் நீயும் எங்களோடுவா, நாம் ஆறுபேரும் ஒன்றாய்ச்சேர்ந்தால் நமக்கு உலகில் அசாத்தியமானவை இல்லவே இல்லை என்றுசொல்லி அவனையுங்கூடச் சேர்த்துக்கொண்டார்கள்.

அவ்வாறுபேரும் கூட்டாளிகளாகி ஒரு பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அவ்விடத்தரசன், எவனொருவன் தன் மகளுக்குச்சரியாக ஓடிப் பந்தயத்தைஜயிக்கிறானோ, அவனே அம்மகளைக் கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்றும், அப்படிப் பந்தயத்தை இழந்துபோவானானால் உடனே தலையையும் இழந்துபோகவேண்டுவதுதானென்றும் பிரசித்தப்படுத்தியிருந்தான். அதைக்கேள்விப்பட்டு அந்த வீரன், தான் தனக்குப் பதிலாகத் தன் சேவகனை ஓடச்செய்வதாய் அரசனுக்குத் தெரிவிக்க, அவன், அந்தப் பந்தயம் தப்பிப்போகிறபக்ஷத்தில் உங்கள் இருவருடைய உயிரையும் கொடுத்துவிட உனக்குச் சம்மதமானால் அப்படியே செய்யலாம் எனக்கேட்டு, அந்த வீரன் அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்து, பந்தயமோடுகிறவனை அழைத்து, ஜாக்கிரதையாய் இரண்டு காலாலும் நடந்துபோய்ப் பந்தயத்தைச் சயித்துவரும்படிச் சொன்னான். சிறிதுதூரத்துக்கப்பாலுள்ள ஊற்றுக்குப்போய் எவன் முன்னதாய் நீர் எடுத்துக்கொண்டுவருகிறானோ அவனே ஜயித்தவனென்று ஏற்பாடு. அப்படி ராஜகுமாரத்தியும் பந்தயமோடுகிறவனுமாக ஒரேகாலத்தில் கையில் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அரசன் வீட்டினின்றும் புறப்பட்டார்கள். அரசன்மகள் இரண்டோரடி எடுத்துவைப்பதற்குமுன்னமே ஓட்டக்காரன் கண்ணுக்குத்தெரியாமல் போய்விட்டான். அவன் போவது காற்று ஓடுவதுபோலிருந்ததேயொழிய வேறில்லை. அவன் ஒருநொடியில் அவ்வூற்றுபோய்ச் சேர்ந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு உடனே திரும்பிவிட்டான். பாதிவழி வரும்போது உடம்பு கொஞ்சம் ஒய்ச்சலாயிருந்ததனால், சற்றே இளைப்பாறிவிட்டுப்போவோமென்று அண்டையிலிருந்த குதிரை மண்டையோடொன்றைத் தலையணையாக வைத்துக்கொண்டு, பாத்திரத்தைக் கீழேவைத்துவிட்டுப் படுத்தான். அந்த மண்டையோடு தலையிலுறுத்தும்படி இருந்ததனால் மெய்மறந்து தூக்கம் வராதென்பது அவன்கொண்ட கருத்து. ஆயினும் படுத்துக்கொண்டவுடனே நன்றாய்த் தூங்கிப்போனான்.

மற்றவர்களைவிட அதிகவேகமாய் ஓடுகிறவளான ராஜகுமாரத்தியும் சீக்கிரமாய் அவ்வூற்றுக்குப்போய்த் தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்பிவருகையில், நடுவழியில் அவன் கும்பகர்ணன் போலக் குறட்டைவிட்டுத் தூங்குவதைக்கண்டு அவன் தோற்றுப்போனுனென்று சந்தோஷமாய், அவன் பாத்திரத்தில் வைத்திருந்த தண்ணீரை ஊற்றிவிட்டு வெகுவேகமாய் ஓடிவந்தாள். ராஜமாளிகையின் உப்பரிகைமேலிருந்து வேடன் தன் கூர்மையான கண்களால் இதைப் பார்த்துக்கொண்டிராவிட்டால் அவர்கள் ஏமாந்துபோனதுதான். அந்தப் பெண் அப்படி முன்னதாய் ஓடிவருவதை அவன் தெய்வாதீனமாய்ப் பார்த்து, உடனே தன் துப்பாக்கியைக் கெட்டித்து, அந்த ஓட்டக்காரன்மேல் சிறிதும்படாமல் அவன் தலையின்கீழிருந்த மண்டையோடுமட்டும் அப்புறம் ஓதுங்கிப்போய்விடும்படி அடித்தான். தக்ஷணமே அவன் விழித்துக்கொண்டு பார்த்து, தன் பாத்திரத்துத் தண்ணீர் ஊற்றப்பட்டிருப்பதையும், அந்தப் பெண் வெகுவேகமாய் ஓடுவதையும் கண்டான். ஆயினும் அவன் தைரியத்தைக் கைவிடாமல் சரேலென்று மறுபடியும் ஊற்றுக்குச்சென்று ஜலமெடுத்துக்கொண்டு அந்தப் பெண்ணுக்குப் பத்துநிமிஷம் முன்னதாகவே வீடுவந்துசேர்ந்து, என் ஓட்டத்தைப் பார்த்தீர்களா? ராஜாத்தி ஓட்டத்தில் ஒப்பற்றவளென்றீர்களே என்றுன்.

அதுகண்டு அவ்வரசன், யாரோ ஒரு சாதாரணமான வழிப்போக்கனுக்கா நம்முடைய அருமைமகளைக் கொடுத்துவிடுகிறதென்று விசனமடைந்தான். அந்தப் பெண்ணுக்கும் அவனுக்கு வாழ்க்கைப்படச் சிறிதும் சம்மதமில்லை. அதனுல் இன்னதுசெய்கிறதென்று தோன்றுமல் அவர்கள் நெடுநேரம் ஆலோசித்து, கடைசியில் அவர்களை ஒழிக்க ஒருவிதமாய்த் தீர்மானஞ்செய்தார்கள். அந்தப்படியே அரசன் அவ்வாறுபேரையும் அழைத்து, நீங்கள் எல்லாரும் இன்று திருப்தியாய்ப் புசித்து மிகக் களிப்புற்றிருக்கவேண்டுமென்றுசொல்லி, தரை சுவர் கதவுமுதலியவெல்லாம் இரும்பினுலேயே அமைத்த ஒரு சிற்றறையில் அவர்களை வரவழைத்து, அங்கே அவர்களுக்கு வேண்டிய போஜனங்களை யதேஷ்டமாய் வைத்து, உடனே கதவைப் பூட்டிக்கொண்டு வந்துவிட்டான். வெளியே வந்ததும் ஒரு வேலைக்காரனை அழைத்து, அவ்வறையின் கீழ் அகோரமாய்த் தீமூட்டி அவ்வறைமுழுதும் பழுக்கக்காய்ந்து போகும்படிச் செய்யவேண்டுமென்று கட்டளையிட, அவனும் அப்படியே செய்தான். இரண்டொருநிமிஷத்தில் அறைக்குள் இருப்பவர்க்கு மிகவும் தாபமுண்டாகவே, அவர்கள், இதென்ன? இங்கே இவ்வளவு தாபமாயிருக்கிறது; சாப்பாட்டினுல் இப்படியிருக்குமோவென்று முதலில் நினைத்தார்கள். வரவரத் தாபம் அதிகமாகவே, வெளியே ஓடிப்போகப்பார்த்தார்கள். அரசன் முன்னமே

கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டானே; எப்படி ஓடிப்போகலாம்! அதுகண்டு அவர்கள் இது அரசனுடைய சூதுதானென்று தெரிந்துகொண்டார்கள். அப்போது அவர்களுள் ஒருவனுன பாகைக்காரன் எழுந்து, இதற்கு நாமேன் சிந்திக்கவேண்டும்? இதோ நான் ஒரு நொடியில் அரசனுக்குத் தீராவெட்கமுண்டாகும்படி இந்தத் தீயெல்லாம் தணிந்துபோகக் குளிர்ச்சி உண்டாக்குகிறேனென்றுசொல்லிப் பாகையைத் தலையில் நேராகத் தரித்துக்கொண்டான். உடனே அதிக குளிர்ச்சியுண்டாகி அந்த வெப்பமெல்லாம் அடங்கிப்போயின. அங்கிருந்த உணவு முதலியவைகூடக் கட்டிகட்ட ஆரம்பித்தன. இரண்டுமணிநேரங்கழித்து, அவர்களெல்லாம் வெந்துபோயிருப்பார்களென்று, அரசன் அதைப் பார்க்க வந்து கதவைத் திறந்தான். அவர்கள் சிரிப்பும் விளையாட்டுமாய் உள்ளே உட்கார்ந்திருந்தார்கள். கதவைத்திறந்தவுடனே அவர்கள், உள்ளே அதிக குளிர்ச்சியாயிருக்கிறது; வெளியேவந்து கொஞ்சம் சூடாக்கிக்கொள்ளலாமாவென்று எழுந்து வெளியேவந்தார்கள். அதுகண்டு அரசன் மிகக்கோபங்கொண்டு, கீழே கையோயாமல் கட்டைபோட்டுப் பெருந்திவளர்த்திக்கொண்டிருந்த வேலைக்காரனண்டைபோய், நான் சொன்னதை நீ ஏன் சரியாய்ச் செய்யமாட்டேனென்கிறுயென, அவன், ஐயா தங்கள் கட்டளைக்கு நான் சிறிதும் குறுக்குச்செய்யவில்லையே! இதோ இந்தத் தீயை வந்து பாருங்களென்றுன். அரசன் அதை நன்றுய்ப்பா[illegible] களை அந்தவிதமாக வெல்லத் தன்னுல் ஆகா[illegible] கொண்டான்.

பின்பு அவர்களைப் போக்க யாதொருவழியும் தெ[illegible] சன் சிலநாள் தடுமாறிக்கொண்டிருந்தான். மறுபடியும் பு[illegible] யோசனைசெய்து அந்த வீரனை அழைத்து, பொருள்வாங்கிக்கொண்டு என் மகளை விட்டுவிட உனக்குச் சம்மதந்தானு? அப்படியானுல் உனக்கு வேண்டுமளவு பொருள்கொடுக்கிறேனென்றுன். அதற்கு அவன், தங்கள் சித்தம் என் பாக்கியமையா! என் வேலைக்காரர்களுள் ஒருவன் எடுக்கும்படியான பொருள்கொடுக்கச் சம்மதமானுல், உம்மகளை நீங்கள் சுகமாய் வைத்துக்கொள்ளலாம் என்றுன்.

அதைக்கேட்டு அரசன் மிகவும் சந்தோஷமடைந்தான். வீரனும் பதினைந்துநாள் கழித்துவந்து பணத்தை வாங்கிக்கொண்டு போகிறேனென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டுபோய் அவ்வூரிலுள்ள தையற்காரர் அனைவரையும் அழைத்து அவர்களெல்லாரும்சேர்ந்து பதினைந்துநாள்வரையில் இராப்பகல் ஓயாமல் தனக்கு ஒரு பெருங்கோணி தைத்துக்கொடுக்கவேண்டுமென்றுன். அப்படியே ஒன்று தைத்தானதும், முன் ஆறுமரங்களைப் பெயர்த்து விறகுகட்டாய்க்கட்டி வீட்டுக்குக்கொண்டுபோனவன் கையிற்கொடுத்து, அரசனண்டைபோய்வரும்படி அனுப்பினுன். அவன் அந்

தப் பையைத் தூக்கிக்கொண்டுவந்து எதிரே நிற்கக்கண்டு அரசன்,
இவ்வளவு பெரியகோணியைத் தூக்குகிறவன் எவ்வளவு பலசாலி
யாயிருக்கவேண்டுமென்று அதிசயித்து, ஐயோ! இவன் தூக்கும்
படியான பொன்னுக்கு நாம் எங்கேபோகிறதென்று திகிற்பட்
டான். ஆயினும் சொன்னசொல் தவறக்கூடாதேயென்று முத
லில் நூறுபாரம் நிறையுள்ள பொன்கட்டியொன்றைக் கொண்டு
வரச்சொன்னான். அதை அநேகர் தூக்கமாட்டாமல் தூக்கிக்
கொண்டுவந்து கீழேபோட்டதும் அவன் இடதுகையால் எடுத்
துக் கோணிக்குள் போட்டுவிட்டு, இதென்ன துளித்துளியாய்க்
கொண்டுவருகிறீர்களே! இப்படி எந்நேரம் கொண்டுபோடுகிறது
என, அரசன், இந்தப் பைநிரம்பப் பொன் நாம் எங்கிருந்துகொ
டுக்கிறது என்று பெருஞ்சிந்தைகொண்டு, கொஞ்சங்கொஞ்சமாய்த்
தன் பட்டணத்துப் பொருள்கள் எல்லாவற்றையும் கொண்டுவரக்
கட்டளையிட்டான். எவ்வளவுகொண்டுவந்தாலும் அந்த வீரன்,
எல்லாவற்றையும் தன் கோணிக்குள் போட்டடைத்துவிட்டு,
இதெவ்வளவு! இன்னும் கொண்டுவாருங்கள்; கொண்டுவாருங்கள்
என்று சொல்லிக்கொண்டேயிருந்தான். எவ்வளவுபொருள் கொ
ண்டுவந்துபோட்டாலும் அந்தக் கோணியில் பாதிகூட நிரம்ப
வில்லை. அதைக்கண்டு அரசன் இதென்ன சங்கடமென்று, பதி
[illegible]ண்டிகள்நிரம்பப் பொருள்கொண்டுவரச்சொல்ல, அந்த
[illegible] வண்டிகள் வண்டிக்காரன் எருது எல்லாவற்றை
[illegible]ன் கோணியில் அடைத்துவிட்டு, இதென்ன
[illegible]க்கிறது? இந்தச் சிறுகோணியை நிரப்ப
[illegible] சாமபோ தவலையோ, உங்கள்கையில் எது அகப்பட்
[illegible]தைக் கொண்டுவந்துபோடுங்கள்; எப்படியாவது எனக்கு
இந்தக் கோணியை நிரப்பினால் போதுமென்று சொன்னான்.
அப்படியே அவர்கள் பலபொருள் கொண்டுவந்தார்கள். அப்
போதும் அந்தக் கோணி நிரம்பவில்லை. அதற்குமேல் கொண்டு
வர அந்தப்பட்டணத்தில் வேறொரு பொருளுமில்லையென்று கண்டு,
இந்தக் கோணியை நிரப்ப உங்களாலாகாதா? ஆனால் நான் இதை
இவ்வளவோடு கட்டி எடுத்துக்கொண்டுபோகிறேனென்று சொல்லி
அவன் அதைத் தூக்கித் தோளிலேபோட்டுக்கொண்டு போயினான்.
அவனுடைய தோழர்களும் கூடவே போய்விட்டார்கள்.

தன் நாட்டுப்பொருள்களையெல்லாம் ஒருவன் இப்படி அநி
யாயமாய்க் கொண்டுபோவதுகண்டு அரசன் மனம்பொறாமல் அதிக
கோபங்கொண்டு, எப்படியாவது அவ்வாறுபேரையும் பிடித்துக்
கோணிகொண்டுபோகிறவனை எந்த வருத்தமாவதுபட்டு இழுத்
துக்கொண்டுவரவேண்டுமென்று தன் சேனைகள் யாவற்றையும் சித்
தப்படுத்தி அனுப்பினான். அப்படியே அந்தச் சேனாவீரர்கள்
வேகமாய்ப்போய் அவர்களைப்பிடித்து, கோணியைக் கீழே போடு

கிறீர்களா? இல்லாவிட்டால் பரலோகம்போய்ச் சேருகிறீர்களா என்றார்கள்.

அதைக்கேட்டு ஒற்றைமூக்கினால் எழுயந்திரங்களை ஆட்டுவித்த வீரன், அப்படியானால் ஆகாயத்தில் அழகாய்க் கூத்தாடிக்கொண்டு நீங்களே பரலோகத்திற்குப் போங்களென்றுசொல்லி, உடனே ஒருபக்கத்து நாசியை அமுக்கிக்கொண்டு மற்றொன்றினால் ஊதினான். அந்தக் காற்றுவேகத்தால் அவ்வளவுபேரும் ஆகாயத்திற்கிளம்பி, ஒருவன் கடலிலும் ஒருவன் காட்டிலும் ஒருவன் மலையிலுமாய் இப்படித் திக்குக்கொருவராகப் போய்விழுந்து இறந்துபோனார்கள். அந்தச் சேனைத்தலைவனான ஒருவன்மட்டும் அவன் கால்களில்விழுந்து தன் உயிரைமாத்திரம் மிகுத்தும்படி வேண்டிக்கொள்ள, அந்த வீரன் அவனிடத்தில் கொஞ்சம் கருணைகூர்ந்து, இப்படி எவ்வளவு சேனைவந்தாலும் எல்லாவற்றிற்கும் இதுதான் கதியென்று அரசனுக்குச் செய்திசொல்லி, அவனைமாத்திரம் மெதுவாய் ஊதி அரசன் அரண்மனையிலேபோய் விழும்படிச் செய்தான். அதைக்கேட்டு அரசன் மிகவும் விசனமடைந்து, இவ்வளவோடாவது நாம் பிழைத்தாற்போதும்; அவர்கள் சுகமாய்ப் போகட்டுமென்றான். பின்பு அந்தத் தோழர்கள் ஆறுபேரும் அந்தப் பொருள்களை ஆறுபங்காகப் பிரித்தெடுத்துக்கொண்டு ஆயுளளவும் சுகமாயிருந்தார்கள்.

சமாசாரம்.

ரம்பாவில் நடக்கும் சச்சரவு.—ராஜமகேந்திரபுரத்திற்குச் சற்[illegible] ரம்பாவென்னும் மலைநாட்டில் அநேகம் மறவர்கள் தங்களுக்குள் [illegible] னென்றும் குடிகளென்றும் ஏற்படுத்திக்கொண்டு நெடுநாளாய்ச் சுதந்திரமாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது சில மாதங்களுக்குமுன் அதிகாரிகள் அவர்களோடு ஏதோ ஒருவித நூதன ஏற்பாடு செய்யப்போக, அதனால் அவர்கள் அதிருப்தியடைந்தவர்களாய்ப் போலீசாரை எதிர்த்து ஆயுதபாணிகளாக வெளிப்பட்டு அண்டையிலுள்ள ஊர்களில் கொள்ளையிடப் புகுந்தார்கள். அவர்களைப் பிடிக்கப்போன போலீசு சேவகர்களையெல்லாம் அடித்துத் துரத்திவிட்டார்கள். அவர்கள் மிகவும் பலசாலிகள்; பழையமாதிரியாய் அம்பும் வில்லும் வெட்டுக்கத்தியும் ஒருவிதக் கோடரியும் ஆயுதமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மலைநாட்டினுட்புகுந்து அவர்களைப் பிடிப்பது மிகவும் கடினம். மேலும் அங்கேபோனால் உடனே சுரம் உண்டாகின்றது. அவர்களை வெல்லும்படி இரண்டு கப்பல் இங்கிருந்துபோக, அவற்றுள் ஒன்றை அவர்கள் கோதாவரிஆற்றில் அமிழ்த்திவிட்டார்கள். இன்னும் இங்கிருந்தும் ஹைதராபாத்து செக்கந்தராபாத்துமுதலிய விடங்களிலிருந்தும் சேனைகள் அவ்விடத்துக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கிற ஆரவாரத்தைப்பார்த்தால் இந்தச் சிறுசண்டை பெருஞ்சண்டையாய் முடியுமென்று தோன்றுகிறது. ஆப்கனிஸ்தானத்துச் சண்டை முடிந்ததும், ஆப்பிரிக்காவின் சண்டை சமாதானத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுங்கண்டு, பூமியில் சண்டையே இல்லாமலிருக்கலாமாவென்றுதான் இச்சச்சரவு துவக்கமானதுபோலும்.

Printed at the S. P. C. K. Press, 1879.

யோகசாலைகளிலும் கனவான்களுடைய வீடுகளிலும் சுலபமாய்க் காற்று உண்டாக்கிக்கொள்வதற்கு வெகு சகாயமாய்விடும். தையல்முதலிய பல கைத்தொழில்களும் மின்சாரத்தினாலேயே சுலபமாய்ச் செய்யும்படியாகுமெனக் காண்கிறது.

இவையெல்லாவற்றுள்ளும் மிகவும் அதிசயமான மின்செய்கை மற்றொன்று உண்டு; அதாவது மின்னொளிவிளக்கு. மின்சாரத்தைக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட பல காரியங்களுள்ளும் இதைப்போல அவ்வளவு உபயோகமானதும் அதிசயமானதும் மற்றொன்று இராதெனத் தோன்றுகின்றது.

ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் இந்த மின்னொளிவிளக்கு முதல் முதல் பாரிஸ்நகரத்தில் புதிதாய்க்கண்டுபிடிக்கப்பட்டது. பின்பு அங்கே வெகுகாலமாய் வழங்கிவந்த எண்ணெய் மெழுக்குவர்த்தி முதலிய பழைய விளக்குக்கருவிகள் கொஞ்சம் கொஞ்சமாய் நீக்கப்பட்டன. அது அத்தேசத்தில் நன்றாய்ப் பரவிச் சாதாரணமாய்ப்போமளவும், லந்தன்நகரத்திலாவது மற்றெந்தவிடத்திலாவது ஒருவரும் அம்மாதிரி செய்துபார்க்க முயலவேயில்லை. இப்பொழுது அவ்வொளிவிளக்கின் பெருமையை நாம்கூடக் கண்ணாரக்கண்டு களிக்கும்படியாயிற்றல்லவா? இச்சென்னைமாநகரில் பீபில்ஸ்பார்க்கென்னும் சிங்காரத்தோட்டத்திலே சனிவாரந்தோறும் மாலையில் வாத்தியமேடையைச்சுற்றி மிகவும் அலங்காரமாய் மின்னொளிவிளக்குகள் பிரகாசிப்பதை இவ்விடத்தில் அநேகர் யானைக்குவேநந்தித்திருக்கலாம். அங்கே வாத்தியமேடையைச்சுற்றி வார்கள். இதும், மத்தியில் ஒரு விளக்கும்ஆக ஆறுவிளக்குகளே அவை ஆப்பிரிட்டிருக்கின்றன; ஆயினும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சந்திரன் உதித்தாற்போல எத்தனை தூரத்துக்கெத்தனைதூரம் எவ்வளவு அழகாய்ப் பிரகாசிக்கின்றன!

ஐரோப்பாவில் அதிக சமர்த்தர்களான சாஸ்திரிகள் பலர் காஸ் என்னப்பட்ட அக்கினிவாயுவுக்குப் பதிலாட மின்சாரத்தையே கொண்டு பலகாரியங்களையும் நடத்திக்கொண்டுபோகவேண்டுமென்று முயன்றுவருகிறார்கள். அவர்கள் இன்னும் நன்றாய்க் காரியசித்தி பெறவில்லையென்றாலும், இந்தப் புதுவிளக்கு சாதாரணமாய் வீடுகளிலே கூடத் தீபாலங்காரத்திற்கு உபயோகப்படும்படியான நிலைக்கு வருவதற்குள் எவ்வளவோ அதிசயங்கள் கண்டுபிடிக்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. சாதாரணமாய் உச்சவகாலங்களிலும், ஆட்டம் முதலிய பல விநோதங்களுக்காக இரவில் சபைகூடுகிறகாலங்களிலும், இவ்விதமான விசேஷகாலங்களிலெல்லாம் தீபாலங்காரம் செய்வதற்கு இதைவிட அற்புதமாய் ஏற்றவிளக்கு வேறொன்றுண்டோ? சிலநாளைக்குமுன் இச்சென்னையில் ஆட்டிய வில்ஸனுடைய சிறந்த சர்க்கஸ் ஆட்டத்தை அநேகர் பார்த்திருப்பார்களே? அப்போது இராக்காலங்களில் இம்மின்

னொளிவிளக்கு அமைத்திருந்தது எவ்வளவு அழகாயிருந்தது! ஆட்டத்தைப்பார்க்க ஆவல்கொள்ளாதவர்கள்கூட விளக்கின் அதிசயத்திற்காகப்போய்ப் பார்த்தார்களல்லவா? மேலும் இத்தேசத்தில் திருவிழாமுதலிய பல காலங்களில் தீவட்டிகளாலும் விளக்குகளாலும் பலவிதமான சேதங்கள் உண்டாயிருக்கக் கேட்டிருக்கிறோமே; மின்னொளி விளக்கானால் அப்படிப்பட்ட தீங்குகளுக்குச் சிறிதளவாவது இடமுண்டா? இதுவரையில் ஐரோப்பாவில் சிறந்தவிளக்காக வழங்கிவந்த அக்கினிவாயுவிளக்கைப் பார்க்கிலும் இவ்விளக்கு பலவகையிலும் நயமானதென்கிறார்கள். முப்பத்துநாலாயிரம்ரூபாய் விலையுள்ள ஒரு யந்திரத்தைக்கொண்டு, ஆயிரத்து ஐந்நூற்றுநாற்பதுகஜம் நீளமும் நாற்பத்துநான்கு கஜம் அகலமும் உள்ள ஒரு வெளியில் முப்பத்தாறு மின்னொளி விளக்கேற்றினதாய்ச் சீமையில் ஒருவர் சொல்லுகிறார். அதனால், சாதாரணமான விளக்கு இரண்டாயிரம் விளக்கேற்றினால் எவ்வளவு வெளிச்சமுண்டாகுமோ அவ்வளவு வெளிச்சமுண்டாயிற்றாம். அந்த யந்திரத்தை ஆட்டுவதற்கு வேண்டியசெலவும் மேல் விசாரணைச்செலவுமாய் மணிக்கு ஐந்தேகால் ரூபாய் ஆகின்றதாம்.

இம்மின்னொளிவிளக்கு அக்கினிவாயு விளக்கைப்பார்க்கிலும் மிகச் சிறந்ததென்பதுமாத்திரமேயல்ல, அதைப்போலத் தீங்கு விளைவிக்கத்தக்கதன்று; ஏற்றும்போதாகட்டும் அணைக்கும்போதாகட்டும், அதைப்போலக் கெட்டநாற்றம் ஒன்றும் இதில் உண்டாவதில்லை. மற்ற விளக்குகளானால் வெப்பம் அதிகமாயி... மின்னொளிவிளக்கில் வெப்பம் சிறிதும் தோன்றுவ... ணுக்குக் குளிர்ச்சியான அழகிய காந்தியொன்று அ... மந்திருக்கின்றது. விளக்கு வெடிப்பதற்கு ஏதுவேயில்லை. ஏககாலத்தில் ஏற்றும்படியாகவும் அணைக்கும்படியாகவும் இருப்பதனால், அதற்குச் செலவழிக்கவேண்டியகாலமும் செலவும் மிகுதியாகின்றது. தூரமானவிடங்களிலும் தெருக்களிலும் சுலபமாய் ஏற்றுவதற்கு இவ்விளக்கு அனுகூலமானதன்றே எனச் சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள். அப்படிப் பொதுவாய் எங்கும் ஏற்றுவதற்கு அனுகூலமானதல்லவென்றாலும், பெரிய சபைகளிலும் நாடகசாலைகளிலும் கோயில் முதலானவிடங்களிலும் தீபாலங்காரம்செய்வதற்கு இதைப்போல் ஏற்றவிளக்கு வேறுண்டோ? இத்தனைக்கும் மின்னொளிவிளக்கு இப்போதுதான் புதிதாய் ஆரம்பித்ததல்லவா? நாளடைவிலே இதன் வருத்தமெல்லாம் நீங்கி வெகு சுலபமான கருவியாய்விடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

சாதாரணமாய்த் தெருக்களிலும் வீடுகளிலும்கூட இதேவிளக்கை உபயோகப்படுத்தும்படி இப்போது பல சோதனைகள் நடந்து வருகின்றன.

யானை.

இப்பூமண்டலத்தில் உள்ள பலவிதப் பிராணிகளுள்ளும் மிகப் பெரிய ஜந்துவாயிருக்கின்ற யானை இத்தேசத்திலும் ஆப்பிரிக்காவிலும் விசேஷித்திருக்கின்றன. யானை சிறந்த வலிமையும் நுட்ப புத்தியும் சாமர்த்தியமும் பொறுமையுமுடையது. அதற்கே கோபம்வந்தாலும் சரி, ஒருவரால் ஏவப்பட்டாலும் சரி, அப்போது யானைக்கு எதிர் ஒன்றுமே கிடையாது; பழக்கினால் அதைப்போல மனிதர்களுக்கு அடங்கி ஆட்பட்டிருக்கிற பெரியஜந்து வேறொன்றுமில்லை.

யானைகள் சுயேச்சையாய்க் காடுகளில் திரிந்துகொண்டிருக்கும்போது, தலைமையாய் ஒரு யானையால் மற்றவையெல்லாம் நடத்தப்பட்டுக் கூட்டம்கூட்டமாய்த் திரியும். அப்படியிருக்க ஒவ்வொரு யானை வெறிபிடித்துத் தனியே ஓடிப்போவதுமுண்டு. தந்தத்திற்காக யாராகிலும் வேட்டையாடவாவது யானைபிடிக்கவாவது வந்தால், அதை நன்றாய்த் தெரிந்துகொண்டு யானைகள் அவர்கள் கையில் அகப்படாமல் ஓடிப்போம். அதனால் யானைபிடிக்க வேண்டியவர்கள் செய்யும் உபாயமென்னவெனில், வீழ்ந்தயானை மறுபடி ஏறக்கூடாதபடி பெரியதாய்ப் படுகுழிவெட்டி அதில் யானைக்குவேண்டிய இரைபோட்டுத் தந்திரமாய்ப் பிடிக்க முயல்வார்கள். இத்தேசத்தில் பெண்யானைகளுக்குக் கொம்பு வளர்வதில்லை; ஆப்பிரிக்காதேசத்தில் பெண்யானைகளுக்குக்கூடக் கொம்பு நீண்டு வளர்வதுண்டு.

இத்தேசத்தில் முற்காலத்திலே யானைகளை வெகு நன்றாய்ப் பழக்கிப் பலவிதமாய் உபயோகப்படுத்திவந்தார்கள். உழைக்கும்போது ஊக்கமும் ஆக்கிரகமும் யானைக்கு மிகவும் அதிகம். சில நாளைக்குமுன்னே ஒரு கப்பல் கரையோரத்திற்கு வருவதற்காக அதில் ஒரு யானையைக் கட்டியிழுக்கச்செய்தார்கள். எங்கேயோ தடைபட்டு அந்தக் கப்பல் சிறிதும் நகராமற்போகவே, யஜமானன் மிகுந்த கோபத்துடன், இந்தச் சோம்பேறியானையை அவிழ்த்துத் துரத்திவிட்டு மற்றொருயானையைக் கொண்டுவந்து கட்டென்று கடுமையாய் உரத்துச்சொல்ல, அந்தக் கடுஞ்சொல்லைக் கேட்டுப்பொறாமல், அவ்யானை முன்னிலும் அதிக ஊக்கத்துடன் அதை இழுத்துப் பார்த்துக் கூடாமையால் மண்டையை உடைத்துக்கொண்டு இறந்ததாம்.

பூர்வகாலத்தில் சண்டைக்கே யானைகள் விசேஷமாய்ப் பழக்கப்பட்டிருந்தன. ஒன்றுக்கொன்று நேராய் யானையே சண்டைசெய்வதுமுண்டு; போர்வீரர்களுக்கு ஏறிச்செல்ல வாகனமாயிருப்பது

முண்டு; ரதங்களை இழுக்க உபயோகப்படுவதுமுண்டு. இத்தேசத்து ராஜாக்களிடத்தில் சாதாரணமாய்ப் பல யானைகள் இருப்பதோடுகூடப் பட்டத்து யானையென்று மிகவும் சிறப்புபெற்று ஒரு யானை இருப்பதுண்டு. அது எப்போதும் பொன் வெள்ளி ரத்தினம் முதலியவைகளால் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருக்கும். விசேஷகாலங்களில் அதன்மேல் அம்பாரிபோட்டு ஏறிக்கொண்டு அரசர்கள் ஊர்கோலம் வருவார்கள். சிலகாலங்களில் கொலைக்குற்றவாளிகளைக் காலால் மிதித்துக் கொன்றுபோடவும் அந்த யானையை உபயோகப்படுத்துவதுண்டு. மேலும் தேவாலயங்களுக்குத் திருமஞ்சனம் கொண்டுவரவும், உச்சவகாலங்களில் மேலே வாத்தியங்கள் ஏற்றி வாசித்துக்கொண்டுபோகவும் யானைகள் பலவிதமாய்ப் பயன்படுகின்றன. 'யானை இருந்தாலுமாயிரம் செத்தாலும் ஆயிரம்' என்கிறபடி எப்போதும் மன்னவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகப்படுவதான யானைமேல் அம்பாரிபோட்டு ஏறி அலங்காரமாய் நடாத்தும் காட்சிப் படத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்தனுப்பி இருக்கிறோம்.

சுதேசசரித்திரவிலாசம்.

நூர்ஜிஹான் என்னும் பெண்ணரசி கதை (தொடர்ச்சி).

ஜிஹாங்கீர் ஒரு பெரிய யானையைக்கொண்டு ஷியர்ஆப்கனைக் கொல்லப்பார்த்து அந்தத் தடவையும் ஏமாந்துபோனானென்று சென்ற சஞ்சிகையிற் சொன்னோமே. இப்படி இன்னும் பலதடவை அவனைக் கொல்ல முயன்றும் பயன்படாமற்போகவே, அரசனுக்கு வெட்கமும் ரோஷமும் அதிகமாயிற்று; அதனால் அதிக ஆக்கிரகங்கொண்டு எவ்விதத்திலாயினும் அவனைக் கொல்வதே காரியமென்று ஒரே பிடிவாதங்கொண்டான்.

அரசன் கருத்து இப்படிப்பட்டதென்று அறிந்துகொண்டு வங்காளத்துக் கவர்னராயிருந்த ஒருவன் ஒருநாள் மிகக்கொடியவர்களான நாற்பதுவீரர்களை அழைத்துத் தக்க தருணம்பார்த்து ஷியர் ஆப்கனைக் கொன்றுவிட்டுவரும்படி அனுப்பினான். அப்போது ஷியர்ஆப்கன் தன் தைரியமும் பராக்கிரமமுமே தனக்குப் போதுமான துணையென்று தனிப்புறமான ஓரிடத்தில் வசித்துக்கொண்டிருந்தான். அண்டையில் ஒருவருமில்லாமல் இரவில் அவன் படுத்துத் தூங்குகிற தருணம்பார்த்து, தங்களுக்கு விசேஷ வெகுமதி கிடைக்கப்போகிறதென்கிற சந்தோஷத்தால் அவ்வீரர்கள் சிறிதும் அஞ்சாமல் ஓரேகூட்டமாய் அவன் படுத்திருந்த அறைக்குட்சென்று அவனைக் குத்தப்போனார்கள். அப்போது அவர்களுள் ஒருவன், அவர்கள் செய்யத்துணிந்த கொடுஞ்செயலைக்கண்டு

மனம்பொறுமல், அவசரப்படவேண்டாம்; நாம் மனிதர்களல்லவா! நாற்பது பேராய்க்கூடி ஒருவனைக் கொல்வது நியாயமா என்றான். அந்த அரவத்தைக் கேட்டுத் திடீரென்று ஷியர்ஆப்கன் விழித்துக் கொண்டுபார்த்து, அத்தனைபேரும் ஒரேமுகமாய்த் தன்னைக் கொல் லவந்து நிற்கிறார்களென்பதுகண்டு, சரேலென்றெழுந்து தன்மேல் சிறிதும் காயம்படாமல் அத்தனைபேரையும் தான் ஒருவனாகவே அடித்துத் துரத்தினான்.

இப்படி அவன் தன்னந்தனியே சிறிதும் அஞ்சாமல் அத்தனை பேரையும் அடித்துத் துரத்தினதைக்கேட்டு அசகாயசூரனென்று அவனுடைய பேரும் புகழும் உலகமெங்கும் பரந்தது. அவன் எங் கேபோனாலும் அங்கங்குள்ளவர்களெல்லாம் வெகு ஆச்சரியமாய் அவனைப் பார்க்க ஓடிவந்தார்கள். அவனுடைய பெருமைகளைப்பற் றிப் பல சரித்திரங்களும் பாட்டுகளுங்கூட உண்டாக்கப்பட்டன. பின்பு இப்படிப்பட்ட அபாயமான இடத்திலிருப்பது தகுதியல்ல வென்று ஷியர்ஆப்கன் பரதவனம்போய்ச் சேர்ந்தான்.

இந்தத்தடவை ஷியர்ஆப்கன் காட்டின வீரச்செயலையும் கேட் கவே அவனிடத்தில் ஆக்கிரகம் உள்ளடங்காமல் ஜிஹாங்கீர், முன்னிலும் சிறந்ததாய் மற்றொரு தருணந்தேடி எவ்விதத்திலாயி னும் அந்தப் பகைவனை வெல்லவேண்டுமென்று, வங்காளத்திலி ருந்த அதிகாரிக்குக் கட்டளையிட்டான்.

நாம் ராஜாங்கத்துக்கு வெகு தூரத்திலிருக்கிறோம்; இங்கே அரசனுடைய கொடுமைகளொன்றுக்கும் இடமில்லையென்று ஷியர் ஆப்கன் பரதவனத்தில் சுயேச்சையாய் வசித்துக்கொண்டிருக்கை யில், வங்காளத்து அதிகாரி தன் விசாரணைக்குட்பட்ட தேசங்க ளைப் பார்க்கப்போகிறதாய்ச் சாக்கிட்டு அளவற்ற சேனைகளுடனே பரதவனத்துக்குப் பயணப்பட்டான்; தன் உட்கருத்து இன்ன தென்பதைத் தன்னுடன் வருகிற வீரர்களுக்குமட்டும் ரகசிய மாய்க் குறிப்பித்திருந்தான். ஏறக்குறைய சமமான நிலையிலிருப்ப வர்களுக்குள் ஒருவனுக்கு விசேஷமாய்ப் பிரசித்தியுண்டாகக் கேட்டால் அவனிடத்தில் மற்றவர்கள் பொறாமைப்படுவது உலக வியற்கையல்லவா? ஷியர்ஆப்கனிடத்தில் எவர்க்கும் பொறாமை அதிகம். அதனால் அவ்வீரர்களெல்லாம் அந்தச் சூதுக்கு உட் பட்டுச் சந்தோஷமாய்ப் போனார்கள்.

அவர்கள் வருவதுகண்டு ஷியர்ஆப்கன், மனதில் யாதொரு விக ற்பமும் தோன்றாமல் சந்தோஷமாய் எதிர்கொண்டுவந்து, அவ் வதிகாரியோடு விநோதமாய்ப் பேசிக்கொண்டே அவர்களைத் தன் வீட்டுக்கு விருந்துண்ண அழைத்துக்கொண்டுபோனான். பாதி வழி போகையில் ஒரு வீரன் ஷியர்ஆப்கனுடைய குதிரையை ஈட் டியால் குத்தினான். உடனே சந்தேகமடைந்து அவன் மிகக் கோ பத்தோடு கண்களில் நெருப்புப்பொறிபறக்கச் சுற்றி விழித்துப்

பார்த்து, குதிரையைவிட்டுக் கீழேகுதித்துத் தனக்குக் கோபமூட்டினவனைத் தலையோடுதலையாய் நசுக்கிவிட்டு, அதிகாரியின் உத்தரவில்லாமல் இப்படி ஒருபோதும் நடந்திராதென்று யானைமேலிருந்த அம்பாரியைக் கீழேதள்ளி அவ்வதிகாரியையுங்கொன்று தனக்குச் சமீபத்திலிருந்த மற்றவர்களையும் ஒருவர்தப்பாமல் அடித்துவிட்டுச் சிங்கம்போல மிகவும் பயங்கரமாய் அங்கேயே நின்றான். அதுகண்டு மிருந்தவர்களெல்லாம் அண்டையில் நிற்கமாட்டாமல் ஓடி மூலைக்கொருவராய்ப் போய்நின்று அம்புகளாலும் துப்பாக்கிகளாலும் அவனை அடிக்க ஆரம்பித்தார்கள். அப்போதும் அவன் எதிர்த்துவருகிறவர்களை அடித்துக்கொண்டேயிருந்தான். ஆயினும் அத்தனைபேரும் தூரத்தில்நின்று ஒருசேர அடிக்க ஆரம்பித்தால், கையில் ஓராயுதமுமில்லாமல் அவன் தனியே என்னசெய்யமாட்டுவான்! கடைசியில் தனக்கு மரணகாலம் சமீபித்ததென்று கண்டு ஷியர்ஆப்கன் சுவாமியை மனதில் தியானம்பண்ணிக்கொண்டே நின்றான்; ஒரேதடவையில் ஆறு குண்டு மேலே வந்துவிழவே அதைப் பொறுக்கமாட்டாமல் கீழேவீழ்ந்தான். உலகத்தில் அசகாயசூரனுய்ப் பெரும்புகழ்பெற்றிருந்த கனவானுடைய வாழ்நாள் இப்படியாக முடிவுபெற்றது.

ஷியர்ஆப்கன் இறந்துபோனபிறகு பெண்ணரசியான நூர்ஜிஹானை அரசன் கட்டளையால் டில்லிநகரத்துக்[illegible] பிடித்துவந்தார்கள். ஆயினும் எந்தக் காரணத்தாலோ ஜிஹா[illegible] விழிக்கச் சம்மதிக்காமல், அங்கேயே அந்[illegible] யோக்கியமல்லாத ஓரிடத்தில் அவளைச்[illegible]

நூர்ஜிஹான் மிகவும் அகங்காரங்[illegible] பங்கம் நேர்ந்தால் சிறிதும் பொறுக்[illegible] வளுக்கு மகா சூரனான கணவனும்பே[illegible] பட்டு இருக்கும்படி நேர்ந்தால் எப்ப[illegible] லால் அவள் மிகவும் விசனப்பட்டுக்கொ[illegible] அப்போதும் தன் காலத்தை வீண்போ[illegible] ந்த யுக்தியும் சாமர்த்தியமுமுடையவள். [illegible] பொன்நூல்களாலும் பலவிதமாய்ப் பூபோட்டு[illegible] ளுக்கு அழகுசெய்வதில் ஒப்பற்ற திறமையுடைய[illegible] அந்த வேலைகள்செய்ய ஆரம்பித்தாள். அவள் தான் [illegible] மான ஓராடை அணிந்துகொண்டிருந்தாளாயினும், தான் சித்திரவேலைசெய்த பட்டாடைகளையெல்லாம் தன் வேலைக்காரிகளுக்கு உடுப்பித்துத் தன் திறமை தேசமெங்கும் பரவச்செய்தாள். டில்லி ஆக்ராமுதலிய பட்டணங்களிலுள்ள சீமாட்டிகளெல்லாம் அவ்வாடைகளின் அழகைப்பார்த்து அவற்றையே வாங்கித் தரிக்க ஆரம்பித்தார்கள். அதனால் அவளுடைய பெயர் எங்கும்

பரவினதுமாத்திரமேயல்லாமல், அவளுக்குப் பொருளும் விசேஷமாய்ச் சேர்ந்தது.

இப்படி எங்கும் பிரசித்திபெற்று மிக்க செல்வமாய் வாழ்ந்துகொண்டிருந்தாலும், காவ்லில் வைக்கப்பட்டிருப்பதால் அவள் மிகவும் மனவருத்தமுற்றுத் தனக்கு எப்பொழுது நல்லகாலம் வரப்போகிறதென்று எதிர்பார்த்திருந்தாள். அவளுடைய வடிவழகையும் சாமர்த்தியத்தையுங்கேட்டு அநேகர் அவள்மேல் ஆசைகொண்டார்கள். அப்போது உயர்ந்த உத்தியோகஸ்தனுன ஒரு கனவானுக்கு அந்தப் பெண்மணி மனையாட்டியாகப்போகிருளென்று எங்கும் பெருங்கூச்சலாயிற்று. அவனுடைய வேண்டுகோளுக்கு அவள் சிறிதும் சம்மதப்படவில்லையென்றுலும், இதைச் சாக்கிட்டாகிலும் நாம் வெளிப்படும்படி நேரிடாதாவென்று அதற்குச் சம்மதித்தவள்போலவே பாவித்திருந்தாள்.

அவள் நாள்தோறும் வெவ்வேறுவிதமாய்ச் சாக்குப்போக்குகள் சொல்லி மறுத்துக்கொண்டிருக்கவே, அவன் அந்தத் தாமதம் பொருமல் ஒருநாள், உன் கருத்து இப்படிப்பட்டதென்று நிச்சயமாய்ச் சொல், நான் சீக்கிரமே கலியாணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக்கேட்க, அவள் எனக்குச் சம்மதமில்லையென்று உறுதியாய்ச் சொன்னுள். அதைக்கேட்டு அவன் மிகக் கோபங்கொண்டு அவளைப் பலவந்தமாய்ப் பிடிக்கப்போக, அவள் உடனே ஒரு ஈட்டியையெடுத்தோங்கத்தினுள். அவள்மேல் ஆசைகொண்ட மற்றவர்களுக்கும் அ கொடுமை நேர்ந்தது.

அந்தப் பெனத்தில் ின் வல்லமையும் வீரச்செயல்களும் சீக்கிரமே அரசன்த்து அதிக எட்டின. அரசனுக்கு அவளிடத்திலிருந்த கோபமெல்லாகிறதாய்ச் சகாலத்தில் அநேகமாய் ஆறிப்போயிருக்கலாம். அவ பயணப்பபருமைகளைக் கேட்டவுடனே, இந்த வதந்தி வாஸ்தவனுடன் லது அதிவாதமா என்று அறியும்பொருட்டு அரசன் அவெருந்தாள்க்கும்படி ஒருநாள் மாலைவேளையில் அவளிருந்த இடத்திற்குவனுக்ன்றுன். அவளுடைய ஒப்பற்ற வடிவழகைப்பார்த்தவுடனே த்திவனுக்கு மிக்க மதிப்பிரமை உண்டாயிற்று; அவளுடைய சவுந்தரியத்தைப்பார்த்துச் சிறிதுநேரம் மதிமயங்கிநின்று, பின்பு அவள் பக்கத்திற்சென்று அவள் கையைப்பிடித்துக்கொண்டு, ஓ பெண்கள்நாயகமே! இவ்வுலகமெல்லாம் ஏகசக்கரமாய் ஆள்கின்ற மகாராஜா உன்னைக் கையைப்பிடித்து வேண்டுகிறுன்; ஜிஹாங்கீர் சக்காவர்த்திக்குப் பட்டமகிஷியாக உனக்கு விருப்பந்தானுவென்று கேட்க, அவள், அரசன்கட்டளைக்குமேல் யார் என்னசொல்லலாமென்றுள்.

அதைக்கேட்டுச் சக்காவர்த்தி மிகவும் சந்தோஷமாய் அச்செய்தியை எங்கும் பிரசித்தப்படுத்தினுன். சீக்கிரமே அவர்களுக்குக் கலியாணம் நடத்தப்பட்டது. அதுவனாயில் உலகமெல்லாம் ஆச்

சரியப்படும்படி அப்பெண்மணி பட்டாடைகளில் அற்புதமாய்ச் செய்துவந்த சித்திரவேலைகளெல்லாம் நின்றுபோயின; அது வரையில் அவளுக்கு வழங்கிவந்த மெருல்நிஸ்ஸா அல்லது பெண்கள் நாயகம் என்ற பெயர் மாறி நூர்மகல் அல்லது அந்தர்ப்புர ஜோதியென்று பெயராயிற்று. அதுமாத்திரமேயல்ல; அவளுடைய பெருமைக்கு இதுவும் போதாதென்று சீக்கிரமே அந்தப் பெயரையும் மாற்றி நூர்ஜிஹான் அல்லது ஜகஜ்ஜோதியென்று பெயரிடப்பட்டது. மேலும் சக்கரவர்த்திக்கு அவளிடத்திலிருந்த அன்புக்கு அறிகுறியாய்ச் சக்கரவர்த்தினியென்று பட்டப்பெயரும் கொடுக்கப்பட்டது. அவளுடைய வமிசத்தார்க்கெல்லாம் ராஜவமிசத்துக்கு இரண்டாவதான அந்தஸ்து கொடுக்கப்பட்டதோடுகூட, உயர்ந்த அதிகாரங்களும் கொடுக்கப்பட்டன. ராஜாங்கத்து நாணயங்களிலெல்லாம் அவளுடைய பெயர் அரசனுடைய பெயர் ஆக இரண்டுமாய்ச் சேர்த்து முத்திரிக்கப்பட்டன. அவளிருந்த அந்தர்ப்புரம் ஒரு பெரிய ராஜசபையாயிற்று. ராஜதந்திரங்களை ஆலோசனைசெய்வதெல்லாம் அவ்விடத்திலேதான். நியாய விசாரணைகளும் தீர்ப்புகளும் அரசன்பெயராலேயே வெளிப்பட்டனவென்றாலும், அவைகூட அவளாலேயே நடத்தப்பட்டன. ஜிஹாங்கிருடைய அரசாட்சிக்குப் பிரசித்தி உண்டானதெல்லாம் இதனாலேதான். அப்போது அந்த ராஜாங்கத்தில் அவளுக்கு இருந்த செல்வாக்கு சக்கரவர்த்திக்குக்கூட இல்லையென்று சொல்லலாம். பலவாறு சொல்லியென்ன? மகம்மதிய ராஜாங்கத்தில் அவ்வளவு பெருமைபெற்றுச் செங்கோல்செலுத்தின பெண்ணரசி வேறொருத்தியுங்கிடையாது.

இப்படி நூர்ஜிஹான் சிறப்புபெற்ற சிலநாளையில், ஜிஹாங்கீருடைய மூன்றாங்குமாரனான கூரம் என்பவன் ராஜாங்கத்தில் அநேகம் கலகங்கள் உண்டாக்கத்தொடங்கினான். அவன் சேனைகளை நன்றாய்க் கையாளுந்திறமையுடையவனாதலால் அதைக்கொண்டு எல்லாவற்றையும் வெல்லலாமென்று நினைத்தான். தகப்பனுக்குப் பிறகு தனக்கே பட்டங்கிடைக்கவேண்டுமென்பது அவனுடைய கோரிக்கை. அதனால் மூத்தவன் உயிரோடிருப்பது தனக்குப் பட்டங்கிடைக்கப் பெருந்தடையென்று குசிரோவென்னும் தன் மூத்த சகோதரனை அநியாயமாய்க் கொன்றுவிட்டான்.

ஆயினும் அவனுடைய சூதுகள் வெளிப்படாமற்போகவில்லை. நூர்ஜிஹான் சிறந்த புத்தியும் சாமர்த்தியமும் உடையவளாதலால் வெகுநாள்முன்னமே அவனுடைய சூதுகளை எப்படியோ தெரிந்துகொண்டு அதை அரசனுக்கு அறிவித்தாள். அதனாலும், உடனே தன் மூத்தமகன் கொல்லப்பட்டதனாலும் அரசன் அவனிடத்தில் அதிக கோபங்கொண்டான். ஆயினும் அவன் தூரதேசங்களிலேயே சுற்றிக்கொண்டிருந்ததனால் அவனை ஒன்றும் செய்

யக்கூடவில்லை; கடிதங்கள் எழுதினாலும் அதற்கு அவன் தகுந்த விடைகொடுப்பதில்லை. இத்தனைக்கும் கூரம் நூர்ஜிஹானுடைய சகோதரனுக்கு மருமகன்; ஆயினும் நூர்ஜிஹானுக்கும் அவனுக்கும் சிறிதும் போதாது. அவனுக்குப் பட்டம்கிடைப்பது அவளுக்குச் சம்மதமேயில்லை; ஜிஹாங்கீருடைய நான்காம் குமாரனான ஷாரியர் என்பவன் தனக்கு ஷியர்ஆப்கனிடத்திற்பிறந்த மகளைக் கலியாணம்செய்துகொண்ட மருமகனாதலால், அவனுக்கே கிடைப்பிக்க வேண்டுமென்பது அவளுடைய கோரிக்கை.

நூர்ஜிஹானுடைய போதனையினால், அரசன் அம்மகனுடைய கொழுப்பை அடக்கமுயன்று முக்கியமாய் மொஹபெத்கான் என்னும் சேனாபதியின் சகாயத்தால் முதலில் அவன் பலத்தை ஒருவாறு ஒடுக்கினான். அவ்வளவோடு கூரம் அடங்கியிராமல், திரும்பியும் அநேகம் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு பல பட்டணங்களைப் பிடித்துத் தானே சுதந்தரமாய் அவற்றை ஆளத்தொடங்கி, மேன்மேலும் அண்டைநாடுகளைப் பிடிக்கத் துவக்கினதுகண்டு, மொஹபெத்கான் படையெடுத்துச்சென்று அவன் பலத்தை அடியோடு அடக்கினான். பின்பு கூரம், தனக்குத் துணையாயிருந்தவர்களெல்லாம் பகையாகித் தன்னை எதிர்த்ததுகண்டு, அவன் தான் செய்த குற்றங்களை நினைத்து மனம்நொந்து மிகவும் அனுதாபத்துடன் தன் குற்றங்களை மன்னிக்கும்படித் தகப்பனுக்குக் கடிதமெழுதினான். அவன் படுகிற சங்கடத்தைப்பார்த்து ஜிஹாங்கீர் மிகவும் பரிதாபப்பட்டு, இனி அவன்பேரால் எங்கும் அரசு செலுத்தக்கூடாதென்றும், தாரா, ஆரங்கசீபு, மூராத் என்னும் அவனுடைய மூன்றுகுமாரர்களும் தன் அதீனத்திலேயே இருக்க வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்துகொண்டு அவன் குற்றத்தை மன்னித்தான். ஆயினும் கூரம் நூர்ஜிஹானிடத்திலிருந்த பயத்தாலும் வெட்கத்தாலும் ராஜசபையில் தலைகாட்டாமல் ஊரூராய்த் திரிந்துகொண்டே காலம்கழித்தான். மிகவும் கொடியதாய்க் கிளம்பின அந்தப் பெருங்கலகம் இப்படியாக முடிவுபெற்றது நூர்ஜிஹானுடைய எச்சரிக்கையாலும் முன்ஜாக்கிரதையினாலுமேயொழிய மற்றொன்றினாலுமல்ல; பேருக்குமட்டும் ஜிஹாங்கீர் சக்கரவர்த்தியாயிருந்தானேயொழிய, ஒருகோணலும் வாராமல் யுத்தி புத்தி விவேகங்களோடு ஆளுகையைத் தக்கபடி நடத்தினவள் ஜகஜ்ஜோதியே.

நூர்ஜிஹானுடைய ஜீவகாலத்தில் அவள்செய்த அற்புதமான செய்கைகளுள் மிகவும் சிறந்ததொன்றுண்டு. அவள் மகாசூரனான மொஹபெத்கானை ஆட்டுவித்த ஆட்டமொன்றே அவளுடைய பெருமைகளை விளக்கப் போதுமானது. ராஜாங்கத்துக்கு விரோதமாய்க் கிளம்பின பல கலகங்களையும் அடக்கி அமைதியுண்டாக்கினதுபற்றி முதலில் அவனிடத்தில் அரசனுக்கும் அரசிக்கும் அதிகமாய் விசுவாசமும் நம்பிக்கையும் உண்டாயின; ஆதலின், அவர்

கள் அவனை, மற்றப் பிரபுக்களெல்லாம் பார்த்துப் பொறுமை கொள்ளும்படி, அவ்வளவு பெருமையாக நடத்திவந்தார்கள்.

ஆயினும் அந்த நன்றி நெடுநாள் நீடித்துவரவில்லை. ராஜாங்கத்தில் மொஹபெத்கானுக்கு இருக்கிற சாய்காலைப்பார்த்து, இவனுக்கு இவ்வளவு சுவாதீனங்கொடுத்தால் முதலுக்கே மோசம்வருமென்று கண்டு நூர்ஜிஹான் அவனுடைய செல்வாக்கைக் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைத்துவிடவேண்டுமென்று தீர்மானித்தாள். அரசனும் அவள் கருத்துக்கிணங்கி, அப்படியே செய்யக்கருதினன். அரசனுடைய கருத்து தன்னிடத்தில் முன்போலிராமல் மாறுபட்டிருக்கிறதென்று மொஹபெத்கானுக்கு நன்றாய்த் தெரிந்ததென்றும், தன்னுடைய கவுரவமே தனக்குப் பெருந்துணையென்று நம்பி அவன் தைரியமாகவேயிருந்தான். ஆயினும், அரசனுக்குத் தன்னிடத்தில் மனக்கலக்கமுண்டானதெல்லாம் நூர்ஜிஹானுடைய துர்ப்போதனையாலென்று அவனுக்குத் தெரியவரவே, அந்த ராஜ்யமே மொகலாயவமிசத்தாருடைய கையைவிட்டு நீங்கிப்போம்படி அவ்வளவு கொடியதாய்க் கலகமொன்று உண்டாயிற்று.

நூர்ஜிஹானுக்கு உண்டான சந்தேகம்மாத்திரமேயன்றி, இன்னும் பலபேர் பலவிதமாய்ப் பொறுமைகொண்டு மொஹபெத்கானிடத்தில் பழிகூறவே, அவன் செய்த நன்மைகளையெல்லாம் மறந்து அரசன் வங்காளத்திலிருந்த மொஹபெத்கானை உடனே தன்னிடத்திற்கு வரும்படிக் கொடிய கட்டளையிட்டுக் கடிதமெழுதினன். அதற்கு அவன் ஒன்றும் விடைகொடுக்கவில்லை. அதனால் அரசன் அதிக கோபங்கொண்டு முன்னிலும் மிகக்கொடியதாய் மேன்மேலும் கடிதமெழுதினன். தான் ஒருவித அபகாரமும் செய்யாமலிருக்க அரசனுக்குத் தன்னிடத்தில் இப்படிக் கோபமுண்டானதற்குக் காரணம் இன்னதென்று தெரியாமல் மொஹபெத்கான், ஆனது ஆகட்டும், போய்ப்பார்ப்போமென்று தகுந்த எச்சரிக்கையோடு அரசனிடம்போவதாய் முதலில் தீர்மானித்தான். ஆயினும் தான் செய்த ஒப்பற்ற உபகாரங்களுக்கெல்லாம் தகுந்த வெகுமதி செய்வதுபோய், இப்படி அநியாயமாய்க் கொடுமைசெய்யக் கருதினதை நினைத்து ஒருவித கோபமும் வெறுப்பும் அடைந்தவனாய், முதலில் நினைத்தபடிச் செய்யாமல், முன்னமே தன்னை ஆளும்படி அரசன் ஏற்படுத்தியிருந்த ஒரு கோட்டைக்குப் போகக் கருதினன். அவ்விடத்துக்குப் போனவுடன் அவனுக்கு உண்டான அதிசயத்தை என்னென்றுசொல்லலாம்! ராணி ஏற்படுத்திய ஒருவனுக்கு அந்தக் கோட்டையை உடனே ஒப்புவிக்கும்படி அரசன் கட்டளை அவனுக்குமுன்னமே அவ்விடத்திற்கு வந்திருந்தது.

அதைக்கண்டு மொஹபெத்கான் இப்படி ஒரு அநியாயம் உண்டாவென்று அரசனுக்குக் கடிதமெழுத, பின்பு ஒன்றின்மேலொன்றாய் இருவர்க்கும் வாக்குவாதம் நடந்தது. கடைசியில் அர

சன், நீ உடனே என் முன்னிலைக்கு வருவாயா மாட்டாயாவென்று வெகு கோபமாய்க் கடிதமொன்று எழுத, மொஹபெத்கான் அதற்கு உடன்பட்டுப் போகும்போது, தக்க ஜாக்கிரதையோடு போகவேண்டுமென்று தான் சொன்னபடி செய்யத்தக்க ஐந்நூறு ரசபுத்திர வீரர்களோடு, அப்போது ஜிஹாங்கீர் அரசுசெலுத்திக் கொண்டிருந்த லாகோர்பட்டணத்திற்குச் சென்றான்.

மொஹபெத்கான் அளவற்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டுவருவது கேள்விப்பட்டு நூர்ஜிஹான், இதைக்கண்டு அரசனாவது பயந்து சமாதானமாய்ப்போவான்; இல்லாவிட்டால் அரசாட்சிக்கேயாவது அபாயமுண்டாகுமென்று மிகவும் திகில்கொண்டு அவன் அதீனத்தில் சேனையே இருக்கக்கூடாதென்றாள். அவன் அரசனிருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் வந்தவுடனே, வங்காளநாட்டுத் தீர்வைகளுக்கும் முன் காசிச்சண்டையில் கொள்ளையடித்த பொருள்களுக்கும் சரியாய்க் கணக்கு ஒப்புவித்தாலொழிய அரசன்சமுகத்துக்கு வரக்கூடாதென்று கடிதம் வந்தது. அதனால் மொஹபெத்கான் மிகச்சினங்கொண்டு, இப்படி மானபங்கப்படுத்தலாமாவென்று நேராய் அரசனிடம்போய் எச்சரிக்கத் தன் மருமகனை அனுப்ப, அச்சிறுவன் அரசன்சமுகத்துக்கு வந்தவுடனே அவனை நிர்வாணமாக்கிச் செருப்பாலடித்துக் கந்தைத்துணிகளைச் சுற்றிக் கழுதைமேல் பின்முகமாய் உட்காரவைத்து மேளதாளங்களோடு ஊர்வலம் வருவித்து அப்படியே அவன் மாமனிடம் அனுப்பினார்கள். இந்த வெட்கக்கேட்டையும் ஒருவன் பார்த்துப் பொறுப்பானா! இவ்விஷயத்தில் அரசனுடைய மதிக்குறைவைக்கண்டு மொஹபெத்கான் மிகவும் துக்கித்தான். இவையெல்லாம் நூர்ஜிஹானுடைய துர்ப்போதனையால், அதைத்தடுக்கத் திறமையில்லாமல் அரசன்செய்த காரியமென்று அவனுக்கு நன்றாய்த் தெரியும். இப்போது நாம் அரசனிடம் போவோமானால் உயிரே போய்விடும்; அது தப்பினாலும் சிறைசெய்துவிடுவார்களென்று தெரிந்து, மொஹபெத்கான் திடீரென்றுபோய் ஒருவர்க்குந்தெரியாமல் அரசனைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான்.

மறுநாள் காலையில் காபூலுக்குப் பிரயாணமாய், ராஜசைனியமெல்லாம் அங்கு ஓர் ஆற்றங்கரையில் இறங்கியிருந்தன. மொஹபெத்கானுடைய முயற்சி ஒருவர்க்குந் தெரியாதாகையால் அதைத் தடுப்பதற்கு வேண்டிய முன்ஜாக்கிரதை சிறிதுமில்லை. பொழுது விடிந்ததும் சேனைகள் அவ்வாற்றைக் கடந்துபோயின. அரசன் மாத்திரம் சாவகாசமாய்ப் போகலாமென்று அங்கேயேயிருந்தான். சேனைகளெல்லாம் அவ்வாற்றைக் கடந்ததும் மொஹபெத்கான், அரசன் சுலபமாய் ஓடிப்போகக்கூடாதபடி அவ்வாற்றுப்பாலத்தைக் கொளுத்திவிட்டு, பல ரசபுத்திரவீரர்கள் சூழ்ந்துவர, அரசனுடைய கூடாரத்திற்குச் சென்றான். அங்கிருந்த காவற்காரர்கள்

ஒருவரும் அவனைத் தடுக்கமாட்டவில்லை. அரசன் ஸ்நானத்திற்குப்போய் இருக்கிறானென்று தெரிந்து மொஹபெத்கான் தானும் அவ்விடத்திற்குச் செல்ல, அங்கிருந்தவர்களெல்லாரும் அவனைப் பார்த்துப் பிரமித்து அப்படியே நின்றார்கள். முதல்நாள் அவர்கள் செய்த செய்கை யாவர்க்கும் நன்றாய் நினைவுவரும்படி அங்கிருந்தவர்களையெல்லாம் சுடச்சுடப் பார்த்துக்கொண்டே மொஹபெத்கான் ஒன்றும்பேசாமல் அரசன் நீராடுங் கூடாரத்துக்குட் சென்றான்.

அதற்குள் ஜிஹாங்கீர், அவன் வருகிற செய்திகேட்டுக் கத்தியை உருவிக் கையிலெடுத்துக்கொண்டு வெளியேவந்து, மொஹபெத்கானுடைய புருவம் எப்புறமாய் அசைகிறதென்று அவன் கட்டளையை எதிர்பார்த்து உருவினகத்தி உருவினபடியே காத்திருக்கும் பல ரசபுத்திரவீரர்கள்சூழ மொஹபெத்கான் வந்திருப்பதையும், தன்னுடைய வீரர்களெல்லாம் அவனை ஒன்றும் செய்யமாட்டாமல் அப்படியே திகைத்துநிற்பதையுங் கண்டான். அப்பொழுது அவன்விஷயத்தில் தான் செய்த தீமைகள் பலவும் அவன் மனதில் நன்றாய் உறைத்தன. உடனே அரசன் அவனண்டைபோய், மொஹபெத்கான்! இதென்ன இது! என்றான். அதுகேட்டு மொஹபெத்கான், என்னைக் கொல்லவேண்டுமென்று பல விரோதிகள் முயற்சிசெய்கின்றமையால், என்னைக் காப்பாற்றவேண்டுமென்று மகாராஜாவை வேண்டிக்கொள்ளவந்தேனென, அரசன், உனக்கு ஒரு பயமும் இல்லை; உன் பின்னே ஆயுதபாணிகளாய் இத்தனை வீரர்கள் வந்து நிற்பதேனென்றான். அதற்கு மொஹபெத்கான், என்னையும் என் இனத்தாரையும் பிராணபயமில்லாமல் காப்பதற்காகவே இவர்கள் வந்திருக்கிறார்கள்; அது உறுதியானால் இவர்கள் போய்விடுவார்களென, அரசன், அது அப்படியே உன் இஷ்டப்படியாகட்டும்; நீதான் ராஜாங்கத்து விரோதமாய் நடக்கின்றாய்; நான் உனக்கு ஒரு தீங்கும்செய்யக் கருதவில்லை. நீசெய்த நன்மைகளை நான் மறந்துபோனேனா? நீ துரைத்தனத்தாருடைய கட்டளையை எதிர்த்ததனால் உனக்குக் கொஞ்சம் கோபமூட்டினேனேயொழிய வேறில்லை. இனி நமக்கு மனஸ்தாபம்வேண்டாமென்றான்.

அதற்கு ஒன்றும் விடைகொடாமலே மொஹபெத்கான் அவனை உடனே யானைமேலேற்றி எதிர்த்தவர்களைப் புடைத்துக்கொண்டு தன் கூடாரம்போய்ச் சேர்ந்தான்; ஆயினும் அரசன் உயிரையாவது ஆட்சியையாவது அபகரிக்கச் சிறிதும் அவன் கருதவில்லை. தன்னிடத்தில் அவனுக்குள்ள விரோதத்தைப் போக்கவேண்டுமென்றே இவ்வளவுதூரம் செய்தான்.

நூர்ஜிஹான்மாத்திரம் அவன் கையில் அகப்படவில்லை. மொஹபெத்கான் பல வீரர்களோடு கூடாரத்துள் நுழைந்தசெய்தி கேட்டவுடனே அவள் ஒரு யானைமேலேறி மெதுவாய் ஆற்றைக்கட

ந்து சேனைகளோடு சேர்ந்துகொண்டு அரசனுக்கு நேர்ந்திருக்கும் அபாயத்தை அவர்களுக்குத் தெரிவித்து, அவனை விடுவிப்பதற்கு வேண்டிய முயற்சிசெய்யத் தொடங்கினாள்.

நூர்ஜிஹான் சுவாதீனமாயிருக்குமளவும் அவள் தனக்கு ஒரு தலைமாட்டுப் பாம்புதானென்று நினைத்து மொஹபெத்கான் அவளைப் பிடிக்கத் தீர்மானித்து உடனே பகிரங்கமாய்ப் படையெடுத்தான். ராணி அதிகமாய் அதிகாரம் செலுத்துகிறாளென்று அரசனைச் சேர்ந்தவர்கள்கூட அநேகர் அவளிடத்தில் வெறுப்புற்றிருந்தார்கள்.

மொஹபெத்கான் அவர்களை எதிர்ப்பதற்காக ஆற்றங்கரைக்கு வருகையில் வழியிலே ஒரு வீரன் அரசனைச் சிறையாய்ப்பிடித் திருக்கிற செய்தி தெரிந்து அவர்களை உடனே எதிர்த்தான். அந்த க்ஷணமே ரசபுத்திரவீரர்கள் அவனையும் இன்னும் எதிர்த்துவந்த பலரையும் கொன்று மிகுந்தவர்களை அடித்துத் துரத்திவிட்டார்கள். இந்தத் துக்கச்செய்தியையும் கேட்கவே நூர்ஜிஹான் மிகக் கோபங்கொண்டு, மறுநாள் கிழக்கு வெளுப்பதற்குமுன்னமே அவ் வாற்றைக் கடந்துவந்து உடனே அவர்களை எதிர்த்து அரசனை விடுவிக்கவேண்டுமென்று தீர்மானித்தாள். இவர்கள் இப்படி எதிர்க்கத்துணிந்த செய்திகேட்டு ஜிஹாங்கீர், அந்தச் செய்தி தெரிந்து மொஹபெத்கான் தன்னை எங்கே கொன்றுபோடுகிறானோ வென்று பயந்து, சண்டையை நிறுத்தும்படித் தன் மந்திரிக்குச் செய்தியனுப்ப, அவன், சிறையாயிருக்கையில் அரசன் கட்டளையைக் கேட்கவேண்டுவதில்லையென்று, சண்டைக்கே சந்நாகஞ் செய்துகொண்டிருந்தான்.

ஆற்றைக்கடக்கப் பாலமுமில்லை; அது எரிந்துபோயிற்று. ஆறோ அதிக ஆழமானது; ஏறுவதற்கோ எதிர்க்கரை அதிக உயரமானது. ஆயினும் காலையில் எழுந்தவுடனே ராஜசைனியமெல்லாம் அவ் வாற்றைக் கடந்துவந்தன. அநேகம் ஆற்றிலேயே மடிந்துபோயின. அநேகம் கரையேற முயலும்போது அடிபட்டு மடிந்து போயின. இவ்வருத்தங்களுக்கெல்லாம் தப்பிமிகுந்து கரையேறினவர்கள் ரசபுத்திரர்களோடு சண்டைசெய்யமாட்டாமல் தவித்தார்கள். அவ்வருத்தத்தைக்கண்டு, நூர்ஜிஹான் மனம்பொறாமல் அதிக ரோஷத்துடனே தன் மகளோடுகூட ஒரு யானைமேலேறி எதிர்த்தவர்களுக்கெல்லாம் ஈடுகொடுத்துக்கொண்டு ஆற்றைத்தாண்டிவந்து ஒருவரும் கிட்டநாடவொட்டாமல் அம்புகளைச் சரமாரியாய்ப் பொழிந்து பல வீரர்களைக் கொன்றாள். அப்போது அவள் காட்டிய வீரச்செயலைக்கண்டு ரசபுத்திரர்களே அதிசயித்தார்கள். அவளைப் பிடித்துக்கொண்டபின்புகூட ஒரு ரசபுத்திரன் அவளுடைய வீரச்செயலுக்காக அவளைச் சிறையாக்கத்துணியாமல் விட்டுவிட்டானென்றால், அவளுடைய வல்லமையை நாம் என்னென்று புகழலாம்! ஆயினும் கடைசியில்

சேனையெல்லாம் அடிபட்டு ஓடியும் மடிந்தும்போகவே, நூர்ஜிஹான் பகைவர்கையில் அகப்பட்டுக்கொள்ளாமல் மெதுவாய்த் தப்பித்துக்கொண்டு தனியே லாகோருக்கு ஓடிப்போயினாள்.

அதுசெய்தி தெரிந்து ஜிஹாங்கிர் இன்சொல்லாய் நூர்ஜிஹானுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதாவது: போனதுபோகட்டும்; இனிமேல் ஒருவர்க்கும் மனஸ்தாபம்வேண்டாம்; இப்படி உள்நாட்டுச்சண்டை விருத்தியானால் நாட்டுக்கு நன்மையுண்டாகுமா? மொஹபெத்கான் நம்மிடத்தில் மிகவும் விசுவாசமாயிருக்கிறான்; நீ இவ்விடத்திற்கு வருவாயானால் உன்னைப் பெருமையாகவே வரவழைக்கக் காத்திருக்கிறானென்று எழுத, நூர்ஜிஹான் வேறுவிதியில்லாமல் சிறையாய்க் காபூலுக்குப் போய்க்கொண்டிருந்த கணவனிடத்திற்கு வந்தாள். மொஹபெத்கான் முதலில் அவளை மரியாதையாகவே வரவழைத்தானென்றாலும் உடனே அவளைக் கடுஞ்சிறையில்வைத்து, சக்கரவர்த்தியாய்த் தேசமெல்லாம் ஆள்கின்ற நீர் கடவுளைப்போல் பக்ஷபாதமற்றிருக்கவேண்டுமேயொழிய ஒருவரை உயர்வாயும் ஒருவரைத் தாழ்வாயும் பார்க்கலாகாதென்று அரசனுக்கும் நற்போதனைசெய்தான்.

மொஹபெத்கானுடைய கோபம் அவ்வளவோடு அடங்கவில்லை; நூர்ஜிஹான் உயிரோடு இருக்குமளவும் தனக்கு நிம்மதி உண்டாவதில்லையென்று கண்டு, அவன் ஒருநாள் அவ்வரசி நன்றாய்த் தூங்குகிறதருணத்தில் அவளைக் கொன்றுவிட்டுவரும்படி ஒரு வீரனை அனுப்பினான். அவன் போனதருணத்தில் அவள் அமைதியாய்த் தூங்கிக்கொண்டிருந்தாள். அப்போது அவளுடைய வடிவழகையும்பார்த்து அவள் ... லையும்
நினைக்கவே அவனுக்கு அவளைக் ...
கையிலிருந்த கத்தி தானேநழுவி ...
தங்கேட்டு அவள் சரேலென் ...
நீ வந்தகாரியம் இன்னதென்று ...
வதானால் கொல்லலாம் என்று ம ...
நான் இக்கொடுஞ்செயல் செய் ...
னிக்கவேண்டும் என்று சொல்லிக ...
யைக்காட்ட, அவள், மரணமென்பது ...
ட்டுத்தனமாய்க் கொல்லக் கருதுவதைவிடப் பு ...
டோவென்று உன்னை இத்தொழிலுக்கு ஏவினவனுட ...
லென்று சொல்லி அவனை அனுப்பினாள்.

அதைக்கேட்டு மொஹபெத்கான் அதிககோபமடைந்து, ...
ஜிஹானைக் கொல்லக் கட்டளைச்சீட்டு கொடுக்கும்படி அரசனை ...
வற்புறுத்த, அவன் அதை மறுக்கமாட்டாமல் அந்தச் சீட்டில் கையெழுத்துசெய்தான். அந்தக்கட்டளைச்சீட்டைக் கண்டவுடனே நூர்ஜிஹான், சரீரத்தின் உரிமைதப்பினவர்களுக்கு உயிரின் உரிமை

கூடத் தப்பிப்போகிறது பார்த்தாயாவென்றுசொல்லி, இந்தக் கொலைசாசனத்தில் கையெழுத்துசெய்த சக்கரவர்த்தியைமட்டும் சற்றேபார்க்க உத்தரவுகொடுக்கவேண்டுமென்று தன்னைக் கொல்ல வந்தவர்களை வேண்டினாள். அவர்கள் அதற்குச் சம்மதிக்க, நூர் ஜிஹான் மிகுந்த துக்கத்துடன் சரேலென்று எழுந்து மொஹபெத் கானும் அரசனும் உட்காந்திருந்த விடுதியிற்சென்று கண்ணும் கண்ணீருமாய் அரசனைக் கட்டிக்கொண்டாள். அவளைப் பார்த்துச் சிலநாளாகவே அவளிடத்தில் இருந்த நேசம் அதுவனாயில் அவனுக்குச் சிறிதளவு மாறியிருந்தது; எதிரே வந்துநின்று அவள் அப்படிப் புலம்புவதையும்பார்க்கவே அவன் மனம்பொறுமல் கண்ணீர் பெருகப்பெருக மொஹபெத்கானைப்பார்த்து, இந்த ஒரு பெண்ணைமாத்திரம் நீ கொல்லாமல் விடமாட்டாயாவென்று கேட்டான். அவர்கள் படுகிற வருத்தத்தைப்பார்த்து அவன் மிகவும்மன மிரங்கி, மொஹலாய சக்கரவர்த்திகளுடைய வேண்டுகோள் வீணு குமாவென்றுசொல்லி, அவளைக் காவலினின்றும் விட்டுவிட்டான்.

ஆயினும் மொஹபெத்கான் அவளிடத்திற்காட்டிய கொடுமைகள் அவளுடைய மனதினின்றும் நீங்கவில்லை. வெளிக்குமட்டும் அவள் அவனிடத்தில் அதிகநேசம் பாராட்டுகிறவள்போலநடித்துத் தன்னிடத்தில் அவனுக்குச் சிறிதும் சந்தேகமுண்டாகவொட்டாமல் நடந்துவந்தாள்; ஆயினும், ரகசியத்தில் அவனைக் கொல்வதற்கு வழிதேடிக்கொண்டேயிருந்தாள். தன்னுடைய பிரசித்தி எங்கும் பரந்திருக்கிறதென்பதனாலும் சேனைகளெல்லாம் தனக்குக் கைவசமாயிருக்கிறதென்பதனாலும், தன்னுடைய உதாரகுணத்தால் ராஜாவுக்கும் ராணிக்கும் பிரஜைகளிடத்தில் மிகுந்த நம்பிக்கை உண்டாயிருக்கிறதென்பதாலும், ஏறுவதற்கு மொஹபெத்கான் ஒருவரிடத்திலும் சிறிதும் சந்தேகம் எழுந்தவுடன் சாதாரணமாகவேயிருந்தான்.

நூர்ஜிஹான் ஒருந்தன. அவன் அறியாமல் ஆறுமாதகாலம் நன்றாய் ஏற்பாடுசெய்துகொண்டாயேற முன் மொஹபெத்கான் வழக்கப்படி ராஜசபைக்கு வருந்தங்களுக்கு சேபார்வீரர்களைச் சித்தம்பண்ணி வைத்து ஒரு நெருக்கமான தெருவில் அவனை இருபுறமும் மடக்கிக்கொண்டு அடிக்கக் கட்டளையிட்டாள். அப்போது அவனுடன்வந்த சேவகர்களெல்லாரும் ஆயுதபாணிகளாயிருந்ததனால், அவர்களுடைய சகாயத்தால் அவன்மட்டும் மெல்லத் தப்பித்துக் கொண்டு ஓடிப்போயினான்; இல்லாவிட்டால் அவன் அப்போதே மாண்டுபோயிருப்பான். பட்டணத்து ஜனங்களெல்லாம் வீட்டில் இருந்தபடியே அவர்களை அடிக்க ஆரம்பித்தார்கள். மொஹபெத் கானுடன் வந்தவர்களெல்லாம் அநேகமாய் மடிந்துபோனார்கள். இப்படி அநியாயமாய்த் தனக்குச் சதிசெய்ய நினைத்ததுகண்டு மொஹபெத்கான் யாவரிடத்திலும் மிகக் கோபங்கொண்டான். தான் செயதமுயற்சி வீணாய்ப்போனதுமன்றி தன் சூதும் வெளிப்

பட்டுப்போகவே நூர்ஜிஹான் மிகவும் பயந்தாள். ஆகிலும் மொஹபெத்கான் மிக்க நல்லவனுதலால், இது யாரோ சில அற்ப ஜனங்கள் தெரியாமையாற்செய்த காரியமென்றுசொல்லி, பட்டணத்துப் பெரியமனிதர்கள் சிலர்போய் வேண்டிக்கொள்ளவே, இது நூர்ஜிஹானுடைய துராலோசனையால் நடந்தகாரியமென்று அவனுக்கு நன்ருய்த் தெரிந்திருந்தும், தன் கோபத்தை அவ்வளவோடு அடக்கி, இனிமேல் காபூலில் இருப்பதில்லையென்று மறுநாள் காலையில் அரசனைமட்டும் கூடவே பிடித்துக்கொண்டு லாகோருக்குப் புறப்பட்டான்.

பாதிவழிபோகையில் திடீரென்று ஏதோ ஒரு யோசனைதோன்றி மொஹபெத்கான் எல்லாவற்றிலும் நிராசையாய்த் தன்னிடமிருந்த சேனைகளையெல்லாம் ஒழித்துவிட்டு, அரசனையும் சுதந்தரமாய் அரசாட்சிசெய்யும்படிக் காவலினின்றும் விடுதலையாக்கிஞன். இந்த நற்குணங்களைப் பார்த்தும் நூர்ஜிஹானுக்கு அவனிடத்தில் இரக்கமுண்டாகவில்லை; நம்மைக் கொல்லும்படி அரசனைக்கூட மயக்கிக் கொலைசாசனம்பெற்றவனல்லவா என்கிற ஆக்கிரகம்மாருமல், அவன் தேசாந்தரம் ஓடிப்போயும் அவனுக்குப் பலவிதமாய்ச் சதிசெய்துகொண்டேயிருந்தாள்.

அவள் அப்படிச்செய்வது ராஜா மந்திரிமுதலியவர்களுக்குக்கூட வெறுப்பாயிருந்தது. அவளுடைய சகோதரனுக்குக்கூட அவள் அப்படி நடப்பது சம்மதமில்லை. மொஹபெத்கானைப்போலப் பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணநிறைந்த சூரன் வேருெருவனுமில்லையென்று அவர்களுக்கெல்லாம் நன்ருய்த் தெரியும். பெரும்பகையாயிருந்தகாலத்திலும் அவன் இவர்களைப் பிடித்து அன்புடன் ஆதரித்தானென்ருல், அவனுடைய நன்மனதுக்கு அதைவிட வேறு திருஷ்டாந்தமேன்? மேலும் இவளுடைய பேராசை இன்னும் எவ்வளவுதூரம் விருத்தியாகுமோவென்று யாவரும் பயந்தார்கள்.

பின்பு சிலநாள் கழித்து மந்திரியினுடைய வேண்டுகோளின் மேல், தேசாந்தரத்தில் அல்லாடிக்கொண்டிருந்த மொஹபெத்கான் திரும்பிவந்தான். அப்போது அவன், தான் மிகவும் துர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்தாலும் ராஜ்யக்ஷேமத்தையே முக்கியமாய்க் கருதி, ஷாஜிஹானுக்கே பட்டம் சூட்டுவிக்கவேண்டுமென்று நூர்ஜிஹானுடைய சகோதரஞன அசிப் என்பவனுக்கு அறிவித்தான். ஷாஜிஹான் தனக்கு பந்துவாயும் மித்திரனுயுமிருந்ததனுல் அசிப் வெகு சந்தோஷமாய் அதை அங்கிகரித்தான். ஜிஹாங்கீர் இறந்தவுடனே கூரம் என்னும் அவனுடைய மூன்ருங்குமாரன் ஷாஜிஹானென்னும் பட்டப்பெயர் பெற்றுச் சிங்காசனமேறிஞன். ஜிஹாங்கீரோடு கூடவே தனக்கிருந்த செல்வாக்கெல்லாம் அடங்கிப்போனதனுல், நூர்ஜிஹான் பல்லைப்பிடுங்கின பாம்புபோல் தன் ஆட்டமெல்லாம் அடங்கி, பிற்காலத்தைப் புத்தகமும் கையுமாயே கழித்து ஜிஹாங்

கீர் இறந்துபோய்ப் பதினெட்டுவருஷத்திற்குப்பிறகு லாகோரில் இறந்துபோனாள். உலகமெல்லாம் ஆச்சரியப்படும்படி அரசனை யும் உள்ளடக்கிச் சுதந்தரமாய் அரசாட்சிசெய்த சக்கரவர்த்தினி யின் காலம் இப்படியாக முடிவுபெற்றது. ராஜாங்கத்தில் அவளு க்கு அவ்வளவு சாய்கால் உண்டானது அரசனுடைய அசாமர்த் தியத்தாலன்று; அவளுடைய நுட்பபுத்தியாலும் விவேகத்தாலும் விடாமுயற்சியாலும் ஆளுகைத்திறத்தாலுமே. இப்போது சிறந்த பரிமளத்திரவியமாய் எங்கும் வழங்குகிற பன்னீர் அத்தரென்பது அந்த ஜகஜ்ஜோதி கண்டுபிடித்ததுதான்.

அறிவாராச்சியும் தொழிலாராச்சியும்.

சிறுபருவத்தில் முறைமையாகக் கல்விகற்றவர்கள் அநேகர் பிற்காலத் தில் ஜீவனத்தின்பொருட்டுப் பற்பல உத்தியோகத்திலும் வியாபாரத்திலும் பிரவேசித்துக் கல்விப்பயிற்சியை விட்டுவிடுகிறார்கள். விடாது பயில் பவரும் சிலர் இருக்கிறார்கள். உத்தியோகத்தில் மிகுந்த காலத்தைக் கழிக்கிற சிலர் கல்வியில் தேர்ச்சியடைந்து கீர்த்திபெற்றிருக்கிறார்கள். அவர்கள் உத்தியோகத்தில் உழைத்தகாலம்போக மற்றக்காலத்தில் விடா முயற்சியால் செய்திருக்கும் கிரந்தங்களைப் பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியமுண்டாகும். அவர்கள் வெகு கடினமான வேலையைக் குறை வில்லாமல் செய்துகொண்டு காவியமும் சாஸ்திரமும் வாசித்துப் பேரெடுத் திருக்கிறார்கள். சிசிரோ என்பவர் இவ்வாறு பேர்பெற்றவர்களுள் ஒருவர். இவர் பூர்வத்தில் சிறப்புற்றோங்கிய ரோமாபுரியில் மேன்மைபொருந் திய கான்ஸல் என்ற உத்தியோகம் செய்தவர். ஆயுட்காலமெல்லாம் கல் வியிலேயே கடத்திய வித்துவான்களும் இவரவ்வளவு கீர்த்திபெற்றதில் லை. காவியம், தத்துவசாஸ்திரம், நீதிசாஸ்திரம், தர்மசாஸ்திரம், சரித்தி ரம் இவைகளில் இவர் மகாவல்லவர். தாமே அநேக கிரந்தங்கள் செய்திருக் கிறார். விஸ்தாரமான அந்தக் கிரந்தங்களைச் செய்வதற்குப் போதுமான காலம் எப்படிக் கிடைத்ததென்பதே ஆச்சரியமாயிருக்கின்றது. அவ ருடைய முயற்சியின் வலிமையைச் சொன்னால் பொய்யென்று தோன் றும்; அதை இவ்வளவென்று நிதானிப்பது கடினம்; திருஷ்டாந்தப்படுத் துவதும் எளிதல்ல. ஆயினும் விடாமுயற்சியினாலேயே விஸ்தாரமான கிரந்தங்களைச் செய்துமுடித்தாரென்று நன்றாய்த் தெரிகின்றது. உத்தி யோகத்திலிருக்கும்போது தமக்கு எவ்வளவாயினும் அவகாசம் நேரிட்டால் அதை அவர் ஒரு சமயத்திலும் வீணே கழிப்பதில்லை; வேலையில்லாதகாலத் தில் சும்மா இராமல் கல்விப்பயிற்சியில் காலம்போக்குவார்; "ஜனங்கள் வேடிக்கைவிநோதத்திலும் சொந்தக்காரியத்திலும் செலுத்துகிறகாலமெல் லாம் நான் வாசிப்பிலேயே செலுத்துவேன்" என்று சொல்லுவார். நிருபங் களென்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிறார்; அதை வாசித்துப்பார்த்தால், அதிக வேலையுள்ள தினங்களிலும் அவகாசமில்லாத காலங்களிலும் ஏதேனும்

எழுதவேண்டுமோனால், உலாத்தப்போகிறசமயத்தில் தாம் சொல்வதை எழுதிக்கொள்ளும்படிக் குமஸ்தாக்களுக்குக் கட்டளையிட்டு, உலாத்திக் கொண்டே சொல்லவேண்டியவற்றைச் சொல்லிமுடிப்பாரென்று தெரிய வருகின்றது. அவர் செய்த நிருபங்களினால் அவர் இடைவிடாமல் உழை த்துக் காலங்கழித்தாரென்று தெரியும். அவர் செய்த கிரந்தங்கள் அநே கம் மறைந்துபோயின. அவரெழுதிய சில நிருபங்களைப்பார்த்தால் சில விடி யற்காலத்திலும், சில துரைத்தன சபையிலிருக்குங்காலத்திலும், சில போஜ னசமயத்திலும், இன்னும் சில இஷ்டர்கள் காணவருங்காலத்திலும் எழுதிய தாகத் துலங்குகின்றன. எனக்கு ஒவ்வொருகாலத்திலும் ஒவ்வொரு வே லையுண்டு, வேலையில்லாமல் ஒருநிமிஷங்கூட நான் இருப்பதில்லை என்று அவர் ஒரு சிநேகிதனோடு சொல்லியிருக்கிறார்.

சிசிரோவுக்குச் சமானமாகச் சொல்லவேண்டுமோனால் சமீபகாலத்தி லிருந்த ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரைச் சொல்லலாம். இவர் பா ஷாந்தரங்களில் விசேஷமாகப் பயின்றவர். கல்கத்தாநகரத்தில் முன்னிரு ந்த சுப்பிரீம்கோர்டில் ஜட்ஜியாக இருந்தார். ஜட்ஜிவேலையைக் குறை வில்லாமல் பார்த்துக்கொண்டே சாஸ்திரங்களும் வெவ்வேறு பாஷைகளும் படித்துவந்தார். வாலிபம் முதற்கொண்டு தளராமுயற்சி உள்ளவர். சிறு பருவத்திலேயே வாசிப்பில் விருப்பமுள்ளவராக இருந்தார். நாலைந்து வயதிலேயே தம்முடைய தாயைத் தமக்குத் தெரியாதவிஷயங்களைக் கேட் கத்தொடங்கினார். அதற்கு அவள் "வாசி, வாசித்தால் தெரியும்" என்று சொல்வாள். தாயின் நற்போதனையால் தெரியாதவற்றைப் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆவலும் மனவுறுதியும் உண்டாயின; நாளாவர்த் தியில் வாசிப்பில் கவலை அதிகரித்தது. பள்ளிக்கூடத்தில் கல்விபயிலும் போது வகுப்பில் படிக்கும் பாடம்போக அதிகமாகத் தாமே வாசித்துவரு வார். இவருடைய விடாமுயற்சியையும் புத்திநுட்பத்தையும் கண்டு அதி சயம் அடைந்த ஒரு உபாத்தியாயர் இவரை ஓர் உதவியுமில்லாமல் விட்டு விட்டாலும் கீர்த்தியும் ஐசுவரியமும் சம்பாதிப்பதற்கு மார்க்கத்தைத் தே டிக்கொள்ளுவார் என்று சொன்னார். அப்போது சிலநாட்களில் இரா முழுதும் வாசித்துக்கொண்டேயிருப்பார். தூக்கம்வராதிருக்கும்படிக் காப் பியும் தேத்தண்ணீரும் சாப்பிடுவார். மற்ற வாசிப்பில் அவகாசம் நே ரிட்டபோது தருமசாஸ்திரம் பார்த்துவருவார். அக்காலத்தில் தம்மு டைய தாயினிடத்துக்குவருகிற நியாயவாதிகள் மயங்கும்படியாகத் தரும சாஸ்திரத்தில் கேள்விகேட்பார். எக்காலத்திலும் யாவரிடத்திலும் புது மையாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தவறாமல் தெரிந்து கொள்ளுவார். ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கிரீக்கு, லத்தீன் முத லிய பாஷைகளைக் கற்றுவரும்போது, சர்வகலாசாலை சாத்தியிருக்கிற விடுமுறைகாலங்களில் இதலி, இஸ்பேன், போர்சுகிஸ், பிராஞ்சு முதலிய பாஷைகளையும் படித்துக்கொண்டு குதிரையேற்றமும் சிலம்பமும் தெரி ந்துகொண்டார். குடியானவனுக்குண்டான இடம் பொருள் ஏவலால் ராஜகுமாரர் படிக்கக்கூடிய படிப்பைப் படித்துக்கொண்டதாக ஒவ்வொரு சமயத்தில் சொல்லிக்காட்டுவார். ஸ்பென்ஸர் என்ற ஓர் பிரபுவின் வீட்டில் தாம் உபாத்தியாயராக இருந்தபோது நடனம், கத்திச்சிலம்பம், சங்கீதம், ஜர்மன்பாஷை இவற்றைக் கற்றுக்கொண்டார். தருமசாஸ் திரம் வாசித்துவரும்போது ஐசியஸ் என்பவர் செய்த உபந்நியாசங்களைக்

கிரீக்குபாஷையிலிருந்து மொழிபெயர்த்தும், தாமே சில கவிகள்செய்தும் அச்சிட்டுப் பிரசுரப்படுத்தினர். இவ்வேலையாயிருக்கும்போதே தருமசாஸ்திரமும் மீமாஞ்சைநூலும் மிகுதியாகப் படித்து ஒரு சட்டபுத்தகம்செய்து அச்சிட்டார். இவைநீங்க, ஹண்டர் என்ற பண்டிதர் இயற்றிய தேகதத்துவசாஸ்திரமும் நியூடன் என்பவர் செய்த கணிதநூலும் வாசித்தார்.

வங்காளத்தில் சுப்பிரீம்கோர்டில் ஜட்ஜிவேலைகிடைத்துப் பார்த்துவரும்போது வேலைமுடிந்தபின்பு அவகாசம் கிடைத்தபோதெல்லாம் நூல் ஆராய்ச்சியை விடாமல் செய்துவந்தார். வங்காளத்தில் வந்து சேர்ந்தவுடன் வித்தியாபிவிர்த்திக்காக ஒரு சபை உண்டாக்கித் தாமே அக்கிராசனதிபதியாக இருந்து பூர்வீகசாஸ்திரங்களையும் பாஷாந்தரங்களையும் கற்று அதினல் தாமறிந்த விஷயங்களைச் சபையாருக்கும் மற்றுமுள்ளோர்க்கும் உபயோகமாகும்படிப் பிரசித்தம்செய்தார். கோர்டுவேலை மிகுதியாயிருந்தமையால் கோர்டு உள்ளகாலங்களில் வாசிப்புக்கு இடமிராது; கோர்டு மூடியிருக்கிற மாதங்களில் தமக்குப் பிரியமான கிரந்தங்களை வாசித்துப் புறத்தேசத்துப்பாஷைகளை அப்பியாசம் செய்வார். 1785–ஹு வங்காளத்துக்கோர்டு மூடியிருந்தகாலத்தில் அவர் வாசித்துவந்த முறைமையைக் கீழே வருமாறு ஓர் புத்தகத்தில் குறித்திருந்தது. காலையில் எழுந்திருந்து முதல்முதல் ஒரு நிருபம் எழுதிப் பின்பு தமது வேதநூலில் பத்து அதிகாரம் வாசிப்பார். பின்பு வடமொழி இலக்கணமும் ஹிந்துதர்மசாஸ்திரமும் படிப்பார். மத்தியானம் ஹிந்துதேச பூகோளசாஸ்திரமும் மாலையில் ரோமதேசசரித்திரமும் பார்ப்பார். சூரியன் அஸ்தமித்தபின்பு சற்றுநேரம் சதுரங்கம் ஆடி அது ஆனவுடன் அரியாஸ்தோ என்பவர் இதலிபாஷையில் செய்தவிஷயத்தை வாசித்து மகிழ்வார். ஹிந்துதேசத்திற்கு வந்து சிலகாலமானபின்பு அவருக்குத் தேகசௌக்கியம் குறைவுபட்டது; கண்ணும் பார்வை குறைந்தது. அதனல் விளக்கு வெளிச்சத்தில் எழுதுவதை நிறுத்தினர். தேகபலவீனத்தால் வாசிப்பு குறையவில்லை. வியாதியால் எழுந்திருக்கக்கூடாமல் கட்டிலிலேயே படுத்திருக்கும்போதுகூட சாஸ்திரம் வாசிப்பார். தேகசௌக்கியத்தின் நிமித்தம் பிரயாணம் போனகாலத்தில் கிரேக், இதலி, இந்தியா ஆகிய இத்தேசங்களில் ஜனங்களால் தொழப்படுகிற தெய்வங்களைப்பற்றி ஒரு புத்தகம் எழுதினர். மிகுந்த பழக்கத்தால் வாசிப்பும் எழுதுவதும் அவருக்குப் பிரியமான காலப்போக்காயிருந்தன. சிறிதுகாலத்துக்குப்பின்பு தேகத்துக்கு ஆரோக்கியம் உண்டாகவும், முன்போலவே இடைவிடாமல் கோர்டுவேலையும் வாசிப்பும் நடத்திவந்தார். கோர்டில் ஜட்ஜியாக இருக்கும்போது கல்கத்தாநகரத்துக்கு ஐந்துமயில்தூரத்தில் குடியிருந்தார். காலையில் நகரத்துக்குக் கால்நடையாகவருவார்; கோர்டுவேலை முடிந்தபின்பு புறப்பட்டு விளக்குவைக்கும்போது வீடுபோய்ச்சேர்வார். காலையில் நகரத்துக்குவந்து கோர்டு திறக்கும்வரையில் தமது விடுதியிலிருந்து வாசிப்பார். உதயத்தில் நாலுமணிக்குமுன்னமே நித்திரைதெளிந்து எழுந்திருப்பார். 1787–ஹு கோர்டு மூடியிருந்த மாதங்களில் ஹிந்துதர்மசாஸ்திரமும் அரபிதர்மசாஸ்திரமும் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பத்துடன் வடமொழியும் அரபிபாஷையும் வாசித்தார். இவ்வாறு இடைவிடாமல் உழைத்துக்கொண்டிருப்பதே அவருக்கு ஆனந்தமாயிருந்தது. ஹிந்துதேசத்துக்கு வந்தபின்புதான் தமக்குச் சந்தோஷமுண்டாயிற்

றென்று சொல்லுவார். கோர்டுவேலையில் மிகுந்த கவனம்வைத்து உழைத்ததினுல் சிக்கிரத்தில் அசௌக்கியமுண்டாகி இறந்துபோனுர். போர்க்களத்தில் இறப்பதனுல் யுத்தவீரனுக்கு எவ்வளவு பெருமையுண்டாகுமோ அவ்வளவு பெருமை அவருக்கு இதனுல் உண்டாயிற்று. அவர் கடைசியாகச்செய்த கிரந்தம் ஹிந்துமகமதியர் இவர்களுடைய மீமாமிசை நூலின் சங்கிரகம். இந்த நூல் நன்ருகத் தெரியாவிட்டால் ஹிந்துதேசத்துக் கோர்டுகளில் ஜட்ஜியாக இருந்து நியாயம்தவருமல் வேலைபார்ப்பது அருமையென்று சொல்லுவார். இந்நூலை எப்படியாவது செய்துமுடிக்கவேண்டுமென்று பிரயாசைப்பட்டு அசௌக்கியத்தையும் பாராமல் உழைத்தார். இவ்வேலை நடந்தேறிவரும்போது அவருடைய துரைசானி அசௌக்கியத்தின் நிமித்தம் சுதேசத்துக்குப் போகவேண்டியதாய் நேரிட்டது. துரைசானியின் பிரிவால் அவருக்கு உச்சாகம் குறைந்தபோதிலும் தாம் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றவேண்டுமென்று தளராமல் உழைத்துவந்தார். ஆயினும் துரைசானி பிரிந்த சிலகாலத்துக்கெல்லாம் அவருக்கு ஒரு வியாதி உண்டாயிற்று. ஒரு வாரத்துக்குள் இறந்துபோனுர். இறக்கும்போது அவருக்கு வயது நாற்பத்தேழு.

இவர் எண்ணிறந்த புத்தகங்களை வாசித்துப் பல பாஷைகளைக் கற்றுப் பல வேலைகளையும் செய்தார். அதற்கு என்னகாரணமென்ருல் நூதனமாக ஒன்றைக் கற்கிறதற்குச் சமயம்வாய்த்தால் அதைக் கற்றுக்கொள்ளுவார். பிறர்செய்த காரியங்களைத் தாமும்செய்து முடிக்கக்கூடுமென்று துணிந்துசெய்வார். இந்த இரண்டுவிஷயங்களால் அவர் நமக்கு அசாத்தியமென்று தோன்றுகிறகாரியங்களையெல்லாம் செய்துமுடித்ததாகத் தெரியவருகின்றது. நிதானித்துத் தீரயோசித்து எத்தனித்தகாரியத்தில் எந்தவிதமான தடைகள் நேரிட்டபோதிலும் தளர்ச்சியடையாமல் உழைப்பார். அன்றியும் வாசிக்கத்தொடங்குமுன் இன்னகாலத்தில் இன்னது செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு கொஞ்சமேனும் பிசகாமல் அந்த ஏற்பாட்டின்படியே நடந்துவருவார். எந்தவேளையில் எந்தப்பாஷை வாசிக்கவேண்டுமோ அந்தவேளையில் அதையே வாசிப்பார். இவ்வாருக முறைபிறழாது உழைத்துவந்ததால் நாற்பத்தியேழு வயதுக்குள் அநேககாரியங்கள் செய்யும்படியாயிற்று. (இன்னும் வரும்.)

சிந்துபத்திர நாவிகன் கதை.

ஆசியா துருக்கியிலுள்ள பாக்தாத் என்னும் பட்டணத்திலே சிந்துபாத் அல்லது சிந்துபத்திரனென்று ஒரு கனவானிருந்தான். அவன் ஒரு வர்த்தகன். ஆயினும் அவன் பலதரம் தேசாந்தரங்களுக்குக் கப்பல்யாத்திரை செய்தவனுதலால் அவனுக்குச் சிந்துபத்திரநாவிகனென்றே பெயராயிருந்தது. அவன் யாவரிடத்திலும் ஆதரவும் தாராள மனதுமுடையவன். இராக்காலங்களில் போஜனம்செய்தபிறகு தன் பந்துமித்திரர்களைச் சுற்றி உட்காருவித்துக்கொண்டு, தான் அங்கங்கே பார்த்த பல அதிசயங்களையும், கடல்

யாத்திரைசெய்தகாலங்களில் தனக்கு நேர்ந்த பல துன்பங்களையும் வெகு சந்தோஷமாய் அவர்களுக்கு எடுத்துரைப்பான். அப்போது அவன் ஒருநாள் சொன்ன கதையாவது:—

முதலில் இரண்டுதரம் யாத்திரைபோய்வந்ததில் என் வர்த்தகங்களெல்லாம் நன்றாய்க் கைகூடிவந்து பொருளும் விசேஷமாய்க் கிடைத்ததென்றாலும், அந்தப் பொருளை வைத்துக்கொண்டு அவ்வளவோடு திருப்தியாய் வீட்டிலேயே உட்காந்திருக்க எனக்கு விருப்பம் உண்டாகவில்லை. ஒவ்வொரு யாத்திரையிலும் நான் பட்டபாடுகளெல்லாம் அப்படியே என் மனதில் புதிதாயிருந்தாலும், அதனாலேகூட எனக்கு யாத்திரைசெய்வதில் வெறுப்புண்டாகவில்லை. மூன்றாந்தரம் யாத்திரைபோய் எள்ளளவும் பயன் அடையாமல் வீணே நான் பட்ட பெரும்பாடுகளையெல்லாம் சொல்லுகிறேன் கேளுங்கள்:

மறுபடியும் கடல்யாத்திரை செய்யவேண்டுமென்று எண்ணமுண்டானவுடனே நானே புதிதாய் ஒரு கப்பல் செய்துகொண்டு, என்னுடைய சரக்குமட்டுமே அந்தக் கப்பலுக்குப் போதாதென்று கண்டு, இன்னும் இரண்டு மூன்று வர்த்தகர்களையும் கூட்டிக்கொண்டு, காற்று வாட்டமாய் வீசின ஒருநாளில் பாய்விரித்துப் புறப்பட்டேன்.

கடலிலேயே சிலநாள் சென்றபிறகு நிர்மானுஷியமான ஒரு தீவண்டை போய்ச்சேர்ந்தோம். எங்களுள் சிலர் நல்லதண்ணீர் கொண்டுவருவதற்காக அந்தத் தீவுக்குப் போனார்கள். அங்கே மிகவும் பெரிதான முட்டையொன்று இருந்தது. வெளேலென்று ஒரு சிறு குன்றளவு இருந்த அந்த முட்டையைக்கண்டு, இதென்னவென்று நான் பிரமித்துநின்றேன். கூடவந்த சில கப்பற்காரர்கள் இது கண்டபேரண்டபக்ஷியின் முட்டையென்றார்கள். அந்தப் பக்ஷியைப்பற்றி அடிக்கடி எனக்குக் கேள்வியே ஒழிய, அப்படி ஒரு பக்ஷி இருக்குமென்று அதுவரையில் நான் சிறிதும் நம்பவில்லை. அது ஒரு முட்டைதானென்று எனக்கு மெய்ப்பிக்கும் பொருட்டு அவர்கள் அதைக் கோடரியாற்பிளக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் பிளந்துகொண்டிருக்கையில், மேகம்வந்து மறைப்பது போலப் பெருநிழலொன்று கீழேதெரிந்தது. அதென்னவென்று அண்ணாந்துபார்க்கையில், மிகப்பெரிதான இரண்டுபறவைகள் தலைக்குமேல் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அதைக் கண்டவுடனே நாங்கள் வெகு சீக்கிரமாய் ஓடிக் கப்பலில் ஏறிக்கொண்டு உடனே அந்தத் தீவைவிட்டுப் புறப்பட்டோம்.

அதற்குள் அவ்விரண்டுபக்ஷிகளும் தம்முட்டையை வந்துபார்த்து, அது உடைந்துபோயிருப்பதுகண்டு மிகவும் பயங்கரமாய் ஒரு கூச்சலிட்டு, இரண்டும் இரண்டு பெரும்பாறைகளைத் தூக்கிக்கொண்டு (அந்தத் தீவிலே கற்கள் அதிகம்) எங்கள் கப்பலைத்

துரத்தி ஓடிவந்தன; கப்பலுக்குச் சரியாய்வந்ததும் சிறிதுநேரம் அங்கேயே நிலையாய்நின்று நன்றாய்க் குறிபார்த்துக் கொண்டுவந்த கற்களைக் கீழே நழுவவிட்டன. மாலுமி மிகவும் தந்திரசாலியா யிருந்ததனால், அந்தக் கல் விழப்போகிற தருணங்கண்டு சரே லென்று கப்பலை அப்புறம் திருப்பினான். அதனால் முதலில் விழு ந்த கல் கப்பலில் விழவில்லை; கொஞ்சம் குறிதப்பிக் கப்பலோர மாய்க் கடலில் விழுந்தது; அந்தப் பாறை கடலின் அடிப்புறம் நன்றாய்க் கண்ணுக்குத் தெரியும்படி அவ்வளவு பெரிதாய்க் கட லைத் துளைத்துக்கொண்டுபோயிற்றென்றால், அதன் வேகத்தையும் பருமனையும் நாம் என்னென்று சொல்லலாம்! மற்றொருபறவை அப்படிக் குறிதப்பிக் கல்லைப்போடவில்லை. எங்களுடைய துரதிர்ஷ் டத்தால் அதனுடைய கல் நேராய் நடுக்கப்பலில் விழுந்து கப்பலைச் சுக்கல் சுக்கலாக்கிவிட்டது. அவ்வபாயத்தால் அறைபடாமலும் கடலில் மூழ்காமலும் தப்பினவன் நான் ஒருவனே.

அந்தப் பாறை விழ்ந்த அதிர்ச்சியினால் உண்டான மயக்கந் தெளிந்தபின்பு கண்ணை விழித்துப்பார்க்கையில், நான் தண்ணீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தேன். அத்தருணத்தில் அண் டையில் மரத்துண்டுகள் பல மிதக்கக்கண்டு அவற்றுள் ஒன்றில் ஏறிக்கொண்டு திரும்பி அந்தத் தீவுக்கே போகலாமென்று பார்த் தேன். காற்று பிரதிகூலமாய்வீசி மற்றோர்வழியில் தள்ளிக்கொண்டு போய்விட்டது. அப்படியிருக்கப் பொழுதுபோகிற தருணமா யிற்று. அப்போது வெகுதூரத்தில் ஏதோ ஒரு கப்பல் போகக்கண்டு அவர்களாவது துணைசெய்ய வருவார்களாவென்று என்னால் கூடிய வரையில் உரத்துக் கூவினேன்; கைகளையும் உயரவெடுத்துக் குறி காட்டினேன். ஒன்றும் பயன்படவில்லை. அந்தக் கப்பல் அப் படியே போய்விட்டது. இராப்பொழுதாய் இருளும் நன்றாய் மூடிக்கொண்டது. அப்பொழுதும் எனக்கு நிராசைபிறவாமல், உடனே கடலில் மூழ்கிப்போவதைவிட இப்படியேயாவது சிறிது நேரம் அல்லாடிக்கொண்டிருப்பது நலமென்று, தண்ணீர் தள்ளிக் கொண்டு போகிறவழியே போய்க்கொண்டிருந்தேன்.

அப்படியிருக்கச் சூரியோதயமாகி எதிரே மிகவும் செழிப் பான தீவுமொன்று தெரிந்ததென்றால், அப்போது உண்டான என் ஆநந்தத்தை நான் என்னென்று சொல்வேன்! வெகு வருத்தப் பட்டுக் கட்டையைத் தள்ளிக்கொண்டு அந்தத் தீவைநோக்கிச் சென்று கடைசியில் அவ்விடம் சேர்ந்தேன். அந்தத் தீவுமுழு தும் மதுரமான பழங்கள் நிறைந்த பல விருக்ஷங்களும், அழகான பற்பல செடிகளும், மிகவும் தெளிவான நீரோடைகளுமாய் அது ஒரு சிறந்த உத்தியானவனம்போலிருந்தது. அங்கிருந்தவைகளுள் மிகவும் சிறந்த சில பழங்களைப் புசித்துக் கொஞ்சம் தண்ணீரும் குடித்துத் திருப்தி அடைந்தேன்.

கடலோரத்திலிருந்து அந்தத் தீவுக்குள் சிறிதுதூரம் போகையில் அங்கே ஒரு சிறிய நீரோடைக்கரையில் ஒரு கிழவன் உட்காந்திருந்தான். இவனும் நம்மைப்போலவே கடலில் அடிபட்டு வழி தப்பிவந்திருப்பவனென்றெண்ணி நான் அவனண்டைபோய் அவனுடைய யோகக்ஷேமங்களை வினவ, அவன் சிறிதளவு தலையசைத்தானேயல்லது மற்றப்படி மறுஉத்தரமொன்றும் உரைக்கவில்லை. நீ இங்கே என்னசெய்கிறாயென்று நான் அவனை மறுபடியுங்கேட்க, அதற்கும் அவன் ஒன்றும் விடைகொடாமல், அவ்வோடையின் எதிர்க்கரையில்உள்ள பழங்களைப் பறித்துத் தின்னவேண்டுமென்றும், அதற்காகத் தன்னைத் தோளில்ஏற்றிக்கொண்டு அவ்வோடையின் அக்கரைசேர்க்கவேண்டுமென்றும் குறிகாட்டினான்.

அவன் மிகவும் தள்ளாதவனாயும் களைத்திருப்பவனாயும் தோன்றினதினால், நான் மனமிரங்கி அவனுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டு அவனைத் தோளிலே தூக்கிக்கொண்டு அக்கரைசேர்ந்து அவனைக் கீழேவிடும்படிக் குனிந்தேன். அப்போது அவன் செய்ததை நினைத்தால் எனக்கு இன்னும் திகில் உண்டாகின்றது. அந்தக் கிழவன் கீழே இறங்குவதைவிட்டு, என் கழுத்து நசுங்கும்படி உறுதியாய்க் காலால் கட்டிக்கொண்டான். அவன் கட்டின கட்டைத் தாளமாட்டாமல் நான் சோர்ந்து அப்படியே கீழேவிழுந்தேன்.

அப்போதும் அந்தக் கிழவன் தோளைவிட்டு இறங்காமல், எனக்கு தேகத்தில் கொஞ்சம் சோர்வு தெளிந்தவுடன், தன் காலால் என் விலாப்புறங்களில் உதைத்து, என்னை எழுந்து அண்டையிலிருந்த மரங்களின்கீழ் போகச்செய்து, என் தோளின்மேலிருந்தபடியே சுகமாய்ப் பழம்பறித்துத்தின்ன ஆரம்பித்தான். என்னைப் பிடித்தபிடியை அவன் மறுபடி விடவேயில்லை; இரவில் படுக்கும்போதுகூட என் கழுத்தில் காலைக் கட்டினபடியே படுப்பான். பொழுதுவிடிந்ததும் அவன் முன்போலவே என்னைக் காலால் உதைத்துக் கிளப்பி அந்தத் தோட்டம்முழுதும் சுற்றுவிப்பான்.

இப்படியிருக்க ஒருநாள்நான், அங்கோரிடத்தில் உலர்ந்த சுரைக்காய்கள் அநேகமிருக்கக்கண்டு, அவற்றுள் மிகப் பெரிதாய் ஒன்றையெடுத்து அதன் உட்புறமெல்லாம் நன்றாய்க் குடைந்தெடுத்துவிட்டு, அத்தோட்டத்தில் அபரிமிதமாய் விளைந்திருந்த திராக்ஷைப்பழங்களைப் பறித்து, அவற்றின் ரசத்தை அந்தக் குடுக்கைநிரம்பப் பிழிந்து அதை அத்தோட்டத்தில் அடையாளமாய் ஓரிடத்தில் புதைத்துவைத்தேன். பின்பு சிலநாள்கழித்துப்பார்க்கையில் அந்த ரசம் ஒருவித மதுரமான சாராயமாயிருந்தது. அதில் சிறிதளவுதான் நான் குடித்தேன். அதைக் குடித்தவுடனே

என் தேகத்தில் ஒருவிதமான உற்சாகமும் மயக்கமும் உண்டாகி, போகிறவழியெல்லாம் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் போகும்படியாயிற்று.

அந்தச் சாராயத்தால் எனக்கு மிகச் சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டானதுகண்டு என்மேல் ஏறிக்கொண்டிருந்த கிழவன் அதில் தனக்கும் கொஞ்சம் கொடுக்கும்படிக் குறிகாட்டினுன். அப்படியே அந்தச் சுரைக்குடுக்கையை நான் அவன் கையிலே கொடுக்க, அவன் அதில் ஒரு துளிகூட மிகுத்தாமல் எல்லாவற்றையும் குடித்துவிட்டான். அதனுல் அவனுக்கு உடம்புதெரியாமல் அதிக மயக்கமுண்டாயிற்று; ஒருவிதமாகப் பாட ஆரம்பித்தான். அம்மயக்கத்தால் என் கழுத்தைக் கட்டியிருந்த கட்டும் கொஞ்சம் தளர்ந்தது. அத்தருணங்கண்டு நான் இதுதான் சமையமென்று அவனைத் திடீரென்று கீழேதள்ளி உடனே ஒரு பெரும்பாறையை எடுத்து அவன்தலையிலே போட்டேன். பின்பு அவன் எழுந்திராமல் அங்கேயே விழுந்துகிடந்தான். அவன் இறந்தேபோனுனே? அல்லது மூர்ச்சைபோய்க் கிடந்தானே? அது எனக்குத் தெரியாது.

இவ்விதம் அந்தப் பயங்கரமான பெருஞ்சுமையை ஒழித்துவிட்டு நான் சிக்கிரமே கடற்கரைபோய்ச் சேர்ந்தேன். அப்போது நல்லதண்ணீர் எடுத்துக்கொள்வதற்காகச் சில கப்பற்காரர்கள் அங்கே வந்து இறங்கியிருந்தார்கள். அவ்விடத்தில் நான் பட்டபாட்டையெல்லாம் அவர்களுடன் சொல்ல, அவர்கள் என்னையும் தங்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டு போனுர்கள். அந்தத் தீவில் என்னை அப்பாடுபடுத்தின கிழவனைப்பற்றி அவர்களுக்கு முன்னமே தெரியுமாம். நாவிகர்களெல்லாம் அவனுக்குக் கடற்கிழவனென்று பெயரிட்டிருக்கிறுர்களாம். இப்படியாக நான் அந்தத்தடவை பலவிதமாய்த் துன்பப்பட்டுக் கடையாய்த் தெய்வசகாயத்தால் வீடுவந்து சேர்ந்தேன்.

தொழிற்றுறைகளிற்கேற்ற சாமர்த்தியம்.

சாமர்த்தியம் என்பது விசேஷமான குணம். எந்தவிஷயத்திலும் கீர்த்திபெறுவதற்குச் சாமர்த்தியம்வேண்டும். சாமர்த்தியம் இல்லாமல் ஜனங்களை அடக்கி ஆளமுடியாது. நமது அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கிற யாவரிடத்திலும் பக்ஷபாதம் இன்றி அவரவர்கள் திறத்துக்குத்தக்கபடி அவர்களிடத்தில் அபிமானமாய் நடந்து, தகுந்த சமயம்பார்த்து எத்தனித்தகாரியத்தை முடிப்பது சாமர்த்தியமென்று சொல்லப்படும்.

புதியகாரியங்களை ஜனங்கள் கையாடும்படிச் செய்யவேண்டுமானுல் பொறுமைவேண்டும். ஜனங்களுடைய தெரியாமையைப்பற்றிக் கோபிக்

கக்கூடாது. வயது முதிர்ந்தவர்களுக்கு அவர்கள் அனுசரித்துவருகிற பழமையான வழக்கங்கள் நியாயமல்லவென்று ரூபிப்பதுமாத்திரம் போதாது. அதில் வரும் தீங்கை அனுபவத்தில் காட்டவேண்டும். ஒரு காரியத்தை நல்லதென்று சொல்கிறதுமாத்திரம் அல்ல, அதை அனுசரிக்கிற மார்க்கமும் இன்னதென்று காட்டவேண்டும். மனிதருடைய தராதரத்தைத் தெரிந்துகொண்டால் காரியம் முடிவுபெறும். அன்றியும் அவரவர்களுடைய எண்ணத்தையும், கோட்பாட்டையும், மனதையும் அசட்டைசெய்யாமல் தக்கபடி மதித்து, நாம் சொல்வதை மற்றவர்கள் அங்கீகரிக்கவேண்டுமென்று நாம் விரும்புவதுபோலவே, அவர்கள் சொல்வதில் இருக்கும் குணத்தை நாம் அங்கீகரிக்கவேண்டும். மரியாதை தெரியாதவன் மனிதனன்று. கடையில் சாமான்வாங்க வருகிறவர்களிடத்தில் எவ்வளவு மரியாதையாக நடந்துகொள்ளுகிறோமோ அவ்வளவும் நல்லது. வியாபாரி அசட்டையாயிருந்தால் அநேகர் அதினால் மனஸ்தாபப்படுவார்கள். என்னசெய்தாலும் திருப்தி அடையாதவர்கள் சிலருண்டு. சிலர் எந்தச் சரக்குகொடுத்தாலும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. சாமான்கொடுப்பதில் வியாபாரிகளால் தாமதம்நேரிட்டால், தம்மையும் தாம் கொடுக்கிற கிரயத்தையும் அவ்வியாபாரிகள் மதிக்கிறதில்லையென்று நினைக்கிறவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

நல்லவியாபாரிக்குக் கோபம் கூடாது. அன்றன்றைக்கு வியாபாரத்தில் நடக்கிற பிசகுகளால் மனதுக்கு வருத்தம் உண்டாகும். வியாபாரி பிசகிப்போனால் அப்போது கேட்டுச் சகிக்கக்கூடாமல் பலபேர் பலவா
[illegible] வார்கள்; இந்தச் சமயங்களில் சாமர்த்தியமாக் நடந்துகொள்ள
[illegible] யாபாரிகளுக்குப் பலபேர் பலவிதமாக எழுதுவார்கள்;
[illegible] ோஷத்தைக்கற்பித்தும், வாங்கின சாமானுக்குப்
[illegible] கேட்டால் அதை அவமதித்தும் பேசுவார்கள்.
[illegible] ன்றையும் பாராட்டாமல் துணிவாய் இருப்பது
[illegible] ஞ்செய்ய வந்தவனிடத்தில் அதிகமாகப் பேசி
[illegible] விட்டு வேறொரு கடைக்குப் போய்விடு
[illegible] சாமான் வாங்கும்படியாகச் செய்யவேண்டிய
[illegible] தர்களும் உண்டு. இப்படிப் பலவிதமாய் இருக்கிற மனிதர்களுடைய தன்மையை வியாபாரிகள் தெரிந்துகொள்ளவேண்டுவது முக்கியம். முகத்தைப்பார்த்துக் குணத்தைக் கண்டுபிடிக்கிற சாமர்த்தியமும் வேண்டும். இந்தச் சாமர்த்தியத்தாலேயே வியாபாரிகள் அநேகர் விருத்தியடைந்திருக்கிறார்கள். இது சிலருக்குச் சுபாவமாக இருக்கும், மற்றவர்கள் அநுபவத்தால் சம்பாதிக்கவேண்டும். ஒவ்வொருவனையும் ஒவ்வொருவிதமாகச் சிநேகித்து வசப்படுத்திக்கொள்ளலாம். அவரவர்களுடைய நோக்கத்தைத் தெரிந்துநடக்கவேண்டும். சிலர் கடையில் சாமான்வாங்கினபின்பு சற்றுநேரம் உட்கார்ந்து பேசிவிட்டுப்போக விரும்புவார்கள்; அவர்களைத் தாக்ஷணியமில்லாமல் போகும்படிச் சொல்வது நியாயமல்ல. அவர்கள் போகும்படியாகவும், அவர்கள் இன்னும் சற்றுநேரம் இருந்துபோவது நமக்குச் சந்தோஷமென்று தோன்றும்படியாகவும் செய்துகொள்வதும் சாமர்த்தியம். கடையைவிட்டுப் போகும்போது சந்தோஷமாகப் போகும்படிச்செய்யவேண்டும். வியாபாரம் செய்யவந்தவர் வாங்கினசரக்கைத் தாமே எடுத்துக்கொண்டுபோவதற்கு அசாத்திய

மாக இருக்கிற சமயம்பார்த்து அதைத் தூக்கிக்கொண்டுபோவதற்கு ஒரு ஆளை அனுப்புகிறது அவருக்குச் சந்தோஷமாகும். கடைக்கு வருகிறவர்களை மரியாதையாக அழைத்தும் அதை விட்டுப்போகிறவர்களைச் செலவு கொடுத்து அனுப்பியும் கவனமாக வியாபாரம்செய்தால் யாவரும் பிரியப்படுவார்கள்.

இவ்வாறுகச்செய்யும் மரியாதையே சாமர்த்தியம் என்னப்படும். பிரியப்படாதகாரியத்தைப் பிரியப்படும்படியாகச் செய்கிறவன் சமர்த்தன் என்று எண்ணப்படுவான். வியாபாரத்தில் தனக்கு நஷ்டம் நேரிடாமலும் வாங்குகிறவர்கள் சந்தோஷப்படும்படியாகவும் நடப்பவனே சமர்த்தன். நாம் மற்றொருகடையில் சரக்கு வாங்கப்போனால் எவ்விதமாக நம்மிடத்தில் அந்த வியாபாரி நடந்துகொள்ளவேண்டுமென்று பிரியப்படுகிறோமோ அவ்வாறே நம்முடைய கடைக்கு வருகிறவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ளவேண்டும். அதிகமாக முகநட்புப்பேசி வணங்கி ஊழியம் செய்யவேண்டுவதில்லை. பொறுமையும் பிறர்நன்மையைப் பாராட்டுதலும் மரியாதையான ஒழுக்கமும் ஒருவருக்கும் மனஸ்தாபமில்லாமல் நடந்துகொள்ளவேண்டுமென்கிற எண்ணமும் இருந்தால் வியாபாரத்தில் விருத்தியடையலாம்.

தகுந்தசமயத்தில் காரியத்தை முடிப்பது பெரிய சாமர்த்தியம். இதனால் வியாபாரிகள் சிலர் விசேஷமாக விருத்தியடைந்திருக்கிறார்கள்.

பிள்ளைகளைப் பயிற்றுவதில் பெற்றோர்களுக்குச் சாமர்த்தியம்வேண்டும். பிள்ளைகள் பிசகுசெய்தால் அடித்து வருத்தப்படுத்தவேண்டுவதில்லை; பிசகு இன்னதென்று அவர்களே தெரிந்துகொள்ளும்படியாக வி
உண்டாக்கவேண்டும். நம்முடைய கரணகளேபரங்கள்
டைய நன்மைக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கி
களைப் போனவழியேவிடாமல் நல்லவழியி
டைய கடமை. சில பிள்ளைகள் சற்றுநேரங்கூ
வதும் எறிக்குதிப்பதுமாக இருக்கிறார்கள்;
சும்மாயிருப்பது அவர்களுக்கு வருத்தமா
ரிந்தவர்களாக இருந்தால் அவரவர்களுக்குத்தக
கள். இவ்வாறே யஜமானனும் துரைத்தனத்தாரும்
குடிகளையும் தக்க வேலைசெய்து காலங்கழிக்கும்படியாக ஏற்பாடுசெ
வார்கள்.

பெரிய வியாபாரத்துக்கும் சில்லறை வியாபாரத்துக்கும் வித்தியாசமிருக்கின்றது. என்னவென்றால், சில்லறை வியாபாரத்தில் வாங்குகிறவனைப் பார்க்கிலும் விற்கிறவனுக்குச் சரக்குகளின் வித்தியாசமும் விலையின் தாரதம்மியமும் நன்றாய்த் தெரிந்திருக்கும். உபாயமான சரக்கு வாங்குகிறவர்கள் பல வியாபாரிகளிடத்தில் போய் விலைவாசிகளை விசாரியார்கள். ஆகையால் சில்லறை வியாபாரிகள் நியாயமான விலையைத் தாமே சொன்னாலொழிய, வாங்குகிறவர்களுக்கு இன்னது சரியானவிலையென்று தெரியாது. ஆகையால் இவ்விஷயங்களில் யோக்கியனென்று தெரிந்த வியாபாரியினிடத்திலேயே வாங்கவேண்டும். இல்லாவிட்டால் மோசம்நேரிடும்.

சாமர்த்தியம் சிலருக்குச் சுபாவத்திலேயே உண்டாயிருக்கும். பழக்கத்தினால் சாமர்த்தியம் உண்டானபோதிலும் சுபாவ சாமர்த்தியத்துக்கு ஈடாகாது. இன்னசமயத்தில் இன்னது செய்யவேண்டுமென்று சிலர் பிச

காமல் தீர்மானிக்கிறார்கள். அவர்களுக்குப் புத்திகூர்மையும் பிரதிகூலங்களை வெல்லும் தைரியமும் உண்டாயிருக்கும். அவர்கள் எந்தவிஷயத்திலும் கவனம்வைத்து ஒவ்வொரு சங்கதியையும் தீர ஆலோசிப்பார்கள். சமயம்நேரிட்டபோது தங்களுடைய புத்தி சாமர்த்தியம் முழுதும் உபயோகிப்பார்கள். வீண்காரியத்தில் தலையிட்டுக்கொண்டு காலத்தை வீணே கழிக்கமாட்டார்கள். இந்த நல்லகுணங்கள் இல்லாவிட்டால் புத்தியிருந்தும் உபயோகமில்லை.

உலகத்தில் பொறுமையில்லாவிட்டால் சமாதானம் இல்லை. “ஒருவர் பொறை இருவர் நட்பு” என்று பழமொழியல்லவா? ஒரு பிசகுசெய்தால் அதினால் விளையும் தீங்கை மறைப்பதற்கு பல பிசகு செய்யவேண்டியதாயிருக்கும். சாதாரணமாக நாமெல்லாம் முதலில் பிசகுசெய்தால் அதைப் பிறர்மேல் ஏறிடுவது வழக்கம். ஆனால் சற்று யோசித்துப்பார்ப்போமானால் நம்முடைய குற்றம் நாம் செய்ததுதானென்று நன்றாக விளங்கும். ஒருவர் குற்றம்செய்வாராகில் அதை எடுத்துக்காட்டுவதற்குச் சாமர்த்தியம் வேண்டும். பெற்றோர்களுக்கும் எஜமானனுக்கும் இந்தச் சாமர்த்தியம் இல்லாவிட்டால் பிள்ளைகளும் வேலையாட்களும் திருந்தமாட்டார்கள். குற்றத்தை எடுத்துக்காட்டுவதில் சிலர் சாமர்த்தியக்குறைவால் உள்ளதுக்கு மோசம்வரும்படிச் செய்கிறார்கள். குற்றத்தைத் தெரியப்படுத்தினால் சிலர், இனி நாம் அதைச் செய்யாமலிருக்கவேண்டும், செய்தால் நம்முடைய பெருமைக்குக் குறைவு உண்டாகும் என்று எண்ணங்கொள்ளாமல், அதைச் செய்தாலென்ன, நம்மை யார் என்னசெய்யலாமென்று ஒருவித கர்வம் கொள்கிறார்கள். இது சாமர்த்தியம் இல்லாமையால் உண்டாகும். குற்[illegible]னை எச்சரிப்பது நியாயமே; ஆனால் எச்சரிக்கிற மார்க்கம் [illegible]வதினால் தீமை விளையுமேயன்றி நன்மை ஒருபோதும் [illegible]ம் இவ்வாறே. பிள்ளைகளைச் சிலாகிப்பதில் மிகு[illegible] சிலாகிப்பதினால் ஊக்கம் உண்டாக்க உத்[illegible]ஊக்கம்போய் இறுமாப்பு உண்டாகிறதும் [illegible]போது அதைத் திருந்தச்செய்யவேண்டும். [illegible]த பெற்றோர்கள் தத்தம் பிள்ளைகளுக்கு நன்னெறி போதிப்பதும், எஜமானன் தன் வேலைக்காரரை அடக்கி ஆளுவதும் அருமையாயிருக்கும். வியாபாரமும் இதுவின்றிக் குறைவற நிறைவேறாது.

ஒரு நியாயாதிபதி கதை.

முற்காலத்திலே வண்ணானொருவனிருந்தான். அவன் விசேஷ தனிகன்; ஆயினும் அவனுக்குப் பிள்ளையில்லை. அதனால் அவன் மிகவும் விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அப்படியிருக்க ஒரு நாள் அவன் தன் கழுதையை ஓட்டிக்கொண்டு ஒரு பாடசாலையின் வழியாய்ப்போகையில், அங்கே அப்பாடசாலையின் உபாத்தியாயர்களுள் ஒருவன், ஒரு மாணாக்கனிடத்தில் மிகக் கோபங்கொண்டு, அடா மடையா! உன்னை ஒரு மனிதனுக்குவதைப்பார்க்கிலும் ஒரு

கழுதையை மனிதனாக்குவது எளிதென்று எனக்குத் தோன்றுகின்றது என்று சொல்லி அந்தப் பிள்ளையை அதட்டிக்கொண்டிருந்தான்.

அவ்வீதிவழியே போன வண்ணான் அதைக்கேட்டு, ஆ! ஆ! இந்த உபாத்தியாயர் எவ்வளவு திறமை உடையவர்! கழுதையை மனிதனாக்குவதாய்ச் சொல்லுகிறாரே; அது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது! அப்படியானால் நமது கழுதைகளுள் ஒன்றை மனிதனாக்கி மகனாக வைத்துக்கொள்ளலாமே என்றிப்படி எண்ணிக்கொண்டே வேகமாய் வீட்டுக்குப்போனான்.

வீடுபோய்ச்சேர்ந்ததும் தன் பெண்சாதியைப்பார்த்து, ஒரு ஆச்சரியம் கேட்டாயா! கழுதையை மனிதனாக்குவதாக அந்தப் பாடசாலை உபாத்தியாயர் சொல்லுகிறாரென, அவள், அப்படியா, அதைவிட அதிசயம் வேறென்ன! ஆனால் நமது கழுதைகளுள் ஒன்றை அவரிடம் கொண்டுபோய் அதை மனிதனாக்கிக் கொடுக்கச்சொல்வது நலமென்று தோன்றுகிறதென்றாள்.

அப்படியே அன்றையதினம் மாலையில் வண்ணானும் வண்ணாத்தியும் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு அந்த உபாத்தியாயர் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். அங்கே அந்த உபாத்தியாயரைக்கண்டு வண்ணான், ஐயா! ஒரு விண்ணப்பம் கேட்டுக்கொள்கிறேன்,
மன்னிக்கவேண்டும். இன்று நான் தங்கள் பாடசாலை வழியா
போகையில், கழுதையைக்கூட மனிதனாக்க
கள் சொல்லக் கேள்விப்பட்டேன்; என்
மனிதனாக்கிக் கொடுக்கமாட்டுவீர்களா எ

அதைக்கேட்டு அவன் இவன் பி
நேரம் ஆலோசித்து, கடைசியில் இவ
னென்று அறிந்துகொண்டு இதுதான் நமக்கு நல்லதருணமென்று
நினைத்து, வண்ணானைப்பார்த்து, இதற்கென்ன வருத்தம்; சுகமாய்ச் செய்யலாம். ஆனால் உன் கழுதையைமட்டும் ஒரு வருஷகாலம் என்னிடத்தில் விட்டுவைக்கவேண்டும். சரியாய் ஒரு வருஷந்தான்! மறந்துபோகப்போகிறாய் என்றான்.

அதைக்கேட்டு மிகவும் சந்தோஷமாய் வண்ணான் கழுதையை அங்கேயே விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பப்போனான். அது கண்டு உபாத்தியாயன், நில், நில்! ஒரு பயனுமில்லாமல் இக்காரியம் செய்கிறதென்றால் என்னாலாகுமா? கழுதையை மனிதனாக்க எவ்வளவோ பாடுபடவேண்டுமே என, அதைக்கேட்டு வண்ணான் சிறிது முகக்களைமாறித் திரும்பிப்பார்த்து, ஆனால் அதற்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்றான்.

அதைக்கேட்டு உபாத்தியாயன், கழுதை எப்படிப்பட்டதோ அதைப் பார்த்துத்தான் இவ்வளவென்று சொல்லக்கூடும்; உங்கள்

கழுதை எங்கே என்றுகேட்க, வண்ணான் கழுதை கட்டியிருந்த விடத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுபோய் அதைக் காட்டினான். அவன் வெகு நுட்பமாய்ப் பார்ப்பதுபோல அந்தக் கழுதையை நன்றாய் நாற்புறமும் சுற்றிப்பார்த்து, ஓ! இந்தக் கழுதையை மனிதனாக மாற்றுவது மிகவும் கடினம்; இதன் கால்களைப்பார்; இவற்றை மனிதன் காலாகச்செய்வதென்றால் சொற்பத்திலாகுமா? முந்நூறு ரூபாய்க்குக்குறைந்தால் செய்யக்கூடாதென்றான். அதைக்கேட்டு வண்ணான் நீங்கள் கேட்பது மிகப் பெருந்தொகையல்லவா என, உபாத்தியாயன், உன் கழுதையின் கால்கள் இப்படியிருக்கின்றனவே, அதற்கு யார் என்னசெய்யலாமென்றான். அதன்மேல் ஒன்றுந்தோன்றாமல் வண்ணான் தன் பெண்சாதியைப் பார்த்து, அவ்வளவு பொருள் கொடுக்கலாமாவென்று கேட்க, அவள், பிள்ளையில்லாமல் பொருள்வைத்திருந்து ஆகவேண்டுவதென்ன? கொடுக்கவேண்டுவதுதானென்றாள். அப்படியே அந்த உபாத்தியாயனுக்கு முந்நூறுரூபாய் கொடுத்துவிட்டு அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

வீட்டுக்குப் போனதுமுதல் அந்த வண்ணானுக்கும் வண்ணாத்திக்கும் வீட்டிலே வேறுசிந்தையில்லை. எப்போது ஒரு வருஷமாகப்போகிறது, எப்பொழுது மகன் வீட்டுக்கு வரப்போகிறானென்று எந்நேரமும் அதேசிந்தையாயிருந்தார்கள். அதனால் அவர்களுக்கு ஒருநாள் கழிவது ஒரு யுகமாயிருந்தது. மெல்ல மெல்லப் பதினொருமாதம் கழிந்தது. நாளாகிவிட்டது; உபாத்தியாயனிடம் போகவேண்டுவதுதானென்று அவர்கள் வெகு சந்தோஷமாயிருந்தார்கள். ஐயோ! அவர்களுடைய துரதிர்ஷ்டத்தால், அவர்கள் அவன் வீட்டுக்குப் போகவேண்டியதினத்திற்கு இரண்டொருநாள்முன்னே வண்ணானுக்குப் பெருங்காய்ச்சல் உண்டாகிச் சிலநாள்வரையில் அவன் படுத்த படுக்கையாய்க் கிடக்கும்படி நேரிட்டது. அப்போது அவன் எப்படி உபாத்தியாயன் வீட்டுக்குப் போகமாட்டுவான்! இன்றைக்கு வருகிறபிள்ளை நாலுநாள் பொறுத்தால் ஓடிப்போகுமாவென்று காய்ச்சல் குணப்படுகிறவரையில் பொறுத்திருந்து கொஞ்சம் குணப்பட்டதும் அவ்வுபாத்தியாயனைக் காணும்படி வண்ணான் நோய்ப் பாடசாலைக்குச் சென்றான்.

அங்கே போனவுடன் அவ்வுபாத்தியாயனைக்கண்டு, ஐயா, மகனெங்கே? எனக்கு உடம்பு அனுகூலமில்லாமலிருந்ததனால் தங்களிடம்வர இத்தனைநாள் தடைப்பட்டதென, அதற்கு உபாத்தியாயன், நீ நான் சொன்னகாலத்திற்குச் சரியாய் வந்திருக்கவேண்டும்; காலந்தப்பிவந்தாயே! உன் கழுதை மூன்றுமாதத்திற்கு முன்னமே மனிதாகமாறி, இப்போது ஜோனபுரத்து நியாயாதிபதியாயிருக்கிறதென்றான். நடந்த வரலாறென்னவெனில், வண்

ணுன் கழுதையை விட்டுப்போன மறுநாளே உபாத்தியாயன் அதை விற்றுப்போட்டான். வண்ணான் அவ்வுபாத்தியாயனுடைய சூது தெரியாமல் ஏமாந்துபோனுன்.

அப்போதும் அவன் சொல்வது உண்மைதானென்றெண்ணி வண்ணுன், ஆனால் இனி நான் அவனை எப்படிப் பார்க்கிறதென்று கேட்க, உபாத்தியாயன், ஏன்? நீ அவ்விடம் போகக்கூடாதோ வென்றான். அதற்கு வண்ணான், போவதற்கு யாதொரு தடையுமில்லை; அவன் நியாயாதிபதியாயிருக்கிறானே; அவனை எப்படிக் காண்கிறது; மேலும் நான் இன்னானென்பது அவனுக்கு எப்படித் தெரியுமென்று கொஞ்சம் வெறுப்பாய்ச்சொல்ல, நீ உன் கழுதையின் கடிவாளத்தையும் தண்ணீர்த்தொட்டியையும் கொண்டு போய்க் காட்டினால், தானே அடையாளம் கண்டுபிடித்துக்கொள்கிறானென்றான்.

அவ்வுபாத்தியாயனுடைய பல கற்பனைகளுள்ளும் இந்தக் கற்பனை வெகு சாதுரியமானது. இன்னும் அவன் சூது வண்ணானுக்குத் தெரியவில்லை. ஒருவேளை இவ்வடையாளங்கள் அவனுக்குத் தெரிந்தாலும் தெரியலாமேயென்று வண்ணான் கொஞ்சம் சந்தோஷமாயே உபாத்தியாயனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போனான். அன்றையதினமெல்லாம் அவர்கள் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதே வேலையாயிருந்தார்கள். மறுநாள் காலையில் அவர்கள் தங்கள் பழங்கழுதையின் ஜீனி கடிவாளம் தொட்டி முதலானவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு பயணப்பட்டு, மெல்லமெல்ல ஜோனபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பட்டணம் போய்ச்சேர்ந்ததும் அங்கே அவர்கள் சிறிதுநேரம்கூடத் தாமதிக்கவில்லை. உடனே நியாயாதிபதி வீற்றிருக்கும் சபைக்குப் போனார்கள். அங்கே பலபேர்வந்து கூட்டங்கூடியிருந்தார்கள். அப்போது அந்த வண்ணானும் வண்ணாத்தியும் ஜீனி கடிவாளம் முதலியவைகளை வைத்துக்கொண்டு, நியாயாதிபதி அவற்றைப்பார்த்துத் தங்களைத் தெரிந்துகொள்ளட்டுமென்று, அவன் பார்வைக்குநேரான ஒரு மூலையிலேபோய் நின்றார்கள்.

அப்போது சிறிதுநேரம் கழித்து நியாயாதிபதி தற்செயலாய், பலவித சமிஞ்ஞைகள்காட்டிக் கடிவாளத்தை ஆட்டிக்கொண்டு, ஒருபுறத்தில் வண்ணான் நிற்பதைக்கண்டு, இதென்னவென்று மிகவும் ஆச்சரியப்பட்டு ஒரு சேவகனை அழைத்து, அவனென்ன வேண்டுகிறான் கேளென்றுசொன்னான்.

அப்படியே அந்தச் சேவகன் அவ்வண்ணானை அழைத்து வந்து நியாயாதிபதிக்குச் சமீபத்தில்நிறுத்த, அந்த அதிகாரி அவனைப்பார்த்து, என்னவிசேஷமென்று கேட்டான்.

அதற்கு அந்த வண்ணான், ரகசியத்தில் தங்களோடுபேசினால் நலமென்று தோன்றுகிறதென, அதிகாரி, அது கூடாது; எது

சொல்லவேண்டுமென்றாலும் சபையிலேதான் சொல்லவேண்டு மென்றான்.

அதைக்கேட்டு வண்ணான், நான் இன்னானென்பது உனக்குத் தெரியாதா? என்ன! இவ்வளவுசீக்கிரத்தில் நீ என்னை மறந்துபோனாயா? முன்னே நான் உனக்கு யஜமானனல்லவா என்றான். முன் தன்னை அவன் அறிந்துகொண்டதாய் அதற்கேற்ற குறியொன்றும் அவன் முகத்தில் தோன்றாமலிருக்கவே, வண்ணானுக்கு அவனிடத் தில் கொஞ்சம் கோபமுண்டாயிற்று.

ஓ நற்குணமுள்ள பெரியோரே! உன்னை ஒருபோதும் கண்ட தாய் எனக்கு நினைவுவரவில்லையே என்று நியாயாதிபதி சொல்ல, வண்ணான் மிகக்கோபங்கொண்டு, ஆ, நன்றிகெட்ட கழுதாய்! நீ எத்தனைவருஷகாலம் முதுகிலே மூட்டைசுமந்துகொண்டு எனக் குப் பணிவிடைசெய்துவந்தாய்? நான் எவ்வளவு அன்பாய் இரை போட்டு உன்னைக் காப்பாற்றினேன்? அப்படியிருக்க நீ எல்லா வற்றையும் மறந்து என்னையே அறியமாட்டேனென்கிறாயா! என்று கண்களில் நெருப்புப்பொறிபறக்கப் பேசினான்.

அவன் பேசுவதைக்கேட்டு நியாயாதிபதி, இது என்ன அதி சயமென்று மிகவும் பிரமைபிடித்து ஒன்றும் பதில்சொல்லத்தோன் றாமல், வண்ணான்வாயையே பார்த்துத் திகைத்துக்கொண்டுநின் றான்.

அப்போதும் வண்ணான் வாயை மூடவில்லை. என்னைத்தான் நீ மறந்துபோனாயே! உன் கடிவாளம் தொட்டிமுதலியவைகளைக் கூட மறந்துபோனாயோ? இது நீயே தரித்துக்கொண்டிருந்தது தான். இதோ எல்லாவற்றையும் செம்மையாய்ப் பார் என்று அவற் றையெல்லாம் தனித்தனியே எடுத்துக்காட்டிப் பின்னும் சொல்லு கிறான்.

எழுந்திரு, வீட்டுக்குப் போவோம்வா; ஒன்றும் தெரியாதெ ன்று பாசாங்குபண்ணுகிறாயோ! நீ என் கழுதையென்பது உனக் குத் தெரியாதா? நான் உன்னை உபாத்தியாயரிடத்திற்குக் கொண்டு போய் உன்னை மனிதனாக்குவதற்காக அவர்க்கு முந்நூறுரூபாய் கொடுத்து உன்னை அங்கே விட்டுவந்தேனே! அதுகூட உனக்குத் தெரியாதா? ஆ, நன்றிகெட்ட கழுதாய்! உதைக்கிறேன் பார்! உனக்கெல்லாம் தெரியும்! ஏன் வீணே பாசாங்குசெய்கிறாய்! மூன்றுமாதத்திற்குமுன்னே நீ மனிதனாகமாறி, உடனே நியா யாதிபதியாய் இவ்விடத்திற்கு வந்துவிடவே, சிறிதும் நன்றியற்றவ னாய் ஐயோ பாவமென்று உன் பழைய யஜமானனைச் சிறிதும் நினை யாமல் உபேக்ஷைபண்ணுகிறாயா? இப்படி அநியாயம்செய்கிற நீ எப்படி நியாயாதிபதியாவாய் என்றிப்படிப் பலவிதமாய்ப் பேசிக் கடைசியில் தன் நிலை தனக்கேதெரியாமல் பலவிதமான சேஷ் டைகள்செய்ய ஆரம்பித்தான். ஐரோப்பியர்களுடைய சபையில்

இப்படிப்பட்டசெய்தியொன்று நடக்குமானல், அதைக்கண்டுசபை யார் நகைக்கிற நகைப்புக்கு மட்டுமிதமேயிராது. இது இந்துக்க ளுடைய சபையாதலால், அனைவரும் உள்ளுக்குள்ளேயே மகி ழ்ந்துகொண்டிருந்தார்களேயொழிய ஒருவராவது வெளியே உர த்து மூச்சுகூட விடவில்லை. பெரியோர்களுடைய சபையில் சிரி ப்பது காறுவது பொடிபோடுவது முதலிய கெட்டசெய்கைகள் கூடாதென்கிற ஏற்பாடு இந்துக்களுக்குள் இருப்பதுபோல் மற்ற ஜாதியார்இடத்தில் அவ்வளவாய்க் கிடையாது.

மேலும் வண்ணான்கதையைக் கேளுங்கள்: வண்ணான் சொல் வதையெல்லாம் நியாயாதிபதி பொறுத்துக் கேட்டுக்கொண்டிருந்து, அவன் பேச்சு ஓய்ந்ததும், அவன் அப்படிப் பேசினதெல்லாம் தெரியாமையாலென்றும், யாரோ யுத்திபண்ணி அப்படி அவனை மோசஞ்செய்தார்களென்றும் சாவதானமாக அவனுக்கு நன்றாய்த் தெரிவித்து, அவனுடைய மதிக்குறைவுக்காக மிகவும் பரிதாபப் பட்டு, விசேஷமாய்ப் பொருள்கொடுத்து அவனை அனுப்பினான்.

தாங்கள் அப்படி மோசம்போனதற்காக மிகவும் ரோஷமும் விசனமுமடைந்தவர்களாய், வண்ணானும் வண்ணாத்தியும் தங்கள் கிராமத்துக்குப்போகப் புறப்பட்டுச் சிலநாளில் அவ்வூர்போய்ச் சேர்ந்தார்கள். போகும்போது வண்ணான், அடா உபாத்தி யாயா! இப்படி என்னை மோசஞ்செய்த உன்னை நான் சும்மா விட்டேனு பார்! என் கழுதையையும் முந்நூறு ரூபாயையும் கொடாமற்போனல் நீ படப்போகிற பாட்டைப்பார் என்று அவ் வுபாத்தியாயனைத் திட்டிக்கொண்டேபோனான்.

ஊர்போய்ச்சேர்ந்ததும் வண்ணான் மிகுந்த கோபத்துடன் முன் அவ்வுபாத்தியாயன் இருந்த இடந்தேடிச்சென்றான். அங் கே அவன் அகப்படவில்லை; அவ்வூர்முழுதும் தேடியும் அவன் இருக்குமிடம் தெரியவில்லை; அவன் அவ்வூரில் இல்லவேயில்லை; எங்கேயோ போய்விட்டான். அவன் போனவிடமும் ஒருவர்க் குந்தெரியாது.

ஐயோபாவம்! பேதைவண்ணான்! வீணாய்ப் பிள்ளைக்காகப் பேரா சைகொண்டு கையில்வைத்திருந்த ரூபாயையும் கழுதையையும் தோற்றதுமல்லாமல் இவ்வளவு மதியீனனுவென்று யாவரும் நகை க்கும்படியானான்.

இந்தக் கதை வெளியே பரவாமலிருக்கவேண்டுமென்று அந்த நியாயாதிபதி பலவிதமாய் முயன்றானும். அவ்வளவு முயற்சி யும் பயன்படாமல் அந்தக் கதை தேசம்முழுதும்பரவி, ஜோன புரத்து நியாயாதிபதிபோலென்று அத்தேசத்தில் ஒரு பழமொழி கூட வழங்கும்படியாயிற்று.

நீதிபோதனை.

இப்போது இத்தேசத்தில் பிள்ளைகளைப் படிப்பிக்கப் பாடசாலைகள் அநேகம் ஏற்பட்டிருக்கின்றன; அவற்றில் படிக்கின்ற பிள்ளைகளுக்கோ கணக்கில்லை; ஆயினும் அப்பிள்ளைகள் படிக்கின்ற படிப்பெல்லாம் வெகுவாய் மதிமலர்ச்சிக்குமட்டும் ஏதுவாயிருக்கின்றனவேயொழிய நீதிபோதனைக்குப் பயன்படவில்லை. பிள்ளைகள் முதலில் ஒரு பாடசாலையில் படிக்கப்பிரவேசிக்கிற நாள்முதல், கடைசியில் படிப்பெல்லாம் முடிந்ததென்றுசொல்லி ஒரு பெரிய வித்தியாசாலையைவிட்டு நீங்குகிற நாள்வரையில், சர்வகலாசாலையார் ஏற்படுத்திய பரீக்ஷைகளுக்கு உபயோகமான பாடங்களையே படித்துக் காலங்கழிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாமல் இருக்கிறதென்பதில்லை; அந்த விஷயங்களில் சித்தி பெறவே பெறுகிறார்கள். ஆயினும் பின்பு உலகவியாபாரங்களிற் புகவேண்டுமென்றால் வருத்தமுண்டாகின்றது. இக்காலத்துப் பிள்ளைகளுக்குப் புத்தி விவேகங்கள் இல்லையென்பதில்லை; உபாத்தியாயர்கள்கூடக் கண்டு ஆச்சரியப்படும்படியான புத்திநுட்பமும் விவேகமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தி வாலிபத்திலேயே நன்றாய்ப் பயிற்றப்படுமானால், பின்பு அவர்கள் உலகவியாபாரங்களில் வெகு சாமர்த்தியமுடையவர்களாயிருப்பார்கள். அப்படிப் பயிற்றுவதுதான் வெகு அருமையாயிருக்கின்றது. உபாத்தியாயர்கள் அதற்கேற்றபடி புத்திகூர்மையைமட்டும் கற்பித்துக்கொடுக்கிறார்களேயொழிய உலகவாழ்க்கைக்கு வேண்டிய நீதிமுறைகளை நன்றாய்ப் போதிப்பதில்லை.

இக்காலத்துப் பிள்ளைகளுக்கு நீதிமுறைகள் மனதில் சரியாகப் படிவதில்லை. ஒன்றுக்கொன்று விரோதமான கருத்துகள் முதலிலேயே அவர்களுக்கு உண்டாகின்றன. வீட்டிலிருக்கையில் ஒரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது; பாடசாலையிலும் புத்தகங்களைப் படிக்கையிலும் மற்றொருவிதமான அபிப்பிராயமுண்டாகின்றது. பந்துக்களும் அவ்விரோதாபிப்பிராயங்களை மாற்றி அப்பிள்ளைகளின் மனதை ஒருமைப்படுத்துவதில்லை; பாடசாலை உபாத்தியாயர்கள் அதைச் செம்மைப்படுத்தினால் படுத்தலாம்; அவர்களும் தாங்கள் கடமையாய்ச் செய்யவேண்டிய கற்பனையொன்று தவிர மற்ற விஷயங்களிற் புகுவதில்லை. பிள்ளைகளுக்கு வீட்டிலே கிடைக்கின்ற நற்போதனை மிகவும் அற்பமானது. செடியாய் வணங்காதது மரமாய் வணங்குமா என்கிறபடி, இளமையிலேயே திருத்தப்படாத மனது முதிர்ந்தபிறகு திருந்துமா என்பதைக் கவனியாமல், தாய்தந்தையர்களும் நம்மிஷ்டப்படி வணங்கத்தக்க இளமன

தைச் சீர்ப்படுத்தாது உபேக்ஷையாயிருந்துவிடுகிறார்கள். பாடசாலைகளில் பூர்வகாலத்துக் கோதண்டம்முதலிய கொடியதண்டனைகளெல்லாம் அநேகமாய் அடக்கப்பட்டிருந்தாலும், கோபமும் கொடுமையும் அதிகமாய் அடங்கவில்லை. இப்படிப் பலவாறிருப்பதனால், பிள்ளைகள் அடங்கி யொழுகவேண்டிய வழி செம்மையாய்த்தெரியாமலே பெரியோராவார்களானால், அதைக்கண்டு நாம் ஆச்சரியப்படுவானேன்? சில பிள்ளைகளுக்குச் சரிஇன்னது தப்பு இன்னதென்பதுகூடச் செம்மையாய்த் தெரிவதில்லை. தற்செயலாய் அவரவர் புத்திக்குத் தோன்றியபடி ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான அபிப்பிராயமுண்டாகின்றது. வித்தியாசாலையில் உயர்ந்த பாடங்கள் படிக்கும்போதும் இப்படியே. பின்பு தானே சுதந்திரமாய் உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய வியாபாரங்களை நடத்திக்கொண்டு போகவேண்டிய நாள் வந்தால் அப்போது வெகு வருத்தமுண்டாகின்றது. சிறந்த துணிவும் ஏதோ ஒரு கொள்கையில் நல்ல பிடிமானமுள்ள சிலர்மட்டும் செம்மையாய்க் காரியங்களை நடத்திக்கொண்டுபோகிறார்கள். மற்றவர்கள் ஒரு வழியுந்தெரியாமல் தவிக்கிறார்கள்.

இத்தேசம் முன்போலிராமல் இப்போது வெகுவாய்ச் சீர்ப்படுத்தப்பட்டிருந்தும், சிறந்த நீதிபோதனைமட்டும் பிள்ளைகளுக்கு மிகவும் அருமையாயிருக்கின்றது. இனி இத்தேசத்துப் பெண்பிள்ளைகளெல்லாம் தக்கபடி நன்றாய்க் கற்பிக்கப்பட்டுப் பிள்ளைகளுக்கெல்லாம் புத்திதெரியாமலிருக்கையிலேயே விவாஹம் செய்வது நிறுத்தப்படுங்காலம் வரும்போது இதுவும் சீர்ப்படுமெனத் தோன்றுகின்றது. அதற்கு இடையிலேயே பிள்ளைகளுக்குப் பலவித நீதிகளும், ஜீவகாலத்தில் அவர்கள் சமுசாரத்தை நடத்தவேண்டிய விதமும், யுக்தாயுக்தங்களைப் பகுத்தறியுந்திறமையும், இவைமுதலியவையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாய்க் கற்பிக்கப்பட்டுவந்தாலும் வரலாம்.

இச்சிறந்தவிஷயங்களையெல்லாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் வழி எப்படியெனில், நாமே வருத்தி அவர்களை ஒரு வழியில் திருப்பாமல், பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே நியாயங்களையும் நன்மை தீமைகளையும் கடமைகளையும் அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனதை நாம் பண்படுத்திவிடவேண்டும். தத்துவ விசாரங்களும் ஆத்துமவிசாரங்களும் செய்வதிற் பயனில்லை. யாவரிடத்திலும் அனுதாபமுடையவர்களாயிருப்பது, அதாவது பிறர் நம்மிடத்தில் எவ்விதமாய் நடக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அவ்விதமாகவே நாம் பிறரிடத்தில் நடப்பது நமது கடமை என்பதை முதலில் பிள்ளைகளுக்குக் கற்பித்து, பின்பு அதைக்கொண்டு நல்வழியில் நடப்பதற்குவேண்டிய பல நற்கு

ணங்களையும் கற்பிக்கவேண்டும். தருமம், தயை, ஈவு, இரக்கம், உண்மை, அடக்கம், அன்பு, உழைப்பு, ஆட்சி, ஆண்மைத்திறம் முதலிய உலகவாழ்க்கைக்குவேண்டிய பல நற்குணங்களும், கர்வம், கொடுமை, பொறாமை, கள்ளம், கபடம், மோசம், பெருமிதச்செலவு முதலிய பல தீக்குணங்களும் ஆகிய இவற்றையெல்லாம் தெளிவாய்த் தெரிவிக்கவேண்டும். இக்குணங்களையும் இவற்றால் விளையும் குணதோஷங்களையும் நாமே எடுத்துக்காட்டுவதைவிட, அவரவருடைய அனுபவத்தையும் புத்திநுட்பத்தையும் சாமர்த்தியத்தையுங்கொண்டு பிள்ளைகள் தங்களுக்குத் தாங்களே தக்க உதாரணத்துடன் அக்குணங்களின் நன்மைதீமைகளை எடுத்துக்காட்டும்படிச் செய்தால், தற்காலத்தில் அதனால் அப்பிள்ளைகளுக்கு மிக்க உற்சாகமுண்டாவதோடுகூட, அவ்விஷயங்களெல்லாம் அவர்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்துபோம். இப்படி அவற்றை ஒருதரம் எடுத்துக்காட்டுவது போதாது; ஒன்றுமாற்றியொன்றாய்ப் பலதினங்களில் பல முன்னோர்களுடைய சரித்திரங்களையும் பிரப்ஞசத்திலுள்ள பல நியாயங்களையும் உதாரணமாகக் காட்டிப் பலவாறு போதிப்பிக்கவேண்டும்; அப்போதுதான் அவற்றின் நன்மைதீமைகளெல்லாம் பிள்ளைகளுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்றாய்விளங்கும். பின்பு அவர்கள் தீக்குணங்களைவிட நற்குணங்களையே கையாளத் தலைப்படுவார்கள். இக்குணங்களைப் பிள்ளைகளுக்குப் போதிப்பிக்கும்போது போதகர்களுடைய குணமும் நடத்தையும் அதற்கேற்றபடியே இருக்கவேண்டும். மேலும் போதகர்கள் பிள்ளைகளிடத்தில் அதிக நேசம்பாராட்டிச் சிரிப்பும் விளையாட்டுமாயே நீதிகளைப் போதிப்பார்களானால், அப்போது அவை மிகவும் உறுதியாகப் பிள்ளைகளின் மனதில் பதியும். இவற்றோடுகூடப் பிள்ளைகளை அடக்கியாளுந்திறமை உபாத்தியாயர்களுக்கு அவசியமானது.

இவ்விதமாக விதிகளைப் பிள்ளைகளின் மனதில் பதியச்செய்ய உதாரணங்கள் இன்றியமையாதிருப்பதுபோல், உதாரணங்களிலுள்ள விஷயங்களைத் தெளிவாக்க விதிகளும் தக்கபடி சேர்ந்திருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் முக்கியமாய் உபாத்தியாயர்களுடைய சாமர்த்தியம் அவசியமானது. பிள்ளைகளுடைய தேர்ச்சிக்குவேண்டிய பலவழிகளையும் நன்றாய் ஆய்ந்தோய்ந்துபார்த்து உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பார்களானால், அப்போது பிள்ளைகள் உலகத்தில் நல்லவர்களென்று பேர்பெற்றுத் தங்கள் வாழ்நாளைச் செம்மையாய்ப்போக்கத் திறமையுடையவர்களாவார்கள்.

சிறுவர்க்கான கதை.

பொன்மயிர் அரக்கன்.

முற்காலத்திலே ஒரு எளிய மனிதனுக்குப் பிள்ளை ஒன்று பிறந்தது. அந்தப் பிள்ளை பிறக்கும்போதே சிரசில் கிரீடம் தரித்துக் கொண்டுபிறந்ததனால், இவன் பதினைந்தாம்வயதில் அரசன்மகளைக் கலியாணம்செய்துகொண்டு மகாராஜாவாகப்போகிறானென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க ஒருநாள் தற்செயலாய் அத்தேசத்தரசன் ஒருவர்க்குந்தெரியாமல் அவ்வூருக்கு வந்தான். அவ்வூரில் மிகவும் அதிசயமான அந்தப் பிள்ளையின் செய்தியைக்கேட்டு அவன், இவ்வெளியபிள்ளையா நம் குழந்தைக்குக் கணவனாகிறதென்று மிகவும் மனங்கலங்கி, கொடிய நினைவுடனே அந்தப் பிள்ளையின் தாய்தந்தையர்களிடம்சென்று, அந்தக் குழந்தையைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அதற்கு அவர்கள் முதலில் உடன்படவில்லை. ஆயினும் அவன் அப்பிள்ளைக்குப் பதில் வேண்டியபொருள் கொடுப்பதாய்ச்சொல்லி நயவஞ்சகமாய்ப்பேசி வேண்டவே, அவர்கள் பொருளாசைகொண்டு, இந்தப் பிள்ளை நல்ல அதிர்ஷ்டசாலியாகையால் எங்கேபோனாலும் இவனுக்கு நன்மையே உண்டாகுமென்று நினைத்து, அப்பிள்ளையை அரசன்கையில் கொடுத்துவிட்டார்கள். அரசன் அந்தக் குழந்தையை வாங்கி ஒரு பெட்டியிலேபோட்டுப் பூட்டிக்கொண்டு நடுக்கடலிலேபோய் நம் பெண்ணைப் பிடித்தபீடை இதனோடு நீங்கிற்றென்று சொல்லி அதைக் கடலிலே தள்ளிவிட்டான்.

ஆயினும் அந்தப் பெட்டி அப்படியே அமிழ்ந்துபோகவில்லை; ஒரு துளி தண்ணீரும் அதற்குள் நுழையவில்லை. அந்தப் பெட்டி ஒரு படகுபோல் மிதந்துகொண்டேபோய், பட்டணத்துக்கு இரண்டுமைல்தூரம் அப்பாலிருந்த ஒரு யந்திரத்தண்டையில் கரை சேர்ந்தது. அவ்யந்திரத்தை ஓட்டிக்கொண்டிருந்த பிள்ளைகள் அதைக்கண்டு யஜமானனோடுசொல்ல, அவன் அதில் ஒரு பெருநிதி இருக்கிறதென்றெண்ணிப் பெருமையாய் அப்பெட்டியைத் திறந்தான். அதில் மிகவும் அழகிய குழந்தையொன்று சிரித்து விளையாடிக்கொண்டிருக்கக்கண்டு, சுவாமிதான் இக்குழந்தையை நமக்குக் கொடுத்தாரென்று சொல்லி, வெகு சந்தோஷமாய்த் தானே அக்குழந்தையைத் தன் சொந்தப்பிள்ளைபோலவே வளர்த்துவைத்துக் கொண்டிருந்தான். அந்தக் குழந்தையும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வெகு நன்றாக வளர்ந்துகொண்டிருந்தது.

அப்படியிருக்கச் சில வருஷங்களுக்குப்பிறகு ஒருநாள் எங்கேயோ காரியமாய்ப் போய்க்கொண்டிருந்த அவ்வரசன் அவ்யந்திரத்தண்டை மழைக்கு ஒதுங்கவந்தான். அங்கே அந்தச் சிறுவனைப்பார்த்து இப்பிள்ளை யாரென்று கேட்க, அங்கிருந்தவர்கள், பதினைந்துவருஷத்துக்குமுன்னே கடலில் ஒரு பெட்டி மிதந்துகொண்டு வந்தது; அதற்குள்ளிப்பிள்ளை இருந்தது; நாங்கள் எடுத்து வளர்க்கிறோமென்றார்கள். அதைக் கேட்டவுடனே அரசன், நாம் கடலிலே தள்ளிவிட்ட பிள்ளைதான் இவனென்று தெரிந்துகொண்டு அவர்களைப்பார்த்து, இந்தப் பிள்ளையைப்பார்க்க எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கின்றது; ராணியிடம் இக்கடிதம் கொண்டுகொடுக்க இப்பிள்ளையைச் சற்றே அனுப்புவீர்களானால் உங்களுக்கு ஐந்துவராகன் கொடுக்கிறேனென்று சொன்னான். அதற்கு அவர்கள் சம்மதிக்கவே அரசன், நான் வருவதற்குமுன்னமே இக்கடிதம் கொண்டுவருகிற பிள்ளையைக் கொன்று புதைத்துவிடவேண்டுமென்று சொல்லி, தன் ராணிபேருக்கு ஒரு கடிதமெழுதி அச்சிறுவன்கையிற் கொடுத்தனுப்பினான்.

அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டுபோன சிறுவன் வழிதப்பிப் பொழுதுபோகிறதருணத்தில் ஒரு பயங்கரமான காட்டண்டைபோய்ச் சேர்ந்தான். அக்காட்டுநடுவே வெகுதூரத்தில் விளக்கொளி ஒன்றைக்கண்டு அதை நோக்கிச்செல்ல, அங்கே ஒரு குடிசையும் அதனுள் ஒரு கிழவியும் இருக்கக்கண்டான். அந்தக் கிழவி அச்சிறுவனைப் பார்த்தவுடனே, ஐயோ எவனோ இவ்விடத்துக்கு வருகிறானேயென்று அவனிடத்தில் மனமிரங்கி, நீ யார்? இங்கெங்கே வருகிறாயென்று கேட்டாள்.

அதற்கு அச்சிறுவன், நான் இக்கடிதத்தைக் கொடுப்பதற்காக ராணியினிடத்திற்குப் போகிறேன்; இப்பெருங்காட்டில் வழிதப்பிப்போய் இராப்பொழுதை இங்கே போக்கலாமென்று வந்தேனென, அக்கிழவி, ஐயோ! நீ இவ்விடத்திற்குவந்தாயே! இது திருடர்கள் குடியிருக்குமிடமாயிற்றே! அவர்கள் உன்னைக் கண்டால் உடனே கொன்றுவிடுவார்களேயென்றாள். அதைக்கேட்டு அச்சிறுவன், யார்வந்தாலும் வரட்டும்; இவ்விடம்விட்டு நான் அசையமாட்டேன்; நடந்துவந்த வருத்தத்தால் மிகவும் இளைப்பாயிருக்கின்றது என்றுசொல்லி, உடனே அங்கிருந்த ஒரு பெரிய பலகையின்மேல் படுத்துக்கொண்டான்.

அப்படியிருக்கத் திடீரென்று திருடர்களெல்லாரும் வந்து அவனைப்பார்த்து மிகக் கோபங்கொண்டு, யாரிங்கே படுத்திருக்கிறதென்று கிழவியைக் கேட்டார்கள். யாரோ வழிதெரியாமல் வந்துவிட்டவனாம்; ஐயோபாவம் என்று நான்தான் இங்கே வரவழைத்தேன்; ராணிக்குக் கடிதம் கொண்டுபோகிறானாமென்று கிழவி சொல்லக்கேட்டு, அவர்கள் அவன் வைத்திருந்த கடிதத்தைப் பிடுங்

கிப் படித்துப்பார்த்தார்கள். அவனைக் கண்டவுடனே கொன்றுவிடும்படி எழுதியிருந்ததை அறிந்து, அவர்கள்கூட அச்சிறுவனிடத்தில் பரிதாபப்பட்டார்கள். அத்திருடர்களுடைய தலைவன் உடனே அக்கடிதத்தைக் கிழித்தெறிந்து, இம்மனிதன் உன்னிடம் வந்தவுடனே நம்மகளை இவனுக்குக் கலியாணஞ்செய்விக்கவேண்டும்; நான் வருவதற்குமுன்னமே எல்லாக்காரியமும் பூ[illegible]மாய் நிறைவேறியிருக்கவேண்டியதென்று மற்றொரு கடிதமெ[illegible]திவைத்து, அச்சிறுவன் காலையில் எழுந்தவுடனே அக்கடிதத்தை அவன் கையிற்கொடுத்துப் பட்டணம்போக நேர்வழியும் காட்டினார்கள்.

அக்கடிதத்தைப் பார்த்தவுடனே ராணி வெகு சந்தோஷமாய் அவ்வதிர்ஷ்டசாலிக்குத் தம் மகளைக்கொடுத்துக் கலியாணஞ் செய்வித்தாள். அவன் மிக்க அழகனும் வாலிபனுமிருந்ததனால் அம்மகளும் சந்தோஷமாகவே அவனைக் கலியாணஞ்செய்துகொண்டாள். பின்பு சிலநாள்கழித்து அரசன் திரும்பிவந்து பார்த்து, தன் முயற்சியொன்றும் பயன்படாமல் தெய்வச்செயலின்படியே எல்லாம் நடந்துபோனதற்காக மிகவும் ஆச்சரியப்பட்டு, கடிதத்தில் நானொன்று எழுதியிருக்க அதற்கு முழுதும் மாறாக இப்படி நடந்ததேனென்று ராணியைக்கேட்க, அவள் நேராய் அந்தக் கடிதத்தையே கொண்டுவந்துகாட்டினாள். அதைப் பார்த்தவுடனே அரசன் அது தப்புக்கடிதமென்று தெரிந்துகொண்டு, நான் கொடுத்த கடிதத்தை நீ ஏன் இப்படி மாற்றினாயென்று அச்சிறுவனை வெருட்டிக் கேட்டான்.

அதற்கு அவன், அதைப்பற்றி எனக்கு யாதொன்றுந்தெரியாது; அன்றிராத்திரி நான் நடுக்காட்டிலே தங்கியிருந்தேன்; அங்கு ஒருவேளை மாறுடிப்போயிற்றோ என்னவோ என்றுசொல்ல, அரசன் அதிகமாய்க் கோபங்கொண்டு, நீ இப்படியெல்லாம் திருட்டுத்தனஞ்செய்து என் மகளைக் கைக்கொள்ளலாமென்று நினையாதே; ராக்ஷசராஜனுடைய தலையிலிருந்து மூன்று பொன்மயிர் கொண்டுவருகிறவனுக்குத்தான் என் மகள் கிடைப்பாள்; உனக்கு என்மகள் வேண்டுமானால் நீயும் அவற்றைக் கொண்டுவரவேண்டும் என்[illegible] (இவ்விதமாயாவது அவனைத் தொலைத்துவிடவே[illegible]னறெண்ணி அரசன் அப்படிச் சொன்னது.) அதற்கும் அச்சிறுவன் அஞ்சாமல், இதொரு பெரியகாரியமா? இதோபோய்க் கொண்டுவருகிறேனென்றுசொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அவன் போனவழியில் ஒரு பட்டணமிருந்தது. அப்பட்டணத்தில் அவன் நுழைந்தவுடனே அங்கிருந்த காவற்காரன், நீ என்னதொழில் செய்யமாட்டுவாய்; உனக்கு என்னதெரியும் என்று கேட்டான். அதற்கு அவன் எனக்குத் தெரியாததொன்றுமில்லை என, ஆனால் நீ எங்களுக்கு ஒரு உதவிசெய்யவேண்டும்; இத்

தனைநாள் வரையில் ஓயாமல் சாராயம் சுரந்துகொண்டு இப்பட்
டணத்துக் கடைத்தெருவிலிருந்த ஊற்று இப்பொழுது திடீ
ரென்று ஒருதுளி தண்ணீர்கூடச் சுரவாமல் அடைபட்டுப்போ
னது ஏன்? அதைத் தெரிவிக்கவேண்டுகிறேனென்றான். அதற்கு
அவன், அப்படியே ஆகட்டும்; நான் திரும்பிவரும்போது தெரி
யப்படுத்துகிறேனென்றுசொல்லி அவ்விடம் விட்டுப்போயினான்.

போகும்போது வழியிலே மற்றொரு பெரியபட்டணத்தில்
ஒரு காவற்காரன் அவனைக்கண்டு உனக்கு என்னதெரியுமென்று
கேட்டான். எனக்கு எல்லாம் தெரியுமென்று அவன் சொல்லக்
கேட்டு, அந்தக் காவற்காரன், ஆயின், இதுவரையில் இப்பட்ட
ணத்தில் எப்போதும் பொற்பழங்கள்நிறைந்து சாகோபசாகமாய்
வளர்ந்திருந்த பெரிய மாமரமொன்று இப்பொழுது ஒரு பச்சிலை
கூட இல்லாமல் கட்டைமரமாய் நிற்பதேன்? அதைத் தெரிவிக்க
வேண்டுகிறேனென, அச்சிறுவன், நான் திரும்பிவருமளவும் நீ காத்
திருப்பாயானால் தெரிவிக்கிறேன் என்றுசொல்லிப்போனான்.

அங்கே வழியில் பெரிய ஏரி ஒன்று இருந்தது. அதைத்
தாண்டித்தான் அவன் போகவேண்டும். அவ்வேரியிலிருந்த ஒரு
படகோட்டி அச்சிறுவனைப்பார்த்து, நீ என்னவித்தை கற்றிருக்கி
றாயென்று கேட்க, அவன் நான் எல்லாம் கற்றிருக்கிறேனென்று சொ
ல்லக்கேட்டு, நான் எப்போதும் ஓயாமல் இவ்வேரியிலேயே முன்
னும் பின்னுமாய் அல்லாடும்படி நேரிட்டிருக்கிறதே; இதற்குக் கார
ணம் என்னவென்றான். அச்சிறுவன், அப்படியே அதற்குக் காரணம்
சொல்லுகிறேன், நான் திரும்பிவருமளவும் காத்திரு என்று சொல்
லிவிட்டு அவ்வேரியைத் தாண்டினான். தாண்டினவுடனே அரக்
கர்சீமைக்கு வழி அகப்பட்டது. அங்கே ராக்ஷசராஜனுடைய மாளி
கையில் அவன்போய்ப் பார்த்ததருணத்தில் அரக்கன் வெளியே
போயிருந்தான். அவ்வீட்டில் உட்காந்திருந்த ஒரு ராக்ஷசி அச்சி
றுவனை நன்றாய் உற்றுப்பார்த்து, நீ யார்? எங்கே வந்தாய்? உனக்கு
என்னவேண்டுமென்று கேட்க, அவ்வதிர்ஷடச்சிறுவன், உங்க
ளரசனுடைய தலைமயிரினின்றும் மூன்று பொன்மயிர் வேண்டி
வந்தேன்; [illegible] அகப்படாவிட்டால் என் மனையாட்டி எனக்குக்
கிடைக்கமாட்டா[illegible]ன்றான்.

அதைக்கேட்டு அவள், நீ வேண்டுவது வெகு துணிச்சலான
காரியமாயிருக்கிறது; ராக்ஷசன் வரும்போது நீ இங்கே அவன்
எதிரேகூட நிற்கக்கூடாதே; ஆயினும் பயப்படாதே; நீ இங்கேயே
இரு; உன்னைக் காத்துக்கொள்கிறவழி எனக்குத் தெரியும்: உன்னை
ஒரு எறும்பாக மாற்றுகிறேன்; என் ஆடைக்குள் பத்திரமாய்
மறைந்திரு என்றதற்கு அவன், அப்படியே ஆகட்டும்; இன்னும்
மூன்றுசங்கதி எனக்குத் தெரியவேண்டியிருக்கிறது: இதுவரை
யில் ஓயாமல் விசேஷமாய்ச் சாராயம் சுரந்துகொண்டிருந்த ஊற்று

ஒருதுளி தண்ணீர்கூடச் சுரவாமல் திடீரென்று நின்றுபோவானேன்? பொற்பழங்கள் பழுத்துக்கொண்டிருந்த பெரிய மாமரமொன்று பட்டுப்போவானேன்? ஒரு செம்படவன் ஓயாமல் முன்னும் பின்னும் நீரிலேயே அல்லாடிக்கொண்டிருப்பானேன்? என்ருன். அதற்கு அவள், நீ கேட்கிற கேள்விகள் மிகக் கடினமாயிருக்கின்றனவே; ஆயினும் நீ பொறுத்துக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிரு; நான் பொன்மயிர்களைப் பிடுங்கிக்கொண்டே இவைகளைப்பற்றி ராக்ஷசனைக் கேட்கிறேன்; அவன் தகுந்த விடைகொடுப்பான் என்றுசொல்லி அவனை எறும்பாக்கிவைத்துக்கொண்டிருந்தாள்.

பொழுதுபோனதும் ராக்ஷசன் வீட்டுக்குவந்தான். வீட்டுக்குள் நுழைந்ததும்அவன், இதென்ன நாற்புறமும் மனிதமாமிசநாற்றம் வீசுகிறதென்றுசொல்லி, அம்மாளிகையில் மூலைமூலையாய்த் தேடினன்; எங்கும் ஒன்றும் காணப்படவில்லை. அதுகண்டு அவ்வீட்டு ராக்ஷசி, இப்பொழுதுதான் நான் வீட்டுப்பொருள்களையெல்லாம் அங்கங்கே செம்மையாய் ஒழுங்குபடுத்திவைத்தேன்; நீ மறுபடியும் மூலையிலிருப்பதையெல்லாம் முற்றத்திலிழுத்துப்போடுகிருயா? ஓயாமல் மாமிசம் தின்பவனுக்கு அதன் நாற்றம் அடிப்பது ஒரு அதிசயமா? சுகமாய்ப் புசித்துவிட்டுப் படுக்காமல் ஏன் வீண் கலவரப்பட்டுத் தவிக்கிருயென்று சொன்னுள்.

அப்படியே அவன் புசித்துப் படுக்கும்போது அந்த ராக்ஷசி, அவன் தலைமயிரைக் கோதுகிறவள்போல அவன் தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு படுக்கச்செய்தாள். இரண்டொரு நிமிஷத்தில் அவன் நன்ருய்த் தூங்கிப்போனுன். தூங்கிக் குறட்டைவிடத் தொடங்கினதுகண்டு ராக்ஷசி அவன் பொன்மயிர் ஒன்றைப் பிடுங்க, ராக்ஷசன் திடீரென்று விழித்துக்கொண்டு, அப்பா! நீ என்னவேலைசெய்கிருய்; தலைநோவெடுக்கிறதே என்ருன்.

அதற்கு அவள், ஏதோ ஒரு பேய்க்கனவுகண்டு உன் தலைமயிரைப் பிடித்திழுத்தேனென, அதென்ன கனவென்று அவன் கேட்டதற்கு, அவள், கடைத்தெருவிலிருக்கும் சாராய ஊற்று ஒருதுளி தண்ணீர்கூடச் சுரவாமல் அடைந்துபோனதாய்க் கனவு கண்டேன்; அதேன் அப்படியாயிற்றென்ருள். அதற்கு அவன், இது தெரியாதா? அவ்வூற்றின் அடிப்புறத்தில் ஒரு பாறையின் கீழ்ப் பெருந்தவளை ஒன்றிருந்து அதைச் சுரக்கவொட்டாமல் தடுக்கின்றது; அதைக் கொன்றுவிட்டால், உடனே அவ்வூற்று முன்போலப்பெருக ஆரம்பிக்குமென்று சொல்லிவிட்டு மறுபடியும் அப்படியே தூங்கிப்போனுன். ராக்ஷசியும் அவன் தலைமயிரைச் சிக்குவிடுக்கிறவள்போலிருந்தாள்.

அவன் நன்ருய்த் தூங்கி இடிமுழக்கம்போல மறுபடியும் குறட்டைகேட்கத் தொடங்கினவுடனே ராக்ஷசி மற்ருெரு மயிரை இழுத்

தாள். அந்த வலிபொருமல் ராக்ஷசன் நீயேன் இப்படித் தொந்தரைசெய்கிருய் என, ராக்ஷசி, மறுபடியும் ஒரு கனவுகண்டு உன் மயிரைப் பிடித்திழுத்தேன்; ஒரு பட்டணத்தில் பொற்பழங்கள் பழுத்துக்கொண்டிருந்த விருக்ஷமொன்று திடீரென்று கட்டையாய்ப் போனதாகக் கனவுகண்டேன்; அது ஏன் அப்படியாயிற்று என்ருள். அதற்கு அவன், அம்மரத்தின் வேரின்கீழ்ப் பெருச்சாளியொன்று வளைதோண்டி வசித்துக்கொண்டிருக்கிறது; அதனுலேதான் அம்மரம் தளிர்க்கவில்லை; அதைக் கொன்றுவிட்டால் அம்மரம் நன்ருய்த் தழைத்துவளரும் என்றுசொல்லிவிட்டு, இனி என் தூக்கத்துக்குத் தடைசெய்வாயானுல், நான் மிகவும் கொடியனுய் இருப்பேனென்றுசொல்லித் தூங்கிப்போனுன்.

மறுபடியும் ராக்ஷசி மற்ருெரு மயிரைப்பிடுங்க, அவன் வெகுகோபத்துடன் எழுந்து பயங்கரமாய் அவளை விழித்துப்பார்த்து, நான் எத்தனைதரம் சொன்னுலும் நீயேன் இப்படி என்னை வருத்துகிருயென, அவள், கனவுகாண்பதைத்தடுக்க எவராலாகுமென்று சொல்லி, அவனைச் சமாதானப்படுத்தினுள். அதென்ன கனவென்று அவன் அதிக ஆவலாய்க்கேட்க, அவள், ஒரு ஏரியில் செம்படவன் ஒருவன் கரைசேரமாட்டாமல் எப்போதும் முன்னும் பின்னுமாய் நீரிலேயே தவித்துக்கொண்டிருக்கக்கண்டேன்; அதேன் அப்படியென்ருள். ஓ! இதொரு ஆச்சரியமா! வேறு யாராவது அவ்வழியாய் அந்தத் தடாகத்தைத் தாண்டவருகிறவனுடைய கையில் அந்தச் செம்படவன் துடுப்பைக் கொடுத்துவிடுவானுனல், அவன் உடனே கரையேறிப்போய்விடலாம்; அவனுக்குப்பதில் அவ்வழிப்போக்கனே அவ்வேரியில் தத்தளித்துக்கொண்டிருப்பான் என்றுசொல்லிவிட்டுத் தூங்கிப்போயினுன்.

மூன்று பொன்மயிர்களும் கிடைத்து மூன்று கேள்விகளுக்கும் தக்க விடைகிடைக்கவே, பின்பு அவள் அவனை வருத்தவில்லை. காலையில் ராக்ஷசன் எழுந்து வெளியேபோனதும் அந்த ராக்ஷசி எறும்பாக்கிவைத்த சிறுவனை மறுபடியும் மனிதனுக்கி, இதோ நீ வேண்டிய மூன்று மயிரென்றுசொல்லி, அந்த மூன்று பொன் மயிரை அவன் கையிற்கொடுத்து, உன் மூன்று கேள்விகளுக்கும் அவன் சொன்ன சமாதானங்களைக் கேட்டாயா என்ன, அச்சிறுவன், கேட்டேன்; நன்ருய்த் தெரிந்தது என்றுசொல்லி, அந்தப் பேருதவிசெய்ததற்காக அவ்வரக்கியை வந்தனஞ்செய்து அவளிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டான்.

அத்தேசமெல்லாம் கடந்து செம்படவன் படகோட்டிக்கொண்டிருந்த ஏரியண்டைபோய்ச்சேர்ந்து அதைத் தாண்டினதும் அச்சிறுவன், இவ்வழியாய் இன்னும் எவனுவது இந்தத் தடாகத்தைத் தாண்டவருவானுனல் அவன் கையில் நீ இந்தத் துடுப்பைக் கொடுத்துவிடு; உடனே நீ கரைசேர்வாய்; உனக்குப் பதில் அந்த

மனிதன் இவ்வேரியில் அகப்பட்டுக்கொள்வானென்று சொல்லி விட்டு, பெரிய மாமொன்று பட்டுப்போயிருந்த பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

அப்பட்டணம் சேர்ந்ததும் அச்சிறுவன், எப்போது நமக்கு இம் மாத்தின்செய்தி தெரியப்போகிறதென்று காத்துக்கொண்டிருந்த காவற்காரனைக்கண்டு, பட்டுப்போன பெரிய மாமரத்தின்கீழிருக்கின்ற பெருச்சாளியைக் கொன்றுவிடுவீர்களானால், அது உடனே நன்றாய்த்தளிர்த்துத் தழைத்து முன்போலவே பொற்பழங்கள் பழுக்க ஆரம்பிக்கும் என்றுசொன்னான். அதைக்கேட்டு அவன் வெகு சந்தோஷப்பட்டு, அச்சிறுவன்செய்த பேருதவிக்காக அவனுக்கு வந்தனஞ்செய்து, இரண்டு ஒட்டைகளின்மேல் வேண்டிய பொருள் பரிசாகக்கொடுத்தனுப்பினான். அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ஊற்று உலர்ந்துபோயிருந்த பட்டணத்துவழியாய்ப் போகையில், அப்பட்டணத்ததிகாரி அச்சிறுவனைக்கண்டு, நமது ஊற்று உலர்ந்து போனதற்குக் காரணஞ்சொல்லவில்லையே என, அவன், அவ்வரக்கன் சொன்னபடியே, அவ்வூற்றின் அடிப்பாறையின்கீழ்ப் பெரிய தவளையொன்று இருந்து ஊற்றைச் சுரக்கவொட்டாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றது; அதைக் கண்டுபிடித்துக் கொன்றுவிடுவீர்களானால், உடனே சாராயம் நன்றாய்ச் சுரந்துவரும் என்றுசொல்ல, அதைக்கேட்டுப் பேரானந்தமடைந்து அப்பட்டணத்தாரும் அவனுக்கு விசேஷ வெகுமதிசெய்தார்கள்.

அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு அச்செல்வச் சிறுவன் மிகப் பெருமையாய்த் தன் மாமன் பட்டணத்திற்குச் சென்றான். அவன் போனவிடமெல்லாம் ஜயம்பெற்றுச் சிறப்பாய் வந்ததைக் கண்டு அவனுடைய மனைவி மிக்க மகிழ்ச்சியடைந்தாள். பின்பு அச்சிறுவன் தான் வருந்திக் கொண்டுவந்த அரக்கன்தலைப் பொன் மயிர் மூன்றையும் தன் மாமன்கையிற் கொண்டுகொடுக்க, அவன் அதையும்பார்த்து அவன் கொண்டுவந்த அளவற்ற பொருள்களையும் பார்க்கவே, தன் மருமகனுக்குச் சரியான சூரன் வேறொருவனுமில்லையென்று மிகவும் சந்தோஷமாய் அவனைக்கட்டி முத்தமிட்டுக்கொண்டு, குழந்தாய்! உன் திறமையைக்கண்டு எனக்கு வெகு சந்தோஷமாகின்றது; இனி நீ என் மருமகன்தான்; இப்பொன் மயிரும் பொருள்களும் உனக்குக் கிடைத்தவிதம் எப்படியென்றுகேட்டான்.

அதற்கு அச்சிறுவன், வெகுதூரத்துக்கப்பால் ஒரு பெரிய தடாகத்துக்கு அக்கரையில் மணற்குன்றுகள்போல் இவை குன்று குன்றாய்க் குவிந்திருக்கின்றன; அங்கிருந்து கொண்டுவந்தேனென்றான். அதுகேட்டு அவ்வரசன் பேராசைகொண்டு, நானும் அவ்விடம்போய்ப் பொருள் கொண்டுவரக்கூடாதோ என, அச்சிறுவன், சுகமாய்ப் போய்க் கொண்டுவரலாம்; அந்தத் தடாகத்தில்

ஒரு படகோட்டியிருக்கிறான்; அவனை வேண்டிக்கொண்டால் அவன் உங்களை அக்கரைசேர்ப்பான்; அங்கிருந்து உங்களுக்குத் தேவையானவளவு பொருள் கொண்டுவரலாமென்றான். அந்தக் கிழ வரசன் பேராசைகொண்டு, உடனே புறப்பட்டு வெகுவேகமாய்ச் சென்றான். அந்தத் தடாகத்தண்டைபோய்ச் சேர்ந்ததும், அதைத் தாண்டுவிக்கும்படி அங்கிருந்த படகோட்டியை வேண்ட, அவன் வெகு சந்தோஷமாய்வந்து இவனைப் படகிலேற்றிக்கொண்டான். எதிர்ப்புறம்போய்ச்சேர்ந்ததும் அந்தப் படகோட்டி துடுப்பை அவ்வரசன்கையிற் கொடுத்துவிட்டுக் குதித்தோடிப்போயினான். அவ்வரசன் கரைசேரமாட்டாமல் அச்செம்படவனுக்குப் பதில் தானே அவ்வாற்றில் தவித்துக்கொண்டிருந்தான். பின்பு அச்செல் வச்சிறுவன் தானே அப்பட்டணத்துக்கு அரசனாகி வெகுகாலம் க்ஷேமமாக வாழ்ந்துகொண்டிருந்தான்.

சமாசாரம்.

பரோதாநகரத்தில் நடக்கப்போகிற கலியாண மகோற்சவம்.—வருகிற 1880–ஆ ஜனவரிமீ பரோதாநகரத்து இளவரசரான மகாகனம் பொருந்திய ஜயஜீராவு கிக்வாருக்குக் கலியாணமகோற்சவம் நடக்கப் போகின்றதாம். கலியாணப்பெண் தஞ்சாவூர் இளவரசியாம். ஹோல்கார், ஸர் ஸாலர்ஜங் முதலான சுதேசப் பிரபுக்களையெல்லாம் அந்தக் கலியாண மகோற்சவத்திற்கு வரவழைப்பதாக நிச்சயித்திருக்கிறார்கள். அக்காலத்தில் சேரப்போகிற மகா சபைக்கு ஏற்றவண்ணமாய்ச் சிறந்த சபாமண்டபமொன்று கட்டப்பட்டு முடிவுபெறுகின்றது. பீபில்ஸ்பார்க்கு என்னும் இச்சென்னைச் சிங்காரத்தோட்டத்தில் இப்போது போட்டுப் பரீக்ஷைபார்க்கிறார்களே, இத்தன்மையான மின்னொளிவிளக்குகள் அந்தக் கலியாண தினங்களில் பரோதாநகரம் முழுதும் போட்டு அலங்கரிக்கப் போகிறார்களாம். தாராபாய் என்னும் அப்பட்டணத்து ராஜகுமாரத்திக்கும் அப்போது கலியாணம் நடக்கப்போகிறதாய்ச் சொல்லுகிறார்கள்.

ரம்பாவிலிருந்துவந்த நற்செய்தி.—ரம்பாவில் சண்டை ஓய்ந்து இப்போது அமைதியாயிருக்கின்றது. அத்தேசத்து ஜனங்களுக்குத் தலைவனான சந்திரஜயன் என்பவன் சரீரசவுக்கியம் குறைந்து ஆறுபேரைமாத்திரம் கூட்டிக்கொண்டு ஓடிப்போயினான். சீக்கிரமே அவனைப் பிடிக்க முயன்றிருக்கிறார்கள். அவ்விடத்திற்குப்போன சேனையெல்லாம் திரும்புகிற சமயந்தான்.

ஒலிகாட்டிக்கருவி.—பெல் என்பவர் ஏற்படுத்திய ஒலிகாட்டிக்கருவியைப்பற்றி முன் ஒரு சஞ்சிகையில் சொன்னோமே. இப்போது அமெரிக்காதேசத்தில் பலவிடங்களில் பல கையொப்பக்காரர்கள் ஏற்பட்டு அதேவிதமாய் ஒலிகாட்டிக்கருவிகள்செய்து பேச்சினாலேயே தூரதேசங்களுக்குச் செய்திதெரிவித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

ஒருஅதிசயம்.—நான்கு கையும் நான்கு காலும் இரண்டு தலையுமாய் உடம்புமட்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு இரட்டைப்பெண்குழந்தை ஒன்று இப்பொழுது பம்பாயில் பிறந்திருக்கின்றது; அதை ஒரு வினோதமாய்வைத்து யாவருக்கும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆப்கனிஸ்தானத்துச் சமாதானமும், கலகம் மறுக்களித்ததும்.—ஆப்கனிஸ்தானத்துச்சண்டை சமாதானமாகி, உடன்படிக்கையும் சென்ற மேமீ 26உ கையெழுத்தாகி நிறைவேறிற்று. யாகூப்கான் நமது துரைத்தனத்தாருடைய நிபந்தனைகளுக்கெல்லாம் உடன்பட்டு, வர்த்தகவியாபாரங்களுக்கும், துரைத்தனவிஷயத்தில் யுக்திஆலோசனை கேட்பதற்கும் அனுமதி கொடுத்திருந்தார். சென்ற ஜூலைமீ 24உ மேஜர் கவக்னெரி என்பவர் ஸ்தானாதிபதியாகக் காபூலுக்குச் சென்றார். அங்கே மிகவும் சிறப்பாக அவர்க்கு மரியாதையும் நடத்தப்பட்டது. பட்டணத்திலிருந்து நான்குமைல்தூரம் எதிர்கொண்டுவந்து அவரை கஜதுரகபதாதியென்னும் மூவகைச்சேனைகளோடு ராஜவாத்தியம் முழங்க மிகவும் பெருமையாய் அழைத்துக்கொண்டுபோய், பட்டணத்துள் பிரவேசித்ததும் மங்களமாகப் பதினேழுவெடி தீர்த்தார்கள்.

அன்று மாலை ஆறுமணிக்கு மேஜர் கவக்னெரி தக்க பிருதோடு அமீரைப்போய்க் கண்டு கவர்னர் ஜனரல் அவர்களுடைய திருமுகத்தைக்கொடுக்க, அவரும் அதைப் பெற்றுகொண்டு, கவர்னர் ஜனரல், மகாராணியார், இவர்களுடைய யோகக்ஷேமங்களையும், இன்னும் மற்ற ராஜவமிசத்தாருடைய யோகக்ஷேமங்களையும் வினவி, பிரின்ஸ் இம்பீரியல் இறந்துபோனதற்காக மிகவும் விசனப்பட்டார். பின்பு சில நாள்வரையில் அவருடைய நடத்தைகளெல்லாம் மிகவும் ஒற்றுமையாகவேயிருந்தன. அப்படியிருக்கத் திடீரென்றுஅவ்விடத்துச் சேனைகளெல்லாம் ரோஷமடைந்து நாளது செப்டம்பர்மீ 3உ எதிர்க்கத் தலைப்பட்டன. அதற்குக் காரணமென்னவெனில்; இந்திய துரைத்தனத்து ஸ்தானாதிபதி அவ்விடத்துக்குவந்தது தங்களுக்கு மிக்க நன்மைதானென்று ஆப்கனிஸ்தானத்துச் சேனாவீரர்கள் முதலில் நினைத்திருந்தார்கள். அதன்படியே அவர்கள் தங்களுடைய பாக்கிச் சம்பளங்களையெல்லாம் கொடுப்பிக்கும்படி மேற்படி ஸ்தானாதிபதியைக்கேட்க, அவர் அந்த விஷயத்தில் தான் பிரவேசிப்பதில்லையென்று சொல்லிவிட்டார். பின்பு தங்களுடைய இரண்டுமாதத்துப்பாக்கியைக் கொடுக்கும்படி அமீரைக்கேட்க, அவர் ஒருமாதத்துப் பாக்கிமட்டுந்தான் தற்காலத்தில் கொடுக்கக்கூடுமென்று சொல்லவே, அவர்கள் மிகக் கோபங்கொண்டு யாவரையும் எதிர்த்தார்கள். இந்திய துரைத்தனத்து ஸ்தானாதிபதி இறங்கியிருந்த மாளிகையைச்சுற்றி நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டார்கள். தப்பி வெளியே வருகிறவர்களையெல்லாம் ஆயுதபாணிகளாய்க் கொல்ல ஆரம்பித்தார்கள். அது சங்கதியை அமீருக்கு அறிவிக்க, அவரும் அதற்கு ஒன்றும் பதில்செய்யமாட்டாமலே இருந்துவிட்டார். அதுமுதல் அத்தேசம் அராஜகமாகவே இருக்கின்றது. அவ்விடத்தில் நடந்த துக்கச்செய்தி இந்திய துரைத்தனத்தார்க்குத் தெரிய, அவர்கள் உடனே அந்தப் பெருங்கலகத்தை அடக்கும்படி ஜனரல் ராபர்ட்ஸ் என்பவரை ஆப்கனிஸ்தானத்துக்கு அனுப்பினார்கள். அவர் வழியிலே நேர்ந்த சங்கடங்களையெல்லாம் எதிர்த்துக்கொண்டு காபூலுக்குச்செல்ல, அச்செய்திகேட்டு யாகூப்கான் எதிர்கொண்டுவந்து அவரை அடைக்கலம்புகுந்தார். அதுகண்டு ஜனரல் ராபர்ட்ஸ் என்னசெய்தியென்று கேட்டதற்கு அவர், இந்தத் தொல்லைகளுக்கெல்லாம் இடுகொடுக்க என்னாலாகாது; இந்த அமீர்பட்டமே எனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டாராம். ராபர்ட்ஸ்துரை மறுபடியும் நன்றாய் ஆலோசித்துச்சொல்லும்படி அவரை வேண்ட, அப்போதும் அவர் தன் தீர்மானத்தைமாற்றாமல் அதே உத்தரம் உரைத்தாராம். இப்போது ஐந்துவயதுள்ள அவருடைய குமாரரை அமீராக ஏற்படுத்தப்போகிறதாய்ச் சொல்லிக்கொள்கிறார்கள்; முடிவில் எப்படியாகுமோ தெரியாது.

Printed at the S. P. C. K. Press, 1879.

REINDEER—துருவதேசத்துக் கலைமான்கள்.